# வவுனியாப் பல்கலைக்கழகம்

# ஆண்டறிக்கை

# 2023

வவுனியாப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை 2023, மேற்படி ஆண்டில் பல்கலைக்கழகத்தின் செயலாற்றல் பற்றிய நிறுவனக் கண்ணோட்டத்தை வழங்குகிறது. இவ்வறிக்கை கல்வி அமைச்சு (உயர்கல்வி), பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, வவுனியாப் பல்கலைக்கழகம் ஆகியவற்றால் பரிந்துரைக்கப்பட்ட நியம வடிவங்களையும் வழிகாட்டல்களையும் பின்பற்றுகிறது.

# தூரநோக்கு

“நிலையான மாற்றத்துக்கான அறிவு முன்னேற்றத்திலும் அதன் பரவலிலும் சிறந்து விளங்கும் முன்னணி நிலையமாதல்”

# பணிக்கூற்று

“பிராந்தியத்தினதும் தேசத்தினதும் நிலையான அபிவிருத்திக்கும் பட்டதாரிகளை வலுவூட்டுவதற்குமான முழுமையான கூட்டுழைப்பு, கல்வித்தரம், புத்தாக்கத்துக்கான ஆராய்ச்சி என்பவற்றில் சிறந்து விளங்குதல்”

# இலக்குகள்

- உயர்கல்வியில் சருவதேச அங்கீகாரத்தை அடைய அனைத்துக் கற்கைநெறிகளினதும் தரத்தையும் பொருத்தப்பாட்டையும் மேம்படுத்தல்
- உலகளவில் வேலைவாய்ப்புப் பெற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்
- வளங்களினதும் முறைமைகளினதும் பயனுள்ள, பயனுறுதியான முகாமைத்துவம் மூலம் நல்ல நிருவாகத்தை ஏற்படுத்தல்
- கற்பித்தலுக்கும் கற்றலுக்கும் உகந்த சூழலை உருவாக்குவதற்காகப் பௌதிக, மனித வளங்களை உறுதிப்படுத்தல்
- பிராந்திய, தேசிய வளர்ச்சிக்காக அறிவைப் பரப்புதல்
- பாலினம், இனம், சமயம் போன்ற வேறுபாடுகளுடன் தொடர்புபட்ட விடயங்களில் நீதியையும் சமவுரிமையையும் நிலைநாட்டல்

# நோக்கங்கள்

- கற்கைநெறிகளின் தரத்தையும் மேம்பாட்டையும் உறுதிப்படுத்தல்
- பட்டப்படிப்புகளுக்குத் தேசிய / சருவதேச அங்கீகாரம் பெறல்
- ஆங்கிலமொழி, உளப்பாங்குத்திறன்கள், தகவல் தொழினுட்பம், முகாமைத்துவத்திறன்கள் ஆகியவற்றில் மாணவர்களின் திறமையை மேம்படுத்தல்
- எல்லாப் பட்டப்படிப்புகளிலும் மாணவர்களை மையப்படுத்திய, கலப்புக் கற்றலையும் விளைவு அடிப்படையிலான கல்வி முறைகளையும் மேம்படுத்தல்
- முகாமைத்துவத் தகவல் முறைமையின் செயற்படுத்துகையை உறுதிப்படுத்தல்
- ஊழியர்களின் திறமையை அதிகரித்தல்
- அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளையும் மனித வளங்களையும் ஒழுங்குபடுத்துவதை உறுதிப்படுத்துதல்
- அனைத்து ஊழியர்களும் மாணவர்களும் எண்மான, இலத்திரனியல் வளங்களைப் பயன்படுத்தும் தன்மையை உருவாக்கல்
- தரமான ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கான ஆராய்ச்சி மனப்பான்மையையும் ஊக்கத்தையும் ஏற்படுத்தல்
- தேசிய மற்றும் சருவதேச மாநாடுகளை ஏற்பாடு செய்தல்
- பாலினம், மொழி, இனம், சமயம் ஆகிய வேறுபாடின்றி சம வாய்ப்புகளை உறுதிப்படுத்தல்
- மாணவர்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தல்

# விழுமியங்கள்

- மேன்மை: நாம் எமது ஊழியர்களினதும் மாணவர்களினதும் முழுவாற்றலையும் பயன்படுத்தி உயர்ந்தநிலையை அடைய ஆர்வமாகவுள்ளோம்.
- நேர்மை: நாம் செய்யும் எல்லாவற்றிலும் தொழில்முறையான, ஒழுக்கரீதியான தரங்களைப் பேணுகிறோம்.
- சமவுரிமையும் சமத்துவமும்: நாம் எல்லா நிலைமைகளிலும் சமவுரிமையையும் சமத்துவத்தையும் நிலைநாட்டிப் பன்முகத்தன்மையைப் பேணுகிறோம்.
- பொறுப்புணர்வு: நாம் புத்தாக்க மனநிலையுடனும் ஆக்கத்திறனுடனும் செயற்பட உறுதியளிப்பதுடன் பிராந்திய, தேசிய அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்கிறோம்.
- பரப்புதல்: நாம் கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சி மூலம் அறிவைப் பரப்புகிறோம்.

## துணைவேந்தரின் பார்வையில்



வவுனியாப் பல்கலைக்கழகத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான அறிக்கையைப் பகிர்ந்து கொள்வதில் நான் பெருமிதம் கொள்கிறேன். இந்த ஆண்டு, ஒன்றுபட்ட முயற்சிகள் மூலம், கல்வியில் சிறந்து விளங்குதல், முன்னோடியான ஆராய்ச்சி, சமூக சேவை ஆகிய எமது இலக்குகளை முன்னேற்றி, குறிப்பிடத்தக்க மைல்கற்களை எட்டியுள்ளோம்.

2021 ஆகஸ்ட் 01 இல் இலங்கையின் 17-வது அரச பல்கலைக்கழகமாக மாறியதிலிருந்து, நாங்கள் எமது மூன்று பீடங்களான: பிரயோக விஞ்ஞானம், வியாபாரக் கற்கைகள், தொழில் நுட்பக் கற்கைகள் ஆகியவற்றில் கல்வி மேன்மையை நிலைநிறுத்தியுள்ளோம். மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானம், மருத்துவம் ஆகிய பீடங்களில் தொடங்கி பிராந்திய, தேசிய அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு மேலும் ஐந்து பீடங்களை உருவாக்குவதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

எமது மாணவர்களால் ‘சிறப்பானது’ எனக் கருதப்படும் எமது கல்வி, மிகவும் திறமையான தொழில்களுக்கும் மேலதிகக் கல்விக்கும் வழிவகுக்கிறது. எமது பட்டதாரிகள் அவர்தம் துறைகளில் புத்தாக்கமான பங்களிப்புகளில் குறிப்பிடத்தக்கவர்களாகத் திகழ்வதுடன் தொழிற்றுறைகளுடன் இணைந்த வலுவான வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டங்களாலும் ஆதரிக்கப்படுகின்றார்கள்.

இவ்வாண்டில் தொலைதூர மற்றும் தொடர் கல்வி நிலையத்தை நாங்கள் தொடங்கினோம்; இது வெளிவாரி மாணவர்களுக்குப் பல கற்கைநெறிகளை அறிமுகப்படுத்தியது. எமது ஆராய்ச்சிகள் தேசிய மற்றும் உலகளாவிய மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், எமது கற்பித்தல் முறைகள் வாழ்க்கையை மாற்றி அமைக்கின்றன. நாம் உள்நாட்டு மற்றும் உலகளாவிய சவால்களுக்கேற்ப எமது அணுகுமுறைகளை மேம்படுத்தி முக்கிய பங்குடைமைகளை வளர்த்துள்ளோம். நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் ஏற்படுத்துவதற்காகச் சருவதேச மாநாட்டை நல்லிணக்க நிலையம் வெற்றிகரமாக நடாத்தியது. இது ‘தேசத்தைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக்கொண்ட அறிவு மற்றும் புத்தாக்கத்தின் மூலமான நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி’ என்பதில் கவனஞ்செலுத்துகிறது.

இந்திய, ரஷ்யப் பல்கலைக்கழகங்களுடனான கூட்டுச்செயற்றிட்டங்கள் உட்பட உள்நாட்டு, வெளிநாட்டுப்பங்காளர்களுடன் 25 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளோம். குட்னஸ் அறக்கட்டளையுடன் மேற்கொள்ளப் பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம், வட இலங்கையில் விளையாட்டு அபிவிருத்தியை நோக்கமாகக்கொண்ட பல்லின விளையாட்டு நிலையம் எமது பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டது.

முதன்முறையாக, எமது மாணவர்கள் 2023 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழக விளையாட்டுப்போட்டியில் கலந்துகொண்டு, எல்லே வெற்றிக்கிண்ணப் போட்டியில் வெற்றி பெற்றனர். ரஷ்யாவின் எகடெரின்பேக் நகரில் நடைபெற்ற பல்கலைக்கழகங்களின் சருவதேச விளையாட்டு விழாவில் 43 மாணவர்கள் கலந்துகொண்டு எமது பல்கலைக்கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்கள்.

எமது பல்கலைக்கழக வணிக இணைப்பு நிகழ்ச்சித்திட்டம் தொழில்முனைவோர், தொழிலதிபர்கள், விவசாயிகள் ஆகியோருக்குத் தொடர்ந்து ஆதரவளிக்கிறது. எமது பேரவை உறுப்பினர்களின் அர்ப்பணிப்புக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கின்றேன். எமது பல்கலைக்கழகம் கல்வியில் மென்மேலும் சிறப்புற்று விளங்க எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளோம்.



**பேராசிரியர் த. மங்களேஸ்வரன்**

துணைவேந்தர்

## முக்கிய செயற்பாடுகளும் நிகழ்வுகளும் - 2023

- பல்கலைக்கழகங்களுக்கிடையிலான எல்லே வெற்றிக்கிண்ணப்போட்டிகள் பதினான்கு பல்கலைக்கழக அணிகளின் பங்குபற்றலுடன் எமது பல்கலைக்கழகத்தில் நடாத்தப்பட்டன.
- ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த 'த கேற் அறக்கட்டளை மற்றும் ஊடகம், மனித உரிமைகள், சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றுக்கான நிலையத்துடன் நல்லிணக்க நிலையம் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது.
- நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமை பற்றிய முதலாவது சர்வதேச மாநாடு, 'தேசத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் அறிவு மற்றும் புத்தாக்கத்தின் மூலமான நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி' தொடர்பாக கவனம் செலுத்தி நடாத்தப்பட்டது.
- பேரவை உறுப்பினர் டாக்டர் எம். மலரவன் சுகாதார மையத்திற்கு ECG இயந்திரத்தை வழங்கினார்.
- கிராமப்புற வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இளைஞர்களின் தலைமைத்துவத்தை மேம்படுத்துவதற்கு வணிக கற்கைகள் பீடம் UNDP உடன் கூட்டு சேர்ந்தது.
- ரஷ்ய மொழி மற்றும் கலாச்சாரத்திற்கான மையம் ரஷ்யாவின் சுவாஷ் அரச கல்வியியல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து திறக்கப்பட்டது.
- UOV ஒரு ஆங்கில நிகழ்ச்சித்திட்டத்திற்காக MAG உடன் ஒரு பயிற்சி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது.
- தொலைதூர மற்றும் தொடர் கல்விக்கான மையம் நிறுவப்பட்டது.
- "SED Mini Fair" பல்கலைக்கழக வணிக இணைப்பு மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ துறையால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- SK பண்ணை பணிப்பாளர்களுடன் எதிர்கால ஒத்துழைப்பு பற்றிய கலந்துரையாடல்கள் நடைபெற்றன.
- CDCE இல் ஆங்கிலத்தில் உயர் டிப்ளமோ தொடங்கப்பட்டது.
- அரசியலில் பெண்களை வலுவூட்டுவதில் மேம்பட்ட சான்றிதழை அறிமுகப்படுத்தியது.
- வவுனியா ரோஸ்ற்மாஸ்ரேர்ஸ் மற்றும் கவல் கிளப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- பல்தர விளையாட்டு மையத்தை அபிவிருத்தி செய்வதற்காக குட்னஸ் அறக்கட்டளையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.
- ரஷ்யாவின் எகடெரின்பர்க்கில் நடைபெற்ற பல்கலைக்கழக சர்வதேச விளையாட்டு விழாவில் நாற்பத்து மூன்று மாணவர்கள் பங்கேற்றனர்.
- பேராசிரியர் அங்குரன் தத்தா கலாச்சார மையத்தில் ஒத்துழைக்க வருகை தந்தார்.
- UNDP உடன் இணைந்து, இளைஞர் தலைமைத்துவம் மற்றும் சமூக செயல் மாநாடு நடைபெற்றது.
- ஜிம்மின் பிரமாண்ட திறப்பு விழா குட்னஸ் அறக்கட்டளையால் கொண்டாடப்பட்டு ஆதரிக்கப்பட்டது.
- ரஷ்ய மொழி நிகழ்ச்சித்திட்டம் தொடங்கப்பட்டதுடன் சுவாஷ் அரச கல்வியியல் பல்கலைக்கழக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.
- தொழில்நுட்பக் கற்கைகள் பீடம் பரீட்சை தகவல் முறைமையை அறிமுகப்படுத்தியது.
- 4வது பீட வருடாந்த ஆராய்ச்சி அமர்வு "உலகளாவிய நல்வாழ்வுக்கான விஞ்ஞானவியல் கண்டுபிடிப்புக்களை ஆராய்தல்" என்ற தலைப்பில் நடைபெற்றது.
- உள்ளக விளையாட்டு அரங்கம் மற்றும் கூடைப்பந்து மைதானங்கள் திறக்கப்பட்டு. குட்னஸ் அறக்கட்டளை மூலம் ஆதரவளிக்கப்பட்டது.
- இரண்டாவது சர்வதேச ஆராய்ச்சி மாநாடு, "வாழக்கூடிய முயற்சிகள் மற்றும் முன்னுதாரண மாற்றங்களுக்கான ஆராய்ச்சி நோக்கெல்லைகளை மாற்றுதல்" என்ற கருப்பொருளில் நடைபெற்றது.

# உள்ளடக்க அட்டவணை


1 அறிமுகம் ........ 1
- 1.1 பின்னணி ........ 1
- 1.2 நிறுவன வரைபடம் ........ 2
- 1.3 ஆளுகை அதிகாரசபை ........ 3
  - 1.3.1 பேரவை ........ 3
  - 1.3.2 மூதவை ........ 4
  - 1.3.3 ஆளுகைக் குழுக்களின் கூட்டங்கள் ........ 5
- 1.4 மாணவர் சமூகம் ........ 5
- 1.5 மனித வளங்கள் ........ 11
- 1.6 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போதுள்ள பதவியணியினர் ........ 12
- 1.7 கல்விசார் பதவியணியினர் மற்றும் கல்வி உதவி பதவியணியினர் ........ 14
- 1.8 நிர்வாக மற்றும் நிதி பதவியணியினர் ........ 17
- 1.9 கல்விசாரா பதவியணியினர் ........ 18
- 1.10 ஏனைய நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு ........ 18
- 1.11 சமூக விரிவாக்கம் ........ 18

2 மூலோபாய மதிப்பாய்வு ........ 22
- 2.1 ஞறுமுவு பகுப்பாய்வு ........ 22
- 2.2 எதிர்கால செயல்நடவடிக்கைத் திட்டம் ........ 23

3 பீடங்கள், நிலையங்கள் மற்றும் பிரிவுகள் ........ 27
- 3.1 பிரயோக விஞ்ஞான பீடம் ........ 27
- 3.2 வணிகக் கற்கைகள் பீடம் ........ 30
- 3.3 தொழில்நுட்பக் கற்கைகள் பீடம் ........ 32
- 3.4 நூலகம் ........ 34
- 3.5 தர உத்தரவாத நிலையம் ........ 35
- 3.6 பல்கலைக்கழக ஆராய்ச்சி குழு (URC) ........ 37
- 3.7 சுகாதார நிலையம் ........ 38
- 3.8 பதவியணியினர் அபிவிருத்தி நிலையம் ........ 41
- 3.9 சர்வதேச பிரிவு ........ 41
- 3.10 நல்லிணக்க நிலையம் ........ 42
- 3.11 ஊனமுற்ற நபர்களுக்கான ஆதரவு நிலையம் ........ 43
- 3.12 கலாச்சார நிலையம் ........ 43
- 3.13 பல்கலைக்கழக வணிக இணைப்பு (UBL) ........ 44
- 3.14 உடற்கல்வி அலகு ........ 45
- 3.15 தொலைதூர மற்றும் தொடர் கல்விக்கான நிலையம் ........ 46
- 3.16 தொழில் வழிகாட்டல் பிரிவு (CGU) ........ 47
- 3.17 பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்திற்கான நிலையம் (CGEE) ........ 47

4 ஆராய்ச்சி, புதுமை மற்றும் வெளியீடு ........ 48
- 4.1 அறிமுகம் ........ 48
- 4.2 இதழ்கள்.்.. வெளியீடுகள் ........ 48
- 4.3 பிரயோக விஞ்ஞான பீடம் ........ 48
- 4.4 வணிக கற்கைகள் பீடம் ........ 51
- 4.5 தொழில்நுட்ப கற்கைகள் பீடம் ........ 54

5 மூலதன வேலைகள் மற்றும் திட்டமிடல் ........ 55
- 5.1 அறிமுகம் ........ 55
- 5.2 முக்கிய புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகள் ........ 56

6 மாணவர் நலன்புரி ........ 57
- 6.1 அறிமுகம் ........ 57

6.2 பீடங்களின் மாணவர் சங்கங்கள் ........ 57
6.3 நிதி உதவி ........ 57
6.4 மஹாபொல புலமைப்பரிசில்கள் ........ 57
6.5 உதவித்தொகைகள் ........ 57
6.6 பட்டதாரிகளுக்கான விடுதி வசதிகள் ........ 57
7 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு அறிக்கை ........ 58
8 நிலையான அபிவிருத்தி இலக்குகள் ........ 60
9 நிதி அறிக்கைகள் ........ 62
9.1 கண்ணோட்டம் ........ 62
9.2 *நிதிக்கூற்றுகள்* ........ 63
10 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை ........ 82
10.1 அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஆளும் அதிகாரசபையின் அவதானிப்புகள் ........ 87

## அட்டவணைகளின் பட்டியல்

அட்டவணை 1-1 பேரவை……………………………………………………………………………….…3
அட்டவணை 1-2 மூதவை……………………………………………………………………………………4
அட்டவணை 1-3 அதிகாரசபைகளின் கூட்டங்கள்……………………………………………………………5
அட்டவணை 1-4 சித்தியெய்திய மாணவர்களின் விபரங்கள்…………………………………………….….……6
அட்டவணை 1-5 பீடங்களால் நடாத்தப்படும் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்…………………………………6
அட்டவணை 1-6 பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் புதிதாக சேர்ந்தவர்கள் - உள்ளூர் நுழைவு…………..…7
அட்டவணை 1-7 வெவ்வேறு நிலை கற்கையின் அடிப்படையில் மொத்த மாணவர் சேர்க்கை…………………..9
அட்டவணை 1-8 இளங்கலை பட்ட வெளியீடு - உள்வாரி பட்டதாரிகள் 2023…………………………………10
அட்டவணை 1-9 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போதுள்ள பதவியணியினர்……………………12
அட்டவணை 1-10 பீடங்கள் மற்றும் நூலகத்தில் உள்ள கல்வி மற்றும் கல்வி உதவிப் பதவியணியினர்……..15
அட்டவணை 1-11 நிர்வாக மற்றும் நிதி பதவியணியினர்…………………………………………………..……16
அட்டவணை 1-12 கல்விசாரா பதவியணியினர்……………………………………………………….………..17
அட்டவணை 3-1 நோய்களின் ஆண்டு இறுதி பொழிப்பு.......................................................................................38
அட்டவணை 4-1 வெளியீடுகளின் எண்ணிக்கை தேசிய/சர்வதேசம், 2022………………………………………47
அட்டவணை 1-1 முன் கணக்காய்வு நடவடிக்கைகள்…………………………………………………………...59

## வரைபடங்களின் பட்டியல்

வரைபடம் 1-1 நிறுவன வரைபடம் ..........................................................................................................2
வரைபடம் 1-2 சித்தியெய்திய மாணவர்கள்……………..………………………………..……………………..…5
வரைபடம் 1-3 மாணவர் சேர்க்கை………………………………………………………………..…………6
வரைபடம் 1-4 மனித வளம்……………………………………………………………………………………11
வரைபடம் 1-5 ஊழியர் வகைப்படுத்தல் மூலம் மொத்த பல்கலைக்கழக பதவியணியினர் (177)………..…….14
வரைபடம் 1-6 கல்விசார் மற்றும் கல்வி உதவி பதவியணியினர்…………………………………………………14
வரைபடம் 3-1 நோய்களின் ஆண்டு இறுதி பொழிப்பு…………………………………………………………39

## ஒரு பார்வையில் பல்கலைக்கழகம்

இந்த நிறுவனம் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக தேசத்திற்கு உறுதியுடன் சேவை செய்து வருகிறது, பிராந்தியத்தில் மோதல்கள் மற்றும் அமைதி ஊடாக வெற்றிகரமாக பயணிக்கிறது. அதன் குறிப்பிடத்தக்க சாதனைகள் மற்றும் பங்களிப்புக்களின் விளைவாக, 2021 ஆகஸ்ட் 1 இல் வவுனியாப் பல்கலைக்கழக அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டது. வவுனியாப் பல்கலைக்கழகத்திற்கான குறிப்பிட்ட தொடக்க ஆண்டறிக்கை 2022 இல் வெளியிடப்பட்டது, அதன் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது. வெளிப்படைத்தன்மை மற்றும் சிறந்த பாரம்பரியத்தை தொடர்ந்து வவுனியா பல்கலைக்கழகத்தின் 2023 ஆம் ஆண்டிற்காக இரண்டாம் ஆண்டறிக்கையை நாங்கள் தற்போது முன்வைக்கிறோம்,

எமது பல்கலைக்கழகத்தில் மூன்று பீடங்களான: பிரயோக விஞ்ஞான பீடம், வணிக கற்கைகள் பீடம் மற்றும் தொழில்நுட்ப கற்கைகள் பீடம் என்பன உள்ளன. ஒன்றாக, எமது பத்து கல்வித் துறைகள் பதினான்கு பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றன. சுமார் மூவாயிரம் மாணவர்கள் இந்தப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களைப் பின்பற்றுகிறார்கள்.

# 1 அறிமுகம்

## 1.1 பின்னணி

வவுனியா மாவட்டத்தில் மூலோபாய ரீதியாக அமைந்துள்ள வவுனியாப் பல்கலைக்கழகம் 160 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ளது. இலங்கையின் சுற்றளவில் உயர்கல்வியின் கலங்கரை விளக்கமாக மாறுவதற்கான பல்கலைக்கழகத்தின் பரிணாமப் பயணம் முன்னேறி வருகிறது.

தற்போது, பல்கலைக்கழகம் மூன்று பீடங்கள் மற்றும் பத்து துறைகளில் பதினான்கு-பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகிறது. இந்தக் கட்டமைப்பு விரிவான கல்வியை எளிதாக்குகிறதுடன் சமூக நல்லிணக்கம் மற்றும் கலாச்சார பன்முகத்தன்மையை மேம்படுத்துகிறது, இலங்கையின் அனைத்து மூலைகளிலிருந்தும் மாணவர்களை ஈர்க்கிறதுடன் உள்ளடக்கிய மற்றும் புரிந்துகொள்ளும் சமூகத்தை வளர்க்கிறது.

2023 இல், பல்கலைக்கழகம் வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் அதிக தேசிய மற்றும் சர்வதேச வலையமைப்புக்களை உருவாக்கியது. இந்தப் பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட கிராமப்புற இளைஞர்கள் பயன்பெறும் வகையில், பல்கலைக்கழகத்தின் சமூக நலன் சார்ந்த நிகழ்ச்சிநிரலின் ஒரு பகுதியாக புதிய விரிவாக்கல் கற்கைநெறிகள் தொடங்கப்பட்டன. இளங்கலை பட்டதாரிகளின் தலைமைத்துவத்தையும் மென் திறன்களையும் வளர்ப்பதற்கு மாணவர் சங்கங்கள் உருவாக்கப்பட்டன.

வவுனியாப் பல்கலைக்கழகம் ஒரு தேசிய பல்கலைக்கழகமாக அதனது வகிபங்கை ஏற்று, நவீன மற்றும் சர்வதேச நெறிமுறைகளை வளர்த்துக்கொண்டு பிராந்திய அபிவிருத்தியின் தனித்துவமான சவால்களை வெற்றிகொள்வதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளது. அதன் அணுகக்கூடிய இடம் தீவு முழுவதும் மாணவர்கள் மற்றும் பதவியணியினருக்கான ஒரு மையமாக உள்ளது. ஒரு அதிநவீன தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு அதை மேம்படுத்துகிறது, உலகளாவிய வளங்களுக்கான தடையற்ற இணைப்பையும் இயற்கையான ஒருங்கிணைந்த கல்வி அனுபவத்தை ஊக்குவிக்கும் அமைதியான வனச்சூழலையும் உறுதிப்படுத்துகிறது.

புதுமையான, பொருளாதார ரீதியாக நிலையான கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் சமூக சேவை முறைமைகள் மூலம் பல்கலைக்கழகம் அதன் நோக்கங்களை நோக்கி சீராக முன்னேறி வருகிறது.

அதன் மாணவர் மற்றும் பதவியணியினர் சமூகத்தின் பல்வேறு கலாச்சார, இன மற்றும் மத பின்னணிகள் பல்கலைக்கழகத்தை வளப்படுத்துகிறது, சமூக நல்லிணக்கம், உள்ளடக்கம் மற்றும் ஒற்றுமையை மேம்படுத்துகிறது. இந்த துடிப்பான சுற்றுச்சூழல் முறைமை அதன் பீடங்கள் மற்றும் மையங்களில் தடையற்ற மற்றும் உகந்த கற்பித்தல், கற்றல் மற்றும் ஆராய்ச்சி சூழலை வளர்த்துள்ளது.

2023 இல் பல்கலைக்கழகம் CDCE போன்றவற்றை நிறுவுவதன் மூலம் அதன் எல்லையை விரிவுபடுத்தியது. இந்த சேர்த்தல்கள் கல்வி மற்றும் ஆராய்ச்சி வாய்ப்புக்கள், கலாச்சார ஈடுபாடு, நலன் மற்றும் வணிக முயற்சிகளை மேம்படுத்துகின்றன.

பிராந்திய மற்றும் தேசிய அபிவிருத்தி தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் மற்றும் மருத்துவ பீடங்களை அறிமுகப்படுத்துவதற்கு பல்கலைக்கழகம் லட்சியத் திட்டங்களைக் கொண்டுள்ளது.

இந்த விரிவாக்கமானது பரந்த அளவிலான கல்விசார் துறைகள் மற்றும் ஆராய்ச்சி பகுதிகளுக்கு இடமளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

## 1.2 நிறுவன வரைபடம்




வரைபடம் 1-1 நிறுவன வரைபடம்

## 1.3 ஆளுகை அதிகாரசபை

### 1.3.1 பேரவை

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 44 ஆம் பிரிவை பின்பற்றி பல்கலைக்கழக பேரவை நிறுவப்பட்டது, பின்னர் 1985 இன் 07 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் (திருத்த சட்டத்தின் 24 ஆம் பிரிவு மூலம் திருத்தப்பட்டது. 2023 ஆம் ஆண்டு முழுவதும், பேரவை பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

அட்டவணை 1-1 பேரவை

| | | |
|---|---|---|
| **தலைவர்** | பேராசிரியர் ரீ.மங்களேஸ்வரன் | உபவேந்தர் |
| **செயலாளர்** | திரு. என்.ராஜவிசாஹன் | பதிவாளர் |
| **பீடங்களின் பீடாதிபதிகள்** | கலாநிதி (திருமதி) ஜே. நிமலன் | பீடாதிபதி, பிரயோக விஞ்ஞான பீடம் |
| | கலாநிதி வை.நந்தகோபன் | பீடாதிபதி, வணிகக் கற்கைகள் பீடம் |
| | திரு. எஸ். எஸ். எஸ். சுதாஹரன் (2023 யூலை 28 வரை)<br>திரு. வி. செந்தூரன் (2023 யூலை 29 முதல்) | பீடாதிபதி, தொழில்நுட்பக் கற்கைகள் பீடம் |
| **மூதவையின் பிரதிநிதிகள்** | கலாநிதி எஸ். விஜயமோகன் | சிரேஷ்ட விரிவுரையாளர் தர.II, உயிரியல் விஞ்ஞான துறை |
| | பேராசிரியர். ஏ. புஷ்பநாதன் | முகாமைத்துவ பேராசிரியர், தொழில்முனைவு மற்றும் முகாமைத்துவத் துறை |
| **UGC நியமித்த உறுப்பினர்கள்** | பொறியி. ஞானசேன கூனாபினுவல | முன்னாள் மாவட்ட ஆளுநர், லயன்ஸ் கிளப் சர்வதேசம் |
| | கலாநிதி எஸ்.என்.தணிகாசலம்பிள்ளை | ஓய்வுபெற்ற வட மாகாண கல்விப் பணிப்பாளர் |
| | திரு. கே. ஞானசிறி பிரிட்டோ (2023 ஆகஸ்ட் வரை) | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முன்னாள் பதிவாளர் |
| | திருமதி. எஸ். ஜயசூரிய (2023 ஒக்தோபர் முதல்) | கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் நிதியாளர் |
| | பேராசிரியர் காமினி சேனாநாயக்க | பேராசிரியர் எமரிட்டஸ், றுகுணு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் |
| | கலாநிதி எம். மலரவன் | கண் மருத்துவ ஆலோசகர், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை |
| | திரு. பீ.எம். ஹிஷாம் | சட்டத்தரணி/ உறுதிமொழி பிரசித்த நொத்தாரிசு ஆணையாளர் |
| | பொறியி. என். ஸ்ரீஸ்கந்தராஜா | முன்னாள் பணிப்பாளர்/ நீர்ப்பாசனம் |

### 1.3.2 மூதவை

பல்கலைக்கழகத்தின் மூதவை 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 46(2) ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்டது, இது 1985 இன் 7 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் (திருத்த) சட்டத்தை மேலும் திருத்தியது. மூதவை பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டது:

அட்டவணை 1-2 மூதவை

| | |
|---|---|
| **துணைவேந்தர்** | பேராசிரியர் ரீ.மங்களேஸ்வரன் |
| **பீடங்களின் பீடாதிபதிகள்** | |
| பிரயோக விஞ்ஞானம் | கலாநிதி (திருமதி) ஜே. நிமலன் |
| வணிகக் கற்கைகள் | பேராசிரியர் வை. நந்தகோபன் |
| தொழில்நுட்ப கற்கைகள் | திரு. எஸ். எஸ். எஸ். சுதாஹரன் (யூலை 28 வரை) |
| | திரு. வி. செந்தூரன் (யூலை 29 முதல்) |
| **நூலகர்** | திரு. எஸ். சண்முகதாசன் (பதில்) |
| **துறைத் தலைவர்கள்** | |
| உயிரியல் விஞ்ஞான துறை | கலாநிதி எஸ்.விஜயமோகன் |
| பௌதீக விஞ்ஞான துறை | கலாநிதி எஸ். கிருஷாந்த் |
| வணிக பொருளாதார துறை | திருமதி. பி.எம். கொட்வின் பிலிப் (ஒக்தோபர் 07 வரை) |
| | கலாநிதி. என். ரவிந்திரகுமாரன் (ஒக்தோபர் 11 முதல்) |
| ஆங்கில மொழி கற்பித்தல் துறை | கலாநிதி ஜீ.ஜெயசீலன் |
| நிதி மற்றும் கணக்கியல் துறை | கலாநிதி (திருமதி) கே. கலைநாதன் (ஆகஸ்ட் 02 வரை) |
| | திரு. சி. லரோஜன் (ஆகஸ்ட் 03 முதல் ஒக்தோபர் 07 வரை) |
| | கலாநிதி (திருமதி) கே. கலைநாதன் (ஒக்தோபர் 11 முதல்) |
| மனிதவள முகாமைத்துவத் துறை | திரு. எஸ். ஹரிகரன் |
| முகாமைத்துவ மற்றும் தொழில்முனைவு துறை | கலாநிதி. ஏ. ருக்ஷன் (ஆகஸ்ட் 28 வரை) |
| | பேராசிரியர். ஏ. ஜஹூபர் (ஆகஸ்ட் 29 முதல்) |
| சந்தைப்படுத்தல் முகாமைத்துவ துறை | திரு. எஸ். ஏ. ஜூட் லியோன் |
| செயற்திட்ட முகாமைத்துவ துறை | திரு. எஸ். திருஞானசம்பந்தர் (ஒக்தோபர் 07 வரை) |
| | திருமதி. எஸ். மதிவதனி (ஒக்தோபர் 11 முதல்) |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறை | திரு. வி. செந்தூரன் (யூலை 28 வரை) |
| | திரு. வி. வினோகரன் (யூலை 29 முதல்) |
| **பேராசிரியர்கள்** | |
| பிரயோக விஞ்ஞானம் | பேராசிரியர் (திருமதி). ஏ.நந்தகுமாரன் |
| வணிக கற்கைகள் | பேராசிரியர் ஏ.புஷ்பநாதன் |
| உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டமை | |
| பிரயோக விஞ்ஞானம் | கலாநிதி ஆர். நகுலன் |
| | திரு. பீ.யோகராஜா |
| வணிக கற்கைகள் | திரு. ஏ. தயாபரன் |
| | திருமதி. ஜே. எஸ். தேவரூபன் (மே 14 வரை) |
| | திரு. சி. லரோஜன் (மே 15 முதல் ஆகஸ்ட் 02 வரை) |
| | திருமதி. எஸ். மதிவதனி (செப்தெம்பர் 12 முதல் ஒக்தோபர் 10 வரை) |
| தொழில்நுட்ப கற்கைகள் | திருமதி. பி. ருக்ஷனி |
| | திரு. வி. வினோகரன் (யூலை 28 வரை) |
| | திருமதி. பி. பிரேமிஷா (யூலை 29 முதல்) |
| **பதிவாளர்- மூதவையின் செயலாளர்** | திரு. என். ராஜவிசாகன் |

### 1.3.3 ஆளுகைக் குழுக்களின் கூட்டங்கள்

மீளாய்வு காலப்பகுதி முழுவதும் பல்கலைக்கழகத்தில் உள்ள ஆளுகை அதிகாரசபைகள் மற்றும் பல்வேறு குழுக்கள் தவறாமல் கூடின. ஒவ்வொரு ஆளுகை அதிகாரசபை மற்றும் குழுவின் கூட்டங்களின் அதிர்வெண் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது:

அட்டவணை 1-3 அதிகாரசபைகளின் கூட்டங்கள்

| கூட்டங்கள் | வழக்கமான | விசேட |
|---|---|---|
| பேரவை | 12 | |
| மூதவை | 11 | |
| நிதிக் குழு | 12 | 1 |
| விடுமுறை மற்றும் விருதுகள் குழு | 10 | |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு | 4 | 1 |
| பீட சபைகள் | | |
| • பிரயோக விஞ்ஞான பீடம் | 10 | 5 |
| • வணிக கற்கைகள் பீடம் | 9 | 2 |
| • தொழில்நுட்ப கற்கைகள் பீடம் | 10 | 2 |

## 1.4 மாணவர் சமூகம்

2023 இல் பல்கலைக்கழகத்தின் மாணவர் குழுவில் மொத்தம் 2696 நபர்கள் இருந்தனர். இந்த காலப்பகுதியில் பல்கலைக்கழகம் அதன் மூன்று பீடங்களில் 743 புதிய மாணவர்களை வரவேற்றது, ஆங்கில ஊடகத்தில் வழங்கப்படும் 14-பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அவர்களிற்கு வழங்கியது. மேலும், அதே ஆண்டில் 375 மாணவர்கள் தங்கள் பட்டப்படிப்பை பூர்த்திசெய்து பட்டம் பெற்றுள்ளனர்.




படம் 1-2 சித்தியெய்திய மாணவர்கள்

மூன்று பீடங்களில் இருந்து பட்டதாரிகளின் விநியோகம் பின்வருமாறு: பிரயோக விஞ்ஞான் பீடம் 25% பட்டதாரிகளைக் கொண்டுள்ளது. வணிகக் கற்கைகள் பீடம் 57% பட்டதாரிகளுடன் மிகவும் குறிப்பிடத்தக்க விகிதத்தைக் கொண்டுள்ளது, தொழில்நுட்பக் கற்கைகள் பீடம் 18% பட்டதாரிகளை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

அட்டவணை 1-4 சித்தியெய்திய மாணவர்களின் விபரங்கள்

| பீடங்கள் | துறைகள் | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|
| **பிரயோக விஞ்ஞான பீடம்** | பௌதீக விஞ்ஞானம் (AMC மற்றும் IT) | 97 | 90 | 77 |
| | உயிரியல் விஞ்ஞானம் | 19 | 31 | 18 |
| **வணிகக் கற்கைகள் பீடம்** | நிதி மற்றும் கணக்கியல் | 42 | 48 | 76 |
| | மனித வள முகாமைத்துவம் | 12 | 10 | 33 |
| | வணிக பொருளாதாரம் | 24 | 03 | 27 |
| | சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் | 02 | 17 | 09 |
| | செயற்திட்ட முகாமைத்துவம் | 34 | 38 | 52 |
| | முகாமைத்துவம் மற்றும் தொழில்முனைவு | 25 | 18 | -- |
| | BBM பொது | -- | -- | 17 |
| **தொழில்நுட்பக் கற்கைகள் பீடம்** | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | -- | 52 | 66 |
| **மொத்தம்** | | 255 | 307 | 375 |

2021, 2022 மற்றும் 2023 இல் மூன்று பீடங்களுக்குள் உள்ள பல்வேறு துறைகளைச் சேர்ந்த சித்தியெய்திய மாணவர்களின் விபரங்களை அட்டவணை 1 வழங்குகிறது. அனைத்து பீடங்கள் மற்றும் துறைகளில் சித்தியெய்திய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 2021 இல் 255, 2022 இல் 307, மற்றும் 2023 இல் 375 ஆக இருந்தன.

அட்டவணை 1-5 பீடங்களால் நடாத்தப்படும் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

| வளாகம்/ பீடம் | பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் | SLQF நிலை | ஊடகம் |
|---|---|---|---|
| **இளங்கலை பட்டம்** | | | |
| **பிரயோக விஞ்ஞானம்** | தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமானி | 5 | ஆங்கிலம் |
| | தகவல் தொழில்நுட்பத்தில் கௌரவ விஞ்ஞானமானி | 6 | ஆங்கிலம் |
| | விஞ்ஞானமானி (பிரயோக கணிதம் மற்றும் கணனி) | 5 | ஆங்கிலம் |
| | கணனி விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞானமானி | 6 | ஆங்கிலம் |
| | விஞ்ஞானமானி (சுற்றுச்சூழல் விஞ்ஞானம்) | 5 | ஆங்கிலம் |
| | சுற்றுச்சூழல் விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞானமானி | 6 | ஆங்கிலம் |
| **வணிகக் கற்கைகள்** | வணிக முகாமைத்துவமானி | 5 | ஆங்கிலம் |
| | கணக்கியல் மற்றும் நிதியில் கௌரவ வணிக முகாமைத்துவமானி | 6 | ஆங்கிலம் |
| | வணிக பொருளாதாரத்தில் கௌரவ வணிக முகாமைத்துவமானி | 6 | ஆங்கிலம் |
| | மனித வள முகாமைத்துவத்தில் கௌரவ வணிக முகாமைத்துவமானி | 6 | ஆங்கிலம் |
| | சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் கௌரவ வணிக முகாமைத்துவமானி | 6 | ஆங்கிலம் |
| | செயற்திட்ட முகாமைத்துவத்தில் கௌரவ வணிக முகாமைத்துவமானி | 5 | ஆங்கிலம் |
| | செயற்திட்ட முகாமைத்துவத்தில் கௌரவ வணிக முகாமைத்துவமானி | 6 | ஆங்கிலம் |
| **தொழில்நுட்பக் கற்கைகள்** | கௌரவ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பமானி | 6 | ஆங்கிலம் |




வரைபடம் 1-3 மாணவர் சேர்க்கை

மூன்று பீடங்களில் உள்ள 743 மாணவர்களுக்கான பதிவு எண்கள் மற்றும் சதவீதங்களை வரைபடம் விளக்குகிறது. பிரயோக விஞ்ஞான பீடம் 272 மாணவர்களைச் சேர்த்தது, இது மொத்த மாணவர் சேர்க்கையில் ஏறத்தாழ 36.6% ஆகும். வணிகக் கற்கைகள் பீடமானது 316 மாணவர்களைக் கொண்டு, மொத்த மாணவர்களில் 42.5% ஆக உயர்ந்த மாணவர் சேர்க்கையைக் கொண்டிருந்தது. தொழில்நுட்பக் கற்கைகள் பீடம் 155 மாணவர்களைச் சேர்த்தது, இது மொத்த மாணவர் சேர்க்கையில் 20.9% ஆகும். இந்தத் தரவு, எண்கள் மற்றும் சதவீதங்கள் தொடர்பாக பல்வேறு பீடங்களிடையே மாணவர் பங்கீட்டின் தெளிவான ஒப்பீட்டை வழங்குகிறது.

அட்டவணை 1-6 பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் புதிதாக சேர்ந்தவர்கள் - உள்ளூர் நுழைவு

| பீடம் | பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் | சாத்தியமான மாணவர் சேர்க்கை | மாணவர் சேர்க்கை |
|---|---|---|---|
| **பிரயோக விஞ்ஞானம்** | பிரயோக விஞ்ஞானம் (பௌதீக விஞ்ஞானம்) | 117 | 70 |
| | பிரயோக விஞ்ஞானம் (உயிரியல் விஞ்ஞானம்) | 121 | 77 |
| | தகவல் தொழில்நுட்பம் | 143 | 125 |
| **வணிகக் கற்கைகள்** | முகாமைத்துவக் கற்கைகள் (TV) | 216 | 184 |
| | செயற்திட்ட முகாமைத்துவம் | 101 | 93 |
| | வங்கியியல் மற்றும் காப்புறுதி | 50 | 39 |
| **தொழில்நுட்பக் கற்கைகள்** | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 175 | 155 |
| **மொத்த புதிய மாணவர் சேர்க்கை – இளங்கலை பட்டம் – உள்ளூர் நுழைவு** | | **923** | **743** |

தற்போதைய கல்விக் காலப்பகுதிக்கான உள்ளூர் நுழைவு மூலம் பல்வேறு பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் புதிதாக சேருபவர்களின் தரவை அட்டவணை 2 வழங்குகிறது.

பிரயோக விஞ்ஞான பீடத்தில், பிரயோக விஞ்ஞான (பௌதீக விஞ்ஞானம்) நிகழ்ச்சித்திட்டமானது 117 சாத்தியமான மாணவர் சேர்க்கையை கொண்டிருந்த போதிலும் 70 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

பிரயோக விஞ்ஞான (உயிரியல் விஞ்ஞானம்) நிகழ்ச்சித்திட்டத்தில் 121 சாத்தியமான மாணவர் சேர்க்கையில் உண்மையான சேர்க்கை 77 ஆகும். தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டமானது 143 சாத்தியமான மாணவர் சேர்க்கைகளைக் கொண்டு, 125 பேரைப் பதிவுசெய்தது. வணிகக் கற்கைகள் பீடத்தில், முகாமைத்துவக் கற்கைகள் (TV) நிகழ்ச்சித்திட்டமானது 216 சாத்தியமான மாணவர் சேர்க்கையை கொண்டு, 184 பேரை சேர்த்துள்ளது. செயற்திட்ட முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டமானது 101 சாத்தியமான மாணவர் சேர்க்கையை கொண்டு 93 பேரை சேர்த்துள்ளது. வங்கியியல் மற்றும் காப்புறுதி நிகழ்ச்சித்திட்டம் 50 சாத்தியமான மாணவர் சேர்க்கையை கொண்டு 39 பேரை சேர்த்துள்ளது. தொழில்நுட்பக் கற்கைகள் பீடத்தில், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டமானது 175 மாணவர் சேர்க்கையை கொண்டு 155 பேரை சேர்த்துள்ளது.

ஒட்டுமொத்தமாக, அனைத்து பீடங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் 743 உண்மையான மாணவர் சேர்க்கையுடன் மொத்த சாத்தியமான மாணவர் சேர்க்கை 923 ஆக இருந்தது,

அட்டவணை 1-7 வெவ்வேறு நிலை கற்கையின் அடிப்படையில் மொத்த மாணவர் சேர்க்கை

| பீடம் | பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் | 1 (2020/2021) | | 2 (2019/2020) | | 3 (2018/2019) | | 4 (2017/2018) | | மொத்தம் | | கூட்டு மொத் தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | |
| **பிரயோக விஞ்ஞானம்** | பிரயோக விஞ்ஞானம் (பௌதீக விஞ்ஞானம்) | 40 | 30 | 51 | 40 | 45 | 54 | 03 | 14 | 139 | 138 | 277 |
| | பிரயோக விஞ்ஞானம் (உயிரியல் விஞ்ஞானம்) | 16 | 61 | 12 | 66 | 21 | 66 | 14 | 36 | 63 | 229 | 292 |
| | தகவல் தொழில்நுட்பம் | 56 | 69 | 57 | 64 | 46 | 77 | 13 | 15 | 172 | 225 | 397 |
| **வணிகக் கற்கைகள்** | முகாமைத்துவக் கற்கைகள் (TV) | 34 | 150 | 58 | 150 | 54 | 159 | 55 | 79 | 201 | 538 | 739 |
| | செயற்திட்ட முகாமைத்துவம் | 16 | 77 | 23 | 86 | 20 | 76 | 16 | 55 | 75 | 294 | 369 |
| **தொழில்நுட்பக் கற்கைகள்** | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 12 | 27 | -- | -- | -- | -- | -- | -- | 12 | 27 | 39 |
| **கூட்டுமொத்தம்** | | **285** | **458** | **297** | **462** | **311** | **491** | **164** | **228** | **1057** | **1639** | **2696** |

2017/2018 முதல் 2020/2021 வரையிலான கல்வி ஆண்டுகளில் பல்வேறு பீடங்கள் மற்றும் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் வெவ்வேறு நிலை கற்கையின் அடிப்படையில் மொத்த மாணவர் சேர்க்கையை அட்டவணை 3 வழங்குகிறது. தரவு பாலினம் மூலம் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு நிலை மற்றும் பீடங்களுக்கான ஒட்டுமொத்த கூட்டுமொத்தம் மற்றும் பெரிய கூட்டுமொத்தமாக ஒருங்கிணைக்கப்படுகிறது.

பிரயோக விஞ்ஞான பீடத்தில்:

- பிரயோக விஞ்ஞானம் (பௌதீக விஞ்ஞானம்) 139 ஆண்கள் (50.2%) மற்றும் 138 பெண்கள் (49.8%) என மொத்தம் 277 மாணவர்களைக் கொண்டிருந்தது.
- பிரயோக விஞ்ஞானம் (உயிரியல் விஞ்ஞானம்) 63 ஆண்கள் (21.6%) மற்றும் 229 பெண்கள் (78.4%) என மொத்தம் 292 மாணவர்களைக் கொண்டிருந்தது.
- தகவல் தொழில்நுட்பம் 172 ஆண்கள் (43.3%) மற்றும் 225 பெண்கள் (56.7%) என 397 மாணவர்களை கொண்டிருந்தது.

வணிகக் கற்கைகள் பீடத்தில்:

- முகாமைத்துவக் கற்கைகள் (TV) 201 ஆண்கள் (27.2%) மற்றும் 538 பெண்கள் (72.8%) என மொத்தம் 739 மாணவர்களைக் கொண்டிருந்தது.
- செயற்திட்ட முகாமைத்துவம் 75 ஆண்கள் (20.3%) மற்றும் 294 பெண்களை (79.7%) உள்ளடக்கி 369 மாணவர்களை கொண்டிருந்தது.

தொழில்நுட்பக் கற்கைகள் பீடத்தில்:

- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் 12 ஆண்கள் (30.8%) மற்றும் 27 பெண்கள் (69.2%) என மொத்தம் 39 மாணவர்களை கொண்டிருந்தது.

அனைத்து பீடங்கள் மற்றும் நிலைகளுக்கான ஒட்டுமொத்த கூட்டுமொத்தம் 1057 ஆண்கள் (39.2%) மற்றும் 1639 பெண்கள் (60.8%) என 2696 மாணவர்களை கொண்டுள்ளது.

அட்டவணை 1-8 இளங்கலை பட்ட வெளியீடு - உள்வாரி பட்டதாரிகள் 2023

| பீடம் | கற்கை நிகழ்ச்சித்திட்டம் | பட்டதாரிகளின் மொத்த எண்ணிக்கை | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | முதலாம் வகுப்பு | | இரண்டாம் மேல் | | இரண்டாம் கீழ் | | சித்தியெய்தியது | | மொத்தம் | |
| | | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ |
| **பிரயோக விஞ்ஞானம்** | தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமானி | -- | -- | 1 | 2 | 1 | 5 | 3 | 6 | **5** | **13** |
| | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பமானி | -- | -- | -- | -- | -- | -- | 4 | -- | **4** | **--** |
| | தகவல் தொழில்நுட்பத்தில் கௌரவ விஞ்ஞானமானி | 1 | -- | 2 | 5 | -- | 1 | 1 | -- | **4** | **6** |
| | பிரயோக கணிதம் மற்றும் கணனியில் விஞ்ஞானமானி | -- | 1 | -- | 2 | 4 | 7 | 15 | 5 | **19** | **15** |
| | கணனி விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞானமானி | -- | 1 | 4 | 4 | 2 | -- | -- | -- | **6** | **5** |
| | சுற்றுச்சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமானி | -- | -- | -- | -- | -- | -- | 2 | 6 | **2** | **6** |
| | சுற்றுச்சூழல் விஞ்ஞானத்தில் கௌரவ விஞ்ஞானமானி | -- | 3 | -- | 7 | -- | -- | -- | -- | **--** | **10** |
| **வணிகக் கற்கைகள்** | செயற்திட்ட முகாமைத்துவத்தில் வணிக முகாமைத்துவமானி | -- | -- | 1 | -- | -- | 1 | 6 | 2 | **7** | **3** |
| | செயற்திட்ட முகாமைத்துவத்தில் கௌரவ வணிக முகாமைத்துவமானி | -- | 2 | -- | 12 | 4 | 16 | 1 | 7 | **5** | **37** |
| | வணிக முகாமைத்துவமானி | -- | -- | 1 | -- | -- | -- | 4 | 12 | **5** | **12** |
| | சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் கௌரவ வணிக முகாமைத்துவமானி | -- | -- | -- | 1 | 2 | 2 | 1 | 3 | **3** | **6** |
| | கணக்கியல் மற்றும் நிதியில் கௌரவ வணிக முகாமைத்துவமானி | 1 | 2 | 3 | 17 | 2 | 18 | 13 | 20 | **19** | **57** |
| | மனித வள முகாமைத்துவத்தில் கௌரவ வணிக முகாமைத்துவமானி | -- | 1 | 2 | 5 | 2 | 8 | 4 | 11 | **8** | **25** |
| | வணிக பொருளாதாரத்தில் கௌரவ வணிக முகாமைத்துவமானி | -- | -- | -- | 7 | 4 | 4 | 6 | 6 | **10** | **17** |
| **தொழில்நுட்பக் கற்கைகள்** | கௌரவ தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பமானி | -- | -- | 1 | 1 | 3 | 2 | 34 | 15 | **47** | **19** |
| **கூட்டுமொத்தம்** | | **2** | **8** | **15** | **51** | **20** | **48** | **93** | **86** | **144** | **231** |

ஒட்டுமொத்தமாக, அனைத்து பீடங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 2023 இல் 144 ஆண்கள் (38.4%) மற்றும் 231 பெண்கள் (61.6%) உள்ளடங்கலாக மொத்தம் 375 மாணவர்கள் பட்டம் பெற்றுள்ளனர். இப் பங்கீட்டில் முதலாம் வகுப்பில் (2.7%) பத்து மாணவர்களும், இரண்டாம் மேல் வகுப்பில் (17.6%) 66

மாணவர்களும், இரண்டாம் கீழ் வகுப்பில் (18.9%) 71 மாணவர்களும், மற்றும் சித்தியெய்திய (60.8%) 228 மாணவர்களும் உள்ளடங்குகின்றனர். 2023 இளங்கலை பட்ட வெளியீட்டுத் தரவு குறிப்பிடத்தக்க பாலின வேறுபாடுகள் மற்றும் வெவ்வேறு பீடங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் பல்வேறு கல்வி சாதனைகளை வெளிப்படுத்துகிறது. ஒட்டுமொத்தமாக 375 மாணவர்கள் பட்டம் பெற்றனர், இதில் ஆண்களை (38.4%) விட பெண்கள் (61.6%) அதிகமாக உள்ளனர். வணிகக் கற்கைகள் பீடம் அதிக எண்ணிக்கையிலான பட்டதாரிகளைக் கொண்டிருந்தது, குறிப்பாக கணக்கியல் மற்றும் நிதி நிகழ்ச்சித்திட்டத்தில், பெண் பட்டதாரிகளால் ஆதிக்கம் செலுத்தப்பட்டது. பட்டதாரிகளில் கணிசமான பகுதியினர், 60.8% சித்தியெய்தலை பெற்றுள்ளனர், இது உயர் வகைப்படுத்தல்களை அடைந்துகொள்வதில் முன்னேற்றம் தேவை என்பதைக் குறிக்கிறது. அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களிலும் பாலின பிரதிநிதித்துவத்தை சமநிலைப்படுத்தவும் கல்வி செயலாற்றலை மேம்படுத்தவும் இலக்கு தலையீடுகளின் முக்கியத்துவத்தை தரவு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

## 1.5 மனித வளங்கள்

2023 ஆம் ஆண்டு முழுவதும், வவுனியாப் பல்கலைக்கழகம் பத்து துறைகளை உள்ளடக்கிய மூன்று பீடங்களில் அதனது கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்து நடாத்தி வந்தது. 73 கல்விப் பதவியணியினர், 14 நிர்வாகப் பதவியணியினர், 10 கல்வி உதவிப் பதவியணியினர் மற்றும் 78 கல்விசாரா பதவியணி உறுப்பினர்களைக் கொண்ட அர்ப்பணிப்புக் குழுவுடன் பல்கலைக்கழகம் அதன் நோக்கங்களை நோக்கி சீராக முன்னேறியது. வவுனியா வளாகத்திலிருந்து வவுனியா பல்கலைக்கழகத்திற்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்து, நிறுவனத்தின் திறன்களை மேம்படுத்துவதற்காக 240 புதிய பதவிகளை சேர்ப்பதற்கு முன்மொழியப்பட்டது. எனினும், இந்த கோரப்பட்ட பதவிகளில் 16 பதவிகளுக்கு மாத்திரமே அங்கீகாரம் அளிக்கப்பட்டது.




வரைபடம் 1-4 மனித வளம்

வரைபடம் 1-4 நிறுவனத்தில் உள்ள மனித வளங்களின் பிரித்தெடுப்பை வழங்குகிறது, அவை நான்கு குழுக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. கல்விசார் பதவியணியினர் மொத்த மனித வளத்தில் 42% ஐக் கொண்டுள்ளனர், இது கல்வியாளர்களை வலியுறுத்துகிறது. கல்விசாரா பதவியணியினர் மிகப்பெரிய பிரிவை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர், இது 44% ஆகும், இது கல்விசாரா வகிபங்குகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. நிர்வாகப் பதவியணியினர் மொத்தத்தில் 8% ஆகவும், கல்வி உதவிப் பதவியணியினர் 6% ஆகவும் உள்ளனர். இந்த பங்கீடு கல்வி மற்றும் கல்விசாரா பதவியணியினரின் கணிசமான இருப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது, சிறிய விகிதங்கள் நிர்வாக மற்றும் ஆதரவு வகிபங்குகளுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.

## 1.6 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போதுள்ள பதவியணியினர்

அங்கீகரிக்கப்பட்ட 310 பதவியணி நிலைகளில் 175 நிரந்தரமாகவும், 10 தற்காலிகமாகவும் நிரப்பப்பட்டு இருந்ததுடன் 137 வெற்றிடங்களாக உள்ளன. சமீபத்தில் நிறுவப்பட்ட பல்கலைக்கழகமாக, அதன் முழுமையான சேவைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு இந்த வகிபங்குகளை நிரப்புவது ஒரு குறிப்பிடத்தக்க சவாலாக உள்ளது, நிறுவனம் தற்போது அதன் தேவையான பணியாளர் திறனில் 56% இல் இயங்குகிறது.

அட்டவணை 1-9 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போதுள்ள பதவியணியினர்

| சேவை வகை | பதவியணியினர் வகை | சம்பளக் குறியீடு | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | தற்போதுள்ள பதவியணியினர் – நிரந்தரமானது | | | தற்காலிகமானது | | | ஒப்பந்தம் | | | வேலை ஒதுக்கீடு | | | நிரந்தர பதவியணியினர் வெற்றிடங்கள் | உள்ளபடியான பதவியணியினர் வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | | |
| **ஆரம்ப நிலை** | ஆரம்ப தரம் - திறனற்றது | U – PL 1 | 75 | 08 | 04 | 12 | 02 | 01 | 03 | - | - | - | - | - | - | 63 | 60 |
| | ஆரம்ப தரம் - அரை திறன் | U – PL 2 | 13 | 08 | - | 08 | - | - | - | - | - | - | - | - | - | 05 | 05 |
| | ஆரம்ப தரம் - திறனுள்ளது | U – PL 3 | 09 | 08 | - | 08 | 01 | - | 01 | - | - | - | - | - | - | 01 | - |
| **இரண்டாம் நிலை** | முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாதது | U – MN 1 | 55 | 12 | 20 | 32 | - | - | - | - | - | - | - | - | - | 23 | 23 |
| | முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் | U – MT 1 | 12 | 04 | - | 04 | - | 01 | 01 | - | - | - | - | - | - | 08 | 07 |
| | இணை அதிகாரிகள் – பிரிவு 2 | U – MN 2 | 02 | 01 | 01 | 02 | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| | இணை அதிகாரிகள் – பிரிவு 1 | U – MN 3 | 05 | 02 | 02 | 04 | - | - | - | - | - | - | - | - | - | 01 | 01 |
| | பதவியணி உதவியாளர்/ சுப்ரா & சிரேஷ்ட பதவியணி உதவியாளர் | U – MN 4 | 05 | 03 | 02 | 05 | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| | கல்வி ஆதரவு - பிரிவு 2 | U – AS 1 | 08 | 03 | 02 | 05 | 01 | 02 | 03 | - | - | - | - | - | - | 03 | - |

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **மூன்றாம் நிலை** | கனிஷ்ட நிறைவேற்று தரம்/ முகாமையாளர்கள் | U – EX 1 | 13 | 05 | 03 | 08 | - | - | - | - | - | - | - | - | - | 05 | 05 |
| | கல்வி ஆதரவு - பிரிவு 1 | U – AS 2 | 09 | 05 | - | 05 | 02 | - | 02 | - | - | - | - | - | - | 04 | 02 |
| **சிரேஷ்ட நிலை** | மருத்துவ அதிகாரி | U – MO 1 | 01 | 01 | - | 01 | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| | தலைமை மருத்துவ அதிகாரி | U – MO 2 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| | நடுத்தர நிலை நிறைவேற்று தரம் | U – EX 2 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| | நடுத்தர நிலை நிறைவேற்று தரம் | U – EX 2(a) | 06 | 03 | - | 03 | - | - | - | - | - | - | 01 | - | 01 | 03 | 02 |
| | சிரேஷ்ட நிறைவேற்று தரம் | U – EX 3 | 02 | 02 | - | 02 | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| | விரிவுரையாளர் (தகுதிகாண்)/ விரிவுரையாளர்/ சிரேஷ்ட விரிவுரையாளர் | U – AC 3 | 86 | 38 | 34 | 72 | | | | | | | 02 | - | 02 | 14 | 12 |
| | இணை பேராசிரியர்கள் | U – AC 4 | | | | | | | | | | | | | | | |
| | பேராசிரியர்கள்/ சிரேஷ்ட பேராசிரியர்கள் | U – AC 5 | | | | | | | | | | | | | | | |
| | பேராசிரியர்கள் | U – AC 5 | 05 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 05 | 05 |
| | துணைவேந்தர் | U – AC 5 | 01 | 01 | - | 01 | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| | சிரேஷ்ட உதவி நூலகர்/ உதவி நூலகர் | U – AC 3 | 02 | 01 | - | 01 | - | - | - | - | - | - | - | - | - | 01 | 01 |
| | நூலகர் | U – AC 5 | 01 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 01 | 01 |
| **கூட்டுமொத்தம்** | | | **310** | **105** | **68** | **173** | **06** | **04** | **10** | - | - | - | **03** | - | **03** | **137** | **124** |

ஒட்டுமொத்தமாக, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் மொத்தம் 310 பதவிநிலைகள் உள்ளன, இதில் 186 நிரந்தர பதவியணியினர் (60%), பத்து தற்காலிக பதவியணியினர் (3.2%), மற்றும் வேலை ஒதுக்கீடு அடிப்படையில் 3 பேர் (1%) காணப்பட்டதால் 137 நிரந்தர பதவியணி வெற்றிடங்கள் (35.8%) ஏற்பட்டிருந்தன.




வரைபடம் 1-5 ஊழியர் வகைப்படுத்தல் மூலம் மொத்த பல்கலைக்கழக பதவியணியினர் (177).

வரைபடம் 1-5 ஆனது 177 பதவியணி உறுப்பினர்களுடன் நான்கு ஊழியர் நிலைகளாக வகைப்படுத்தப்பட்ட மொத்த பல்கலைக்கழக பதவியணியினரின் பிரித்தெடுப்பை வழங்குகிறது. ஆரம்ப நிலை ஊழியர்கள் மொத்த பதவியணியினரில் 50% ஆன 69 நபர்களை கொண்டுள்ளனர். இரண்டாம் நிலை ஊழியர்கள் மொத்த பதவியணியினரில் 23% ஆன 32 நபர்களை கொண்டுள்ளனர். மூன்றாம் நிலை ஊழியர்கள் 12 நபர்களை உள்ளடக்கி மொத்த பதவியணியினரில் 9% ஐ பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். சிரேஷ்ட நிலை ஊழியர்கள் மொத்த பதவியணியினரில் 18% ஆன 24 நபர்களை கொண்டுள்ளனர்.

இந்த பங்கீடு பல்கலைக்கழகத்தின் பதவியணியினரில் பாதி பேர் ஆரம்ப நிலையிலும், கணிசமான பகுதியினர் இரண்டாம் நிலையிலும் உள்ளனர் என்பதை எடுத்துக்காட்டுகிறது. சிரேஷ்ட நிலையும் குறிப்பிடத்தக்க இருப்பைக் கொண்டுள்ளது, அதே நேரம் மூன்றாம் நிலை பதவியணியினரின் மிகச்சிறிய சதவீதத்தை உள்ளடக்குகிறது.

## 1.7 கல்விசார் பதவியணியினர் மற்றும் கல்வி உதவி பதவியணியினர்

வவுனியாப் பல்கலைக்கழகம் அனுமதிக்கப்பட்ட வலுவான 123 கல்விசார் பதவிநிலைகளைக் கொண்டிருந்தது. இவற்றில் 80 நிரந்தர நியமனம் பெற்றவர்களால் நிரப்பப்பட்டுள்ளது, அதேநேரம் மீதமுள்ள பதவிகள் தற்காலிக ஒப்பந்தங்களின் அடிப்படையில் தனிநபர்களால் நிரப்பப்பட்டுள்ளன. சிரேஷ்ட பதவியணியினர் நிரப்பப்பட்ட கல்விசார் பதவிநிலைகளில் பெரும்பாலானவை, நிரந்தர கல்வி பணியாளர்களில் 37% ஆக உள்ளனர். மேலும், பல்கலைக்கழகம் அதன் கல்வி நடவடிக்கைகளை மேலும் ஆதரிப்பதற்கு அனைத்து 32 அங்கீகரிக்கப்பட்ட தற்காலிக கல்விசார் பதவிநிலைகளையும் பயன்படுத்தியுள்ளது. வட்ட வரைபு கல்விசார் மற்றும் கல்வி உதவி பதவியணியினரின் தொகுப்பைக் காட்டுகிறது: சிரேஷ்ட கல்வியாளர்கள் 37%, கனிஷ்ட கல்வியாளர்கள் 22%, கல்வி உதவி பதவியணியினர் 6%, மற்றும் தற்காலிக கல்வியாளர்கள் 35% ஆக காணப்படுகின்றனர்.




வரைபடம் 1-6 கல்விசார் மற்றும் கல்வி உதவி பதவியணியினர்

வரைபடம் 1-6 ஆனது நான்கு குழுக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தின் கல்விசார் மற்றும் கல்வி உதவி பதவியணியினரின் பிரித்தெடுப்பை வழங்குகிறது, மொத்த 123 பதவியணி உறுப்பினர்களில், சிரேஷ்ட கல்வியாளர்கள் 46 நபர்களுடன் மொத்த பதவியணியினரில் 37.4% ஆக உள்ளனர். கனிஷ்ட கல்வியாளர்கள் 27 நபர்களுடன் மொத்த பதவியணியினரில் 22% ஆக உள்ளனர். கல்வி உதவி பதவியணியினர் ஏழு நபர்களுடன் மொத்த பதவியணியினரில் 5.7% ஐ பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். 43 நபர்களுடன் மொத்த பதவியணியினரில் 35% ஆக தற்காலிக கல்வியாளர்கள் உள்ளனர். 70% இற்கும் அதிகமான பதவியணியினரைக் கொண்ட சிரேஷ்ட கல்வியாளர்கள் மற்றும் தற்காலிக கல்வியாளர்களின் குறிப்பிடத்தக்க இருப்பை இந்த பங்கீடு எடுத்துக்காட்டுகிறது. கனிஷ்ட கல்வியாளர்களும் குறிப்பிடத்தக்க இருப்பைக் கொண்டுள்ள அதே நேரம் பதவியணியினரில் ஒரு சிறிய பகுதியை கல்வி உதவிப் பதவியணியினர் உருவாக்குகின்றனர்.

அட்டவணை 1-10 பீடங்கள் மற்றும் நூலகத்தில் உள்ள கல்வி மற்றும் கல்வி உதவிப் பதவியணியினர்

| வகைப்படுத்தல் | சம்பள அளவுத்திட்டம் | அங்கீகரிக் கப்பட்ட பதவியணி யினர் | தற்போதுள்ள பதவியணியினர் | | | வெற்றி டங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | | பெண் | ஆண் | மொத்த ம் | |
| சிரேஷ்ட பேராசிரியர் (தலைவர்) | U AC 5 (I) | 5 | - | - | - | 5* |
| பேராசிரியர் (தலைவர்) | U AC 5 (II) | | - | - | - | |
| சிரேஷ்ட பேராசிரியர் | U AC 5 (I) | | - | - | - | |
| துணைவேந்தர் | U AC 5 (II) | 1 | - | 1 | 1 | - |
| பேராசிரியர் | U AC 5 (II) | 86 | 1 | 2 | 3 | 17* |
| இணைப் பேராசிரியர் | U AC 4 | | - | - | - | |
| சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் I) | U AC 3 (I) | | 6 | 6 | 12 | |
| சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் II) | U AC 3 (II) | | 6 | 20 | 26 | |
| சிரேஷ்ட விரிவுரையாளர் (இடைநிலை)/ விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதது) | U AC 3 (III) | | 1 | 2 | 3 | |
| விரிவுரையாளர் | U AC 3 (IV) | | 3 | 1 | 4 | |
| விரிவுரையாளர் (தகுதிகாண்) | U AC 3 (IV) | | 17 | 6 | 23 | |
| நூலகர் | U AC 5 (I) | 1 | - | - | - | 1 |
| சிரேஷ்ட உதவி நூலகர் (தரம் I) | U AC 3 (I) | 1 | - | 1 | 1 | - |
| உதவி நூலகர் | U AC 3 (IV) | 1 | - | - | - | 1 |
| **மொத்தம்** | | **95** | **34** | **39** | **73** | **22** |
| கல்வி உதவி பதவியணியினர் | U AS 2 | 9 | - | 4 | 4 | 5 |
| | U AS 1 | 8 | 1 | 2 | 3 | 5 |
| | U AS 1 (II) | | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **மொத்தம்** | | **17** | **1** | **6** | **7** | **10** |
| தற்காலிக உதவி விரிவுரையாளர் | U AC 2 (நிலையானது) | 7 | 19 | 5 | 24* | - |
| தற்காலிக செயன்முறை விளக்குநர் | U AC 1 (நிலையானது) | 24 | 14 | 5 | 19 | - |
| தற்காலிக பயிற்றுவிப்பாளர் | U AC 1 (நிலையானது) | 1 | - | - | - | 1 |
| **மொத்தம்** | | **32** | **33** | **10** | **43** | **-** |

சுருக்கமாக, கல்விசார் பதவியணியினருக்கான மொத்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 95 ஆகும், தற்போதுள்ள பதவியணியினர் 73 (34 பெண்கள் மற்றும் 39 ஆண்கள்) ஆகும், இதன் விளைவாக 22 வெற்றிடங்கள் உள்ளன.

கல்வி உதவி பதவியணியினர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 17 ஆக உள்ளதுடன், தற்போதுள்ள பதவியணியினர் ஏழு (1 பெண் மற்றும் ஆறு ஆண்கள்) ஆக காணப்படுவதால், பத்து வெற்றிடங்கள் உள்ளன. தற்காலிக பதவிநிலைகளில் 43 தற்போதுள்ள பதவியணியினர் (33 பெண்கள் மற்றும் பத்து ஆண்கள்) உள்ளனர். இந்த பிரித்தெடுப்பு பல பதவிநிலைகள், குறிப்பாக உயர் கல்வி நிலைகளில், வெற்றிடம் இருப்பதை எடுத்துக்காட்டுகிறது.

## 1.8 நிர்வாக மற்றும் நிதி பதவியணியினர்

பல்கலைக்கழகத்தின் நிர்வாக மற்றும் நிதித் துறையில், 22 நிரந்தர பதவியணி பதவிகள் அனுமதிக்கப்பட்டன. இவற்றில் 14 நிரந்தரப் பதவியணியினரால் நிரப்பப்பட்டிருந்ததுடன், நான்கு தற்காலிகமாக ஒப்பந்த/ பதிற்கடமை அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்டிருந்ததால், தற்போது எட்டு பதவிநிலைகள் வெற்றிடமாக உள்ளன.

அட்டவணை 1-11 நிர்வாக மற்றும் நிதி பதவியணியினர்

| பதவியணியினர் | சம்பள அளவுத்திட்டம் | பதவியணியினர் | தற்போதுள்ள பதவியணியினர் | | | | | | நிரந்தர பதவியணியினர் வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நிரந்தரம் | | | தற்காலிகம் (பகுதி நேரம்/ சபடிகல்) | | | |
| | | | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | |
| பதிவாளர் | U-EX 3 (I) | 1 | 1 | - | 1 | - | - | - | - |
| நிதியாளர் | U-EX 3 | 1 | 1 | - | 1 | - | - | - | - |
| பிரதிப் பதிவாளர்/ சிரேஷ்ட உதவிப் பதிவாளர் | U-EX 2 | 4 | 3 | - | 3 | - | - | - | 1 |
| பிரதி நிதியாளர்/ சிரேஷ்ட உதவி நிதியாளர் | U-EX 2 | 1 | - | - | - | - | - | - | 1 |
| பணிப்பாளர்/ உடற்கல்வி பிரிவு | U-EX 2 | 1 | - | - | - | - | - | - | 1 |
| உதவிப் பதிவாளர் | U-EX 1 | 6 | 1 | 3 | 4 | - | - | - | 2 |
| உதவிப் பதிவாளர் (சட்டம் மற்றும் ஆவணப்படுத்தல்) | | 1 | - | - | - | - | - | - | 1 |
| உதவி நிதியாளர் | U-EX1 | 2 | 2 | - | 2 | - | - | - | - |
| உதவி உள்ளக கணக்காய்வாளர் | U-EX 1 | 1 | - | - | - | - | - | - | 1 |
| வேலை பொறியியலாளர் | U-EX 1 | 1 | 1 | - | 1 | - | - | - | - |
| பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர் | U-EX 1 | 1 | - | - | - | - | - | - | 1 |
| இட மேற்பார்வையாளர் | U-EX 1 | 1 | 1 | - | 1 | - | - | - | - |
| பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி | U-MO 1 | 1 | 1 | - | 1 | - | - | - | - |
| **கூட்டுமொத்தம்** | | **22** | **11** | **3** | **14** | **-** | **-** | **-** | **8** |

அங்கீகரிக்கப்பட்ட 22 பதவிநிலைகளில், 14 நிரப்பப்பட்டுள்ளன (11 ஆண்கள் மற்றும் மூன்று பெண்கள்), இது மொத்த பதவிநிலைகளில் 63.6% ஆகும். எட்டு வெற்றிடங்கள் உள்ளன. இது மொத்த பதவிநிலைகளில் 36.4% ஆகும். நிர்வாக மற்றும் நிதிப் பதவியணியினரின் பதவிநிலைகளில் குறிப்பிடத்தக்க பகுதி தற்போது நிரப்பப்பட்டுள்ளதுடன் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் உள்ளன என்பதை இந்த பங்கீடு காட்டுகிறது.

## 1.9 கல்விசாரா பதவியணியினர்

பல்கலைக்கழகத்தில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான கல்விசாரா பதவியணியினரின் பதவிநிலைகளிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது, அவற்றில் பல ஏற்கனவே நிரப்பப்பட்டுள்ளன. 876 ஆம் இலக்க UGC (பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு) சுற்றறிக்கை மற்றும் நிதி அமைச்சின் தற்போதைய பணிப்புரைகளால் விதிக்கப்பட்ட தடைகள் காரணமாக மீதமுள்ள வெற்றிடங்கள் திறந்தே உள்ளன. இந்த கட்டுப்பாடுகள் பல்கலைக்கழகத்திற்குள் நாளாந்த நடவடிக்கைகளின் சுமூகமான செயற்பாட்டிற்கு குறிப்பிடத்தக்க சவால்களை முன்வைக்கின்றன.

அட்டவணை 1-12 கல்விசாரா பதவியணியினர்

| பீடம்/கிளை/பிரிவு/அலகு/நிலையம் | எழுதுநர் மற்றும் இணைந்த பதவியணியினர் | தொழில்நுட்ப பதவியணியினர் | ஆரம்ப பதவியணியினர் |
|---|---|---|---|
| பொது நிர்வாகம் | 23 | - | 15 |
| நிதி நிர்வாகம் | 7 | - | 1 |
| உள்ளக கணக்காய்வு பிரிவு | 1 | - | - |
| வணிக கற்கைகள் பீடம் | 4 | 1 | 2 |
| பிரயோக விஞ்ஞான பீடம் | 4 | 3 | 4 |
| தொழில்நுட்ப கற்கைகள் பீடம் | 1 | 1 | 1 |
| நூலகம் | 3 | - | 3 |
| உடற்கல்வி | - | - | 1 |
| தொழில் வழிகாட்டல் பிரிவு | - | - | - |
| பதவியணியினர் அபிவிருத்தி நிலையம் | 1 | - | - |
| சுகாதார நிலையம் | - | - | - |
| தகவல் தொழில்நுட்ப நிலையம் | - | - | 1 |
| **மொத்தம்** | **45** | **5** | **28** |

ஒட்டுமொத்தமாக, மொத்த கல்விசாரா பதவியணியினரில் 45 எழுதுநர் மற்றும் இணைந்த பதவியணியினர் (மொத்த கல்விசாரா பதவியணியினரில் 61.6%), ஐந்து தொழில்நுட்ப பதவியணியினர் (6.8%) மற்றும் 28 ஆரம்ப பதவியணியினர் (31.5%) உள்ளனர். இந்த பங்கீடானது பெரும்பாலான கல்விசாரா பதவியணியினர் எழுதுநர் மற்றும் இணைந்த வகிபங்குகளில் உள்ளதையும் அதை தொடர்ந்து ஆரம்ப பதவியணியினர் உள்ளதையும், தொழில்நுட்ப பதவியணியினர் சிறிய குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றதையும் சுட்டிக்காட்டுகின்றது.

## 1.10 ஏனைய நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு

**புரிந்துணர்வு விஞ்ஞாபனங்களின் (MOUs) பொழிப்பு**

- வேலைவாய்ப்புக்காக மக்கள் வங்கியுடனான புரிந்துணர்வு விஞ்ஞாபனம்
- நிதி மற்றும் கணக்கியல் துறைக்கு இடையே பங்குடமைக்காக ACCA உடனான புரிந்துணர்வு விஞ்ஞாபனம்

## 1.11 சமூக விரிவாக்கம்

- கலாநிதி பி. சிவயோகநாதன் மற்றும் அவரது குழுவினர் 2023 மே 24 இல் பிரயோக விஞ்ஞான பீடத்தின் AHEAD செயற்பாட்டின் கீழ் சிலேஜ் உற்பத்தி நுட்பங்கள் தொடர்பான ஒரு செயலமர்வை நடாத்தினர். இந்த செயலமர்வில் பல்வேறு தொழில்முனைவோர் மற்றும் நிஜ உலக கண்டுபிடிப்பாளர்கள் கலந்து கொண்டனர். 106 இற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் பயிற்சி அமர்விலிருந்து பயனடைந்தனர்.
- கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கான நுண்ணுயிரியல், தாவர உயிரியல் மற்றும் இரசாயனவியல் தொடர்பான செயன்முறை அமர்வுக்கு 2023 யூன் 23 இல் கலாநிதி (திருமதி) ஜே.நிமலன் மற்றும் கலாநிதி (திருமதி) பி.மாலதி ஆகியோர் வளவாளர்களாக இருந்தனர்.
- கலாநிதி (திருமதி) ஜே. நிமலன், சிரேஷ்ட விரிவுரையாளர் மற்றும் கலாநிதி (திருமதி) பி. மாலதி ஆகியோர் ஆய்வுகூட உபகரணங்களின் செயற்பாடுகள்/ பயன்பாடுகள் பற்றி செயன்முறை விளக்கமளித்ததுடன் 2023 செப்தெம்பர் 08 இல் வவுனியாவில் உள்ள இலங்கை விவசாய பாடசாலையின் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான பாடத்திட்டத்தின் அடிப்படையில் ஆய்வுகூட சோதனைகளை எளிதாக்கினர்.
- கலாநிதி எஸ்.விஜேயமோகன் 2023 ஆகஸ்ட் 30 முதல் 2023 செப்தெம்பர் 01 வரை யாழ்ப்பாண மாவட்டத்தின் நெடுந்தீவில் விஞ்ஞான வரைபடமிடலிற்கான ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.
- பேராசிரியர் ரீ.மங்களேஷ்வரன் இந்தியா, மலேசியா, மொறிஷியஸ் ஆகிய நாடுகளில் நடைபெற்ற பல்வேறு சர்வதேச மாநாடுகளில் பாடசாலை உளவியல் மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு உலகளாவிய வணிக சவால்கள் குறித்து முக்கிய உரைகளை ஆற்றினார்.
- பேராசிரியர். ஏ. புஷ்பநாதன் அவர்கள் வருகை விரிவுரையாளர், மேற்பார்வையாளர், குழு மதிப்பாய்வாளர் மற்றும் பல்வேறு நிறுவனங்களில் விவசாய-தொழில்முயற்சி, தொழில்முனைவு மற்றும் மனித வள முகாமைத்துவம் தொடர்பான பாடங்களில் செயலமர்வு தலைவராகப் பங்களித்தார்.
- பேராசிரியர். வை.நந்தகோபன் விரிவுரைகளுக்கு வருகைதரும் ஆய்வுக்கட்டுரை மேற்பார்வையில் ஈடுபட்டார், மேலும் மூலோபாய திட்டமிடல், மென் திறன் அபிவிருத்தி மற்றும் ஏனைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் வளவாளராக இருந்தார்.
- கலாநிதி. பி.செல்வராஜன், பாலின உணர்திறன், முகாமைத்துவம் மற்றும் வணிகக் கல்வி ஆகியவற்றில் கவனம் செலுத்தும் மதிப்பாய்வாளர், வளவாளர் மற்றும் துணைப் பேராசிரியராக இருந்தார்.
- கலாநிதி கே. கலைநாதன் தலைமை ஆசிரியர், வளவாளர், வருகை விரிவுரையாளர், நிதி மற்றும் வணிக முகாமைத்துவத்தில் நிபுணத்துவம் பெற்ற துணைப் பேராசிரியர் போன்ற பதவிகளை வகித்தார்.
- கலாநிதி ஜி.ஜெயசீலன் பல்வேறு குழுக்களில் பங்கேற்று, கருத்தரங்கு வளவாளராகப் பணியாற்றி, தேசிய மட்டத்தில் மொழிக் கல்விக்கு பங்களித்தார்.
- கலாநிதி என். ரவிந்திரகுமாரன் ஆராய்ச்சிகளை மேற்பார்வையிட்டார், முக்கிய உரைகளை வழங்கினார், மேலும் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிலைபேறான இலக்குகள் தொடர்பான குழுக்கள் மற்றும் செயலமர்வுகளில் பங்கேற்றார்.
- கலாநிதி ஏ. ருக்ஷன் MBA ஆய்வறிக்கைகளை மேற்பார்வையிட்டார், வருகைதரும் விரிவுரையாளராக இருந்தார், மேலும் சர்வதேச மாநாடுகளுக்கான தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டமிடல் குழுக்களின் உறுப்பினராகவும் இருந்தார்.

- திரு அருட்பிள்ளை தயாபரன் வருகைதரும் விரிவுரையாளராக இருந்தார். மேலும் திறந்த கல்வி மற்றும் தொழில்முனைவுக்கு பங்களித்து இளங்கலை பட்டப்படிப்பு மாணவர்களை மேற்பார்வையிட்டார்,
- திருமதி. பி. கொட்வின் பிலிப் சமூகம் மற்றும் பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்கள் உட்பட பல்வேறு நிலைகளில் தலைமைத்துவம் மற்றும் வணிகக் கல்வி வளமொன்றாக இருந்தார்.
- திருமதி சுபஜனா ஜெயசீலன், ESL மற்றும் பெண்கள் ஓரங்கட்டப்படல் தலைப்புக்களில் கவனம் செலுத்தி, மொழிக் கல்வி மதிப்பாய்வாளர், பரீட்சகர் மற்றும் ஒருங்கிணைப்பாளராகப் பங்களித்தார்.
- திரு. எஸ். திருஞானசம்பந்தர், பாடத்திட்டம் தயாரித்தல் மற்றும் எளிதாக்குதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி, UNDP இளைஞர் தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தில் ஈடுபட்டார்.
- திரு. சி. லரோஜன் அவர்கள் பங்கேற்பு பாதீடு மற்றும் கணக்கியல் கல்வியில் கவனம் செலுத்தி, வளவாளர், தலைமை ஆசிரியர் மற்றும் தலைமைப் பரீட்சகராகப் பங்களித்தார்.
- திரு. எஸ். ஹரிகரன் முன்பள்ளி ஆசிரியர் திறன்கள், மோதல் தீர்வு மற்றும் வேலைவாய்ப்பை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புக்களில் ஒரு செயலமர்வு வளமாக இருந்தார்.
- திருமதி வி.கஜந்தி சந்தைப்படுத்தல் மற்றும் செயற்பாடுகள் முகாமைத்துவத்தில் வளவாளராக இருந்தார். மேலும் பசுமை விநியோகச் சங்கிலி முகாமைத்துவத்தில் ஆய்வுக் கட்டுரைகளை மதிப்பாய்வு செய்தார்.
- திரு. ஜே. லியோன் இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை மையப்படுத்தி டிஜிட்டல் சந்தைப்படுத்தல், முதலீட்டு வாய்ப்புக்கள் மற்றும் சந்தைப்படுத்தல் கலவை பற்றிய செயலமர்வுகளை வழங்கினார்.
- திருமதி. எஸ். மதிவதனி பல்வேறு செயலமர்வுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்று அனர்த்த முகாமைத்துவம், தொழில்முனைவு மற்றும் பெண்கள் வலுவூட்டலில் வளமொன்றாக இருந்தார்.
- திரு. எஸ்.சிவநேந்திரா இளைஞர் மற்றும் MAG பதவியணியினர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் பங்களித்து, ஒரு வளவாளராக தலைமைத்துவம், ஊக்கப்படுத்தல் மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தினார்.
- திருமதி கே.பி.டபிள்யூ.டி.ஆர். வீரசிங்க கற்கைநெறி வரையறைகளை உருவாக்கினார். மேலும் சந்தைப்படுத்தல் மற்றும் சேவை சந்தைப்படுத்தல் கல்வி வளமொன்றமாக இருந்தார்.
- திருமதி. பி. சர்மதா ஆங்கில மொழிக் கல்வி, தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தகவல் தொடர்பாடல் திறன் செயலமர்வுகளில் பயிற்றுவிப்பாளர், உதவிப் பயிற்றுவிப்பாளர் மற்றும் வளவாளராக இருந்தார்.
- திருமதி எம்.ஆர்.எவ். அகீலா இஜாஸ் மனித வள திட்டமிடல் மற்றும் உணர்ச்சி நுண்ணறிவு பயிற்சி ஆகியவற்றில் ஒரு வளவாளராக பங்களித்தார்.
- திருமதி பிரஷீனா அபேநயன் மற்றும் திரு. என். பிரதீபன் ஆகியோர் மோதல் முகாமைத்துவம் மற்றும் தீர்வுப் பயிற்சியில் ஈடுபட்டு மாநாட்டுக் குழுக்களில் பணியாற்றினர்.
- திரு. சூசைப்பிள்ளை டக்ளஸ் மற்றும் திரு. ஏ.செபராஜா ஆகியோர் ஆங்கிலத்தில் வருகைதரும் விரிவுரையாளர்களாகப் பணியாற்றினர். மேலும் பரீட்சைக்கு தயார்படுத்துதல் மற்றும் மென் திறன்கள் பற்றிய செயலமர்வுகளை நடாத்தினர்.
- விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப மாணவர்களுக்கான தொடர்பாடல் மற்றும் மென் திறன் பயிற்சிக்கான வளமாக திருமதி எஸ்.அனித்ரா இருந்தார்.

- திரு.எஸ்.சண்முகதாசன் வலயக் கல்வி அலுவலகம் மற்றும் பொது நூலகத்தில் இரண்டு விழிப்புணர்வு மற்றும் நூலக முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களை பிராந்திய மட்டத்தில் நடாத்தினார்.
- திரு. வி.செந்தூரன், ICT துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர், தொழில் வழிகாட்டல் பிரிவால் நடாத்தப்படும் தொழில்முனைவு மற்றும் சிறிய வணிக முகாமைத்துவத்துக்கான (CESBM) சான்றிதழ் கற்கைநெறிக்கான வளவாளராக பணியாற்றினார்.
- திரு ஏ. செந்தூரன் வட மாகாண தகவல் தொழில்நுட்ப நிலையத்தில் கல்வி அமைச்சினால் நடாத்தப்பட்ட இலங்கையில் IT அல்லாத ஆசிரியர்களுக்கு தமிழ் மொழிமூலம் ICT திறன்களை மேம்படுத்துவதற்கான ICT தொகுதிகளை தயாரிப்பதற்கான கருத்தரங்கில் வளவாளராக பணியாற்றினார்.
- திரு. வி.செந்தூரன் மற்றும் திருமதி. பி.ருக்ஷானி ஆகியோர் தொழில் வழிகாட்டல் பிரிவின் ''பல்கலைக்கழக மாணவர் சேர்க்கை 2023'' கருத்தரங்கிற்கு வளவாளர்களாக இருந்தனர்.
- திருமதி பி.அமிர்தா, திருமதி பி.ருக்ஷானி, திருமதி ஜி.சாலினி, திரு கே.மதனாகரன் மற்றும் திரு ரீ.அபிராமிதன் ஆகியோர் ஒக்தோபர் 9 மற்றும் 10 இல் பருத்தித்துறையில் அமைந்துள்ள வடமராட்சி கல்வி வலயத்தில் 70 மாணவர்களுக்கு ICT பாடத்திற்கான க.பொ.த. உயர்தரத்தின் கடந்தகால வினாத்தாள்கள் தொடர்பான கருத்தரங்கை நடாத்தினர்.
- ருக்ஷானி புவனேந்திரன், சாலினி கோபிசங்கர், எஸ். ரகுமேனன் மற்றும் ரீ. அபிராமிதன் ஆகியோர், இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி மற்றும் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த 60 மாணவர்களுக்கு இரண்டு நாட்களிற்கு பம்பலப்பிட்டி கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் உயர்தர ICT கருத்தரங்கை நடாத்தினர்.

# 2 மூலோபாய மதிப்பாய்வு

ஆரம்ப ஆண்டிற்கான விரிவான செயல்நடவடிக்கைத் திட்டத்துடன், 2023 முதல் 2027 வரையிலான ஐந்து-ஆண்டு மூலோபாய முகாமைத்துவ திட்டத்தை பல்கலைக்கழகம் மிகவும் கவனமாக உருவாக்கியது. கவனமாக திட்டமிடப்பட்ட போதிலும், முக்கியமாக பொருளாதார வீழ்ச்சியின் சீர்குலைவு விளைவுகளின் காரணமாக 2023 செயல்நடவடிக்கைத் திட்டத்தை செயற்படுத்துவதில் பல்கலைக்கழகம் குறிப்பிடத்தக்க தடைகளை எதிர்கொண்டது,

## 2.1 SWOT பகுப்பாய்வு

SWOT

**பலங்கள்:**

- புவியியல் நன்மை: பல்கலைக்கழகத்தின் இருப்பிடம் குறிப்பிடத்தக்க வகையில் சாதகமானது, பல்வேறு மாகாணங்களில் இருந்து எளிதாக அணுகக்கூடியது.
- பன்முகத்தன்மை மற்றும் மொழி புலமை: இது ஒரு பன்முக கலாச்சார மற்றும் பன்மொழி சமூகத்தை கொண்டுள்ளது.
- சுற்றுச்சூழல் வளங்கள்: வளாகம் பல்வேறு தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் மற்றும் வனப்பகுதிகள் மற்றும் விவசாய நிலங்கள் போன்ற இயற்கை வளங்கள் உட்பட இயற்கை அழகுடன் செழுமைப்படுத்தப்பட்டுள்ளது.
- பட்டதாரி வெற்றி: பல்கலைக்கழக பட்டதாரிகளிடையே குறிப்பிடத்தக்க உயர் வேலைவாய்ப்பு விகிதம் உள்ளது.
- கற்பித்தல் மொழி: நிறுவனம் ஆங்கில மொழிமூலம் நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகிறது.
- வெளியக ஒத்துழைப்பு: தொழில்துறை பங்குதாரர்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களுடன் இணைந்து செயற்படும் வலுவான பாரம்பரியமொன்று உள்ளது.
- பணியாளர்கள்: பதவியணியினர் தங்கள் இளமை மற்றும் பல்கலைக்கழகத்தின் செயற்பணிக்கான அர்ப்பணிப்பு மூலம் வகைப்படுத்தப்படுகிறார்கள்.

**பலவீனங்கள்:**

- பணியாளர் வரம்புகள்: சிரேஷ்ட கல்வி மற்றும் கல்விசாரா பதவியணியினரில் பற்றாக்குறை உள்ளது.
- உட்கட்டமைப்புக் கட்டுப்பாடுகள்: பல்கலைக்கழகம் போதியளவில்லாத உட்கட்டமைப்பு மற்றும் வசதிகளுடன் போராடுகிறது.
- விடுதி பற்றாக்குறை: மாணவர்கள் மற்றும் பதவியணியினருக்கு போதிய குடியிருப்பு வசதிகள் காணப்படவில்லை.
- பிராந்திய ஆதரவு: நிறுவனம் பிராந்திய அபிவிருத்தியை ஆதரிக்கும் அதன் திறனில் வரையறைகளை எதிர்கொள்கிறது.
- நிகழ்ச்சித்திட்டத்தின் கிடைக்கும் தன்மை: பட்டப்பின்படிப்பு மற்றும் வெளிவாரி நிகழ்ச்சித்திட்டங்கள் காணப்படவில்லை.
- நிதி நிலைத்தன்மை: பல்கலைக்கழகம் தற்போது மட்டுப்படுத்தப்பட்ட வருமானத்தை உருவாக்கும் செயற்பாடுகளைக் கொண்டுள்ளது.
- ஆராய்ச்சி வெளியீடு: உயர் குறியீட்டு இதழ்களில் வெளியீடுகளை அதிகரிக்க வேண்டிய அவசியம் உள்ளது.
- பாதீட்டுக் கட்டுப்பாடுகள்: பல்கலைக்கழகத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லை.

**வாய்ப்புக்கள்:**

- சமூக ஆதரவு: உள்ளூர் தொழில்துறை சமூகத்திற்குள் வலுவான ஆதரவு முறைமையொன்று உள்ளது
- பிராந்திய தேவைகள்: பிராந்திய அபிவிருத்திக்கான கணிசமான தேவைகளை ”ர்த்தி செய்யும் திறனை பல்கலைக்கழகம் கொண்டுள்ளது.
- வளப் பயன்பாடு: பிராந்திய இயற்கை வளங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- மனித வள அபிவிருத்தி: பிராந்திய மனித வள திறனை மேம்படுத்துவதற்கான தெளிவான தேவை மற்றும் வாய்ப்பு உள்ளது.
- ஆராய்ச்சி சாத்தியம்: பிராந்தியம் சார்ந்த ஆராய்ச்சியை நடாத்துவதற்கு ஒரு கனிக்கிவமான வாய்ப்பை வமங்கிகிறகி.

**அச்சுறுத்தல்கள்:**

- போட்டி அழுத்தங்கள்: பல்கலைக்கழகம் ஏனைய கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு அல்லாத, வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலிருந்து போட்டியை அனுபவிக்கிறது.
- அரசியல் மற்றும் பொருளாதார உறுதியற்ற தன்மை. நிலையற்ற அரசியல் மற்றும் பொருளாதார சூழல் கணிசமான அபாயங்களை ஏற்படுத்துகிறது.
- நிதி நிச்சயமற்ற தன்மை: போதாத திறைசேரி நிதி ஒதுக்கீடு குறித்த கவலை தொடர்ந்து கொண்டிருக்கிறது.
- தொற்றுநோய் பின்விளைவு: கொவிட்-19 தொற்றுநோயின் தாக்கம் பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டுத் திறனைத் தொடர்ந்து சவால்

## 2.2 எதிர்கால செயல்நடவடிக்கைத் திட்டம்

**இலக்கு - 01: உயர்கல்வியில் சர்வதேச அங்கீகாரத்தை அடைந்துகொள்வதற்கு அனைத்து கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களின் தரம் மற்றும் பொருத்தத்தை மேம்படுத்துதல்.**

இந்த இலட்சிய இலக்கை அடைந்துகொள்வதற்கு, பல்கலைக்கழகம் அனைத்து கல்வி சலுகைகளின் தரத்தை உயர்த்துவதற்கான ஒரு மூலோபாய நடவடிக்கையான, தர உத்தரவாதத்திற்கான நிலையத்தை (CQA) தொடங்கியது. கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் சிறப்பிற்கு கல்விசார் பதவியணியினரின் திறன் முக்கியமானது என்பதை உணர்ந்து, வெளிநாட்டில் முனைவர் பட்டப்படிப்பைத் தொடர்வதற்கும் சர்வதேச தராதர அங்கீகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் பல்கலைக்கழகம் பீடங்களை தீவிரமாக ஊக்குவித்துள்ளது. வெளிநாட்டு நிறுவனங்களுடனான மூலோபாய பங்குடமைகள் மூலம் இந்த முயற்சி ஆதரிக்கப்படுகிறது, பதவியணியினர் மற்றும் மாணவர் அனுபவங்களை வளப்படுத்துவதற்கும், உலகளாவிய கல்வி பரிமாற்றத்தை வளர்த்துக்கொள்வதற்கும் புரிந்துணர்வு விஞ்ஞாபனங்களில் கைச்சாத்திடுவதன் மூலம் எளிதாக்கப்படுகிறது.

கல்வியில் தொழில்நுட்ப உந்துதல் மாற்றத்திற்கு பதிலளிக்கும் விதமாக, பல்கலைக்கழகம் அதன் உறுப்பினர்கள் அனைவருக்கும் டிஜிட்டல் மற்றும் இலத்திரனியல் வளங்களின் வளமான வரிசையை அணுகுவதை உறுதிசெய்யும் கடப்பாடுடையது. இந்த அர்ப்பணிப்பு, மாணவர் ஈடுபாடு மற்றும் அறிவு மேம்பாடு ஆகியவற்றை ஊக்குவிக்கும் வளமூலங்களில் தீவிர கவனம் செலுத்துவதன் மூலம், நூலக பதவியணியினரை அவர்களின் சேகரிப்புக்களை முன்கூட்டியே மேம்படுத்துவதற்கு வலுவூட்டுகிறது. இதற்கு இணையாக, மாணவர்களின் கல்வித் திறனை கூர்மைப்படுத்துவதற்கும், மென் திறன்களை வளர்ப்பதற்கும், சமூக நல்லிணக்கத்தின் அடித்தளத்தை வலுப்படுத்துவதற்கும் பாடத்திட்ட சீர்திருத்தங்கள் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் சமூக மற்றும் கல்வித் தரத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டு, உயர்தர ஆராய்ச்சி மற்றும் சமூக ஈடுபாட்டின் கலாச்சாரத்தை வளர்ப்பதை பல்கலைக்கழகம் வலுவாக வலியுறுத்தியுள்ளது. இந்த நோக்கத்திற்காக, முதன்மையான தேசிய மற்றும் சர்வதேச தொழில்முறை அமைப்புக்கள் கூட்டு ஆராய்ச்சி மாநாடுகளை ஏற்பாடு செய்துள்ளன. அறிவார்ந்த சிறப்பை மேலும் ஊக்குவிப்பதற்காக, புகழ்பெற்ற, அட்டவணைப்படுத்தப்பட்ட இதழ்களில் வெளியீடுகளை ஊக்குவிப்பதற்கு ஒரு ஆராய்ச்சி விருது திட்டம் நிறுவப்பட்டுள்ளது.

**குறிக்கோள்கள்**

- 2026 அளவில் PhDs அல்லது அதற்கு இணையான தகுதிகளைக் கொண்ட கல்விசார் பதவியணியினரின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
- அனைத்து பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் பாதுகாப்பான தேசிய மற்றும் சர்வதேச தராதர அங்கீகாரம்.
- பல்கலைக்கழக சமூகத்திற்கான டிஜிட்டல் மற்றும் இலத்திரனியல் வளங்களுக்கான உலகளாவிய அணுகலை உறுதிப்படுத்துதல்.
- நூலகத்தின் சேகரிப்பின் பயன்பாட்டை விரிவுபடுத்தி மேம்படுத்துதல்.
- மாணவர் அமைப்பிற்கு ICT வசதிகளுக்கு விரிவான அணுகலை வழங்குதல்.
- பீடங்கள் மற்றும் மாணவர்களிடையே கற்றல் முகாமைத்துவ முறைமைகள் (LMS) மற்றும் மெய்நிகர் கற்றல் சூழல்கள் (VLE) ஆகியவற்றின் பயன்பாட்டை அதிகரித்தல்.
- மென் திறன் மேம்பாடு மற்றும் சமூக நல்லிணக்கத்தை இணை பாடத்திட்ட நடவடிக்கைகளில் ஒருங்கிணைத்தல்.
- பாடநெறிக்கு அப்பாற்பட்ட ஈடுபாடுகளின் பரந்த அளவை ஆதரிப்பதற்கு வசதிகளை மேம்படுத்துதல்.
- பிராந்திய மற்றும் தேசிய சவால்களை எதிர்கொள்வதற்கு கல்வி மற்றும் மாணவர் ஆராய்ச்சியைத் தூண்டுதல்.
- முன்னணி தேசிய மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்களுடன் கூட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நிறுவுதல்.
- சர்வதேச இளங்கலை பட்ட மாணவர்களின் சேர்க்கையை அதிகரித்தல்.

- அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் வலுவான தர உத்தரவாதம் மற்றும் மேம்படுத்தல் பொறிமுறைகளை அமுல்ப்படுத்துதல்.

**இலக்கு - 02: உலக அளவில் வேலைவாய்ப்பு பெறக்கூடிய பட்டதாரிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்**

வேலைவாய்ப்பானது பல்கலைக்கழகத்தின் வெற்றிக்கான முக்கியமான அளவீடாக செயற்படுகிறது. தேசிய மற்றும் சர்வதேச பதவிகளைப் பெறுவதில் அதன் பட்டதாரிகளின் குறிப்பிடத்தக்க சாதனைகள் இருந்த போதிலும், வேலைவாய்ப்பை மேம்படுத்துவது முன்னுரிமையாக உள்ளது. உலகளாவிய வேலை சந்தையின் வளர்ந்து வரும் கோரிக்கைகளுக்கு ஏற்ப புதிய பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் பல்கலைக்கழகம் பதிலளித்துள்ளது. பட்டதாரி வேலைவாய்ப்பு வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்காக முக்கிய தொழில் நிறுவனங்களுடன் கூட்டு புரிந்துணர்வு விஞ்ஞாபனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பாடத்திட்டமானது உலகளாவிய வேலைவாய்ப்பு போக்குகள் மற்றும் கோரிக்கைகளுக்கமைய சீரமைக்கப்படுவதை உறுதிப்படுத்தி காலரீதியான மீளாய்வு மற்றும் திருத்தத்திற்கு உட்பட்டது, புதுமையான பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பட்டப்பின்படிப்பு மற்றும் தொலைதூரக் கற்றல் விருப்பங்களுக்கான முன்மொழிவுகளை வடிவமைப்பதில் பல்கலைக்கழகம் முனைப்புடன் உள்ளது.

இன்றைய போட்டி வேலை நிலப்பரப்பில், மனப்பான்மை, நடைமுறை அனுபவம் மற்றும் மென்மையான திறன்கள் போன்ற பண்புக்கூறுகள் தொழில்தருநர்களால் மிகவும் மதிக்கப்படுகின்றன. மேம்படுத்தப்பட்ட மொழி நிகழ்ச்சித்திட்டங்கள், மாணவர்களை மையமாகக் கொண்ட கற்றல் மற்றும் பயிற்சிகள் மற்றும் தொழில்துறை விஜயங்கள் மூலம் நடைமுறை வெளிப்பாடு ஆகியவற்றின் மூலம் இந்தப் பண்புகளை வளர்ப்பதற்கு பல்கலைக்கழகம் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தர உத்தரவாத நடவடிக்கைகள் மூலம் உயர் கல்வித் தரத்தைப் பேணுவதில் கவனம் செலுத்துவது, வளர்ந்து வரும் வாய்ப்புக்களைப் பயன்படுத்தி இளங்கலைப் பட்டதாரிகளுக்கு மேலும் உதவுகிறது.

**குறிக்கோள்கள்**

- எதிர்கால அறிவுத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு புதிய பீடங்களை உருவாக்குதல்.
- இந்த பீடங்களுக்குள் புதுமையான பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை தொடங்குதல்.
- விசேட கல்வித் துறைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு புதிய துறைகளை உருவாக்குதல்.
- வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கும் சர்வதேச தரத்தை பூர்த்தி செய்வதற்கும் இளங்கலைப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் பாடத்திட்டத்தை மறுசீரமைத்தல்.
- முதுகலை மற்றும் தொழில்முறை கற்கைகளுக்கான நிலையங்களை நிறுவுதல்.
- மேம்பட்ட முதுகலை பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.
- தொலைதூரக் கல்வி மற்றும் தொடர்ச்சியான கல்வி முயற்சிகளை விரிவுபடுத்துதல்.
- மென்மையான திறன்களில் மாணவர்களின் திறனை வளர்த்தல்.
- அனைத்து பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களிலும் மாணவர்களை மையமாகக் கொண்ட மற்றும் கலப்பு கற்றல் முறைமைகளை ஊக்குவித்தல்.
- குறைந்தபட்சம் 85% பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் பணிப் பயிற்சியை உள்ளடக்குவதை நோக்கமாக கொள்ளல்.
- தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கான கருத்துக்களை ஒருங்கிணைத்து வழக்கமான நிறுவன மற்றும் நிகழ்ச்சித்திட்ட மதிப்பாய்வுகள் மூலம் கல்வித் தரத்தை மேம்படுத்துதல்,
- உள்வாரி பட்டப்படிப்பு மாணவர்களின் சேர்க்கையை வருடாந்தம் 20% அதிகரிப்பதை நோக்கமாகக் கொள்ளல்.

**இலக்கு - 03: வளங்கள் மற்றும் முறைமைகளின் செயற்திறனான மற்றும் வினைத்திறனான முகாமைத்துவம் மூலம் நல்லாளுகையை மேம்படுத்துதல்.**

வெளிப்படைத்தன்மை, சட்டத்தை பின்பற்றுதல், உள்ளடக்கிய பங்கேற்பு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றால் வகைப்படுத்தப்படுகிற நல்லாளுகை பல்கலைக்கழக நெறிமுறையின் அடித்தளமாகும். இந்த இலக்கை

உறுதிப்படுத்துவதற்கு முடிவெடுக்கும் செயன்முறைகள், ஒருங்கிணைப்பு, மதிப்பீடு மற்றும் தகவல் காட்சிப்படுத்தல் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கு ஒரு விரிவான முகாமைத்துவ தகவல் முறைமை (MIS) உருவாக்கப்படுகிறது.

வளங்கள் மற்றும் முறைமைகளை வினைத்திறனாக முகாமை செய்வதில் நிர்வாக மற்றும் கல்விசாரா பதவியணியினர் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அவர்களின் திறன்களை வலுப்படுத்துவதற்கும், பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்பதை ஊக்குவிக்கவும் பதவியணியினர் அபிவிருத்தி நிலையம் (SDC) மூலம் இலக்கு பயிற்சி மற்றும் செயலமர்வுகளை வழங்கவும் பல்கலைக்கழகம் அவர்களின் கல்வி மற்றும் தொழில்முறை முன்னேற்றத்தை வலியுறுத்துகிறது. முன்னுதாரணமான ஆளுகை சூழலை வளர்ப்பதற்காக அதன் வள திறன்களை மேம்படுத்துவதில் பல்கலைக்கழகம் கவனம் செலுத்துகிறது.

**குறிக்கோள்கள்**

- அனைத்து பீடங்கள், நூலகம் மற்றும் நிர்வாகத் துறைகளில் MIS ஐ அமுல்ப்படுத்துதல்.
- நிர்வாகப் பதவியணியினரில் 90% பேர் முதுகலை அல்லது தொழில்முறைத் தகுதிகளைப் பெற்றிருப்பதை உறுதிப்படுத்துதல்.
- SDC தலைமையிலான பயிற்சி, செயலமர்வுகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களில் நிர்வாக பதவியணியினரின் பங்கேற்பை அதிகரித்தல்.
- SDC மூலம் கல்விசாரா பதவியணியினரிற்கான பயிற்சி வாய்ப்புக்களை விரிவுபடுத்துதல்.
- தேவையான பௌதீக வளங்களை வழங்குவதன் மூலம் நிர்வாகத் திறனை மேம்படுத்துதல்.

**இலக்கு - 4: பௌதீக மற்றும் மனித வளங்கள் ஒரு உகந்த கற்பித்தல் மற்றும் கற்றல் சூழலை வழங்குவதை உறுதிப்படுத்துதல்.**

போதிய பௌதீக மற்றும் மனித வளங்களால் ஆதரிக்கப்படும் ஒரு சாதகமான சூழல் கற்பித்தல் மற்றும் கற்றல் செழிக்க இன்றியமையாததாகும். எதிர்வரும் ஆண்டுகளில் கல்வி, நிர்வாக மற்றும் கல்விசாரா பதவியணி பதவிநிலைகளை அதிகரிப்பதற்கு பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது. தொற்றுநோயால் முன்வைக்கப்படும் சவால்களுக்கு பதிலளிக்கும் வகையில், மாணவர் அமைப்பின் தங்குமிட கவலைகளை நிவர்த்தி செய்து, விடுதி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

கல்வியில் டிஜிட்டல் மாற்றத்திற்கு ஏற்ப அதிநவீன வசதிகளுடன் கூடிய சிமார்ட் விரிவுரை மண்டபங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. புதிய விரிவுரை அரங்குகள் மற்றும் கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்கும், அனைத்து விரிவுரை மண்டபங்களையும் நவீன கற்பித்தல் கருவிகளுடன் மேம்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. போக்குவரத்து மற்றும் பராமரிப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன, மேலும் மாணவர்கள் தலைமையிலான அமைப்புக்கள் மூலம் பசுமையான சூழலை வளர்ப்பதற்கான முயற்சிகளை பல்கலைக்கழகம் முன்னெடுத்து வருகிறது.

**குறிக்கோள்கள்**

- 2026 ஆம் ஆண்டளவில் பல்கலைக்கழகத்தின் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப கல்வி, நிர்வாக மற்றும் கல்விசாரா பதவியணி பதவிநிலைகளை விரிவுபடுத்துதல்.
- 2026 ஆம் ஆண்டளவில் அனைத்து மாணவர்களுக்கும் விடுதி வசதிகளை வழங்குதல்.
- ஒவ்வொரு பீடங்களுக்கும் நவீன விரிவுரை அரங்குகளை நிர்மாணித்தல்.
- 2026 ஆம் ஆண்டளவில் அனைத்து விரிவுரை மண்டபங்களையும் அதிநவீன கற்பித்தல் வசதிகளுடன் புதுப்பித்தல்.
- பல்கலைக்கழக கேட்போர் கூடமொன்றை நிர்மாணித்தல்.
- 2026 ஆம் ஆண்டளவில் புதிய ஆய்வுகூடங்களை நிறுவுதல் மற்றும் ஏற்கனவே உள்ளவற்றை நவீனமயமாக்குதல்.
- விரிவான வசதிகளுடன் கூடிய பட்டப்பின்படிப்பு நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களை உருவாக்குதல்.

- வருடாந்தம் புதிய கட்டிடங்கள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்புக்கள் பல்கலைக்கழகத்தில் சேர்க்கப்படுகின்றன.
- போதுமான போக்குவரத்து மற்றும் பொது இயந்திரங்களை வழங்குவதை உறுதிப்படுத்துதல்.
- பசுமையான வளாக சூழலை ஊக்குவித்தல்.
- 2026 ஆம் ஆண்டளவில் தற்போதுள்ள 80% கட்டிடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை செய்வதற்கான அடிப்படை உட்கட்டமைப்புக்களை வழங்குதல்.

**இலக்கு - 5: பிராந்திய மற்றும் தேசிய அபிவிருத்திக்கான அறிவைப் பரப்புதல்**

பிராந்திய மற்றும் தேசிய அபிவிருத்தியை வளர்ப்பதற்கான அதன் ஆணையில் பல்கலைக்கழகம் பெருமை கொள்கிறது. இது மாணவர்கள் மற்றும் பதவியணியினரை சமூக மேம்பாட்டு செயற்திட்டங்களில் ஈடுபடுவதற்கு ஊக்குவித்தல், அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஆராய்ச்சி மற்றும் சர்வதேச மாநாடுகளில் பங்கேற்பதை உள்ளடக்குகிறது. பாடசாலை மாணவர்களுக்கு அவர்களின் தொழில் தெரிவுகளிற்கு வழிகாட்டும் வகையில் செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் அடிக்கடி நடாத்தப்படுகின்றன, மேலும் சமூக நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு பரந்த சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் பரந்த நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்த உதவுகிறது. மேலும், மாணவர் அமைப்புக்கள் பிராந்திய மற்றும் தேசிய முன்னேற்றத்திற்கு பங்களிக்கும் பல்வேறு விரிவாக்கல் நடவடிக்கைகளில் தீவிரமாக பங்கேற்கின்றன.

**குறிக்கோள்கள்**

- பிராந்திய மற்றும் தேசிய சவால்களை எதிர்கொள்வதற்கு குறியீடிடப்பட்ட மற்றும் சக மதிப்பாய்வு செய்யப்பட்ட வெளியீடுகளின் உற்பத்தியை அதிகரித்தல்.
- தொழில் மற்றும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் தீவிரமாக ஈடுபடுதல்.
- விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் தனியார் மற்றும் பொதுத்துறை ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துதல்.
- நிறுவப்பட்ட சமூக தொடர்பு பிரிவுகள் மூலம் சமூகம் சார்ந்த செயற்பாடுகளை பெருக்குதல்.

**இலக்கு - 6: பாலினம், இனம் மற்றும் மதம் தொடர்பான நீதி மற்றும் சமத்துவத்தை உறுதிப்படுத்துதல்**

சமத்துவம் மற்றும் ஒப்புரவு உணர்வு பல்கலைக்கழகம் முழுவதும் பரவியுள்ளது, பதவியணியினர் மற்றும் மாணவர்கள் பல்வேறு பின்னணியில் இருந்து இணக்கமாக வேலை செய்கிறார்கள். இந்த உள்ளடக்கிய கலாச்சாரத்தை வலுப்படுத்துவதற்கு விசேட பிரிவுகள் மற்றும் பாலின பிரிவு மற்றும் நல்லிணக்க மையம் போன்ற நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. பல்கலைக்கழகம் கலாச்சார மற்றும் மத பன்முகத்தன்மையை உள்ளடக்குவதற்கான அதன் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தி பகிரப்படும் நிகழ்வுகள் மற்றும் ஒன்றுகூடல்கள் மூலம் கொண்டாடுகிறது,

ஒற்றுமையை வளர்ப்பதில் தொடர்பாடலின் முக்கியத்துவத்தை உணர்ந்து, பல்கலைக்கழகம் மொழித் தடைகளை நிவர்த்தி செய்து, ஒருங்கிணைந்த மொழிக் கற்கைநெறிகளை வழங்கி, சிங்களம் மற்றும் தமிழ் மாணவர்கள் ஒருவரையொருவர் மொழியைக் கற்க உதவுகிறது, இதனால் தொடர்பாடல் இடைவெளிகளைக் குறைத்து பரஸ்பர புரிந்துணர்வை வளர்க்கிறது.

**குறிக்கோள்கள்**

- 2026 ஆம் ஆண்டளவில் பொருளாதார ரீதியாக அல்லது சமூக ரீதியாக சவாலான மாணவர்களுக்கு நிதி மற்றும் சமூக ஆதரவை வழங்குதல்.
- அனைத்து இனமத சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்திற்கான சூழலை உருவாக்குதல்.
- பாலினம், இனம் அல்லது மதம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் அனைத்து பல்கலைக்கழக நடவடிக்கைகளிலும் சம வாய்ப்புக்களை ஊக்குவித்தல்.
- பீடங்களுக்குள் நல்லிணக்க உணர்வை வளர்த்தல்.
- மொழியியல் பிரிவுகளில் தொடர்பாடல் மற்றும் புரிதலை எளிதாக்குவதற்கு மொழிக் கற்கைநெறிகளை வழங்குதல்.

உட்கட்டமைப்பு பாலின சமத்துவம் மற்றும் ஒப்புரவை எளிதாக்குவதை உறுதிப்படுத்துதல்.

# 3 பீடங்கள், நிலையங்கள் மற்றும் பிரிவுகள்

## 3.1 பிரயோக விஞ்ஞான பீடம்

**பீடத்தின் பீடாதிபதி**



**கலாநிதி (திருமதி) ஜெயகௌரி நிமலன், பீடாதிபதி**

**அறிமுகம்**

1997 இல் நிறுவப்பட்டதிலிருந்து, வவுனியா பல்கலைக்கழகத்தில் பிரயோக விஞ்ஞான பீடம் (FAS) நிஜ வாழ்க்கையில் மிகவும் பொருந்தக்கூடியதாக இருக்கும்படி விஞ்ஞானத்திற்கு அதிகாரம் அளித்த புகழ்பெற்ற பட்டதாரிகளை உருவாக்கியுள்ளது. பீடம் இரண்டு துறைகளான: உயிரியல் விஞ்ஞானம் மற்றும் பௌதீக விஞ்ஞான துறைகளை உள்ளடக்கியது. இது சுற்றுச்சூழல் விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், பிரயோக கணிதம் மற்றும் கணனி மற்றும் கணனி விஞ்ஞானம் ஆகியவற்றில் இளங்கலை பட்டப்படிப்புக்களை வழங்குகின்றன.

FAS ஆனது இயற்கை காட்சிகள் மற்றும் காடுகள், குளங்கள் மற்றும் நெல் வயல்களுடன் கூடிய சுற்றுப்புறங்களை ஆராய்கிற வவுனியா, பம்பைமடுவில் அமைந்துள்ளது. இது பயனுள்ள கற்பித்தல், கற்றல் மற்றும் ஆராய்ச்சிக்கு உகந்த சூழ்நிலையை வளர்க்கிறது.

FAS ஒரு நெகிழ்வான, நட்பு மற்றும் சாதகமான உள்ளக சூழலை வழங்குகிறது, இது மாணவர்களை விளையாட்டு, பொழுதுபோக்கு நோக்கங்கள், மத நடவடிக்கைகள், கலாச்சார நிகழ்வுகள் மற்றும் சமூக சேவைகளில் ஈடுபட ஊக்குவிக்கிறது. இது வவுனியா பல்கலைக்கழகத்தில் உள்ள பல்வேறு நிலையங்கள் மற்றும் அலகுகளால் ஆதரிக்கப்படுகிறது.

மாணவர்கள் தங்கள் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கான கற்றல் பாட தொகுதிகள் மூலம் தங்கள் அறிவையும் திறமையையும் வளர்த்துக் கொள்கிறார்கள். கல்வி நிகழ்ச்சித்திட்டங்களுடன் சேர்த்து பல்வேறு தொழில்முறை அமைப்புக்களில் சிறந்து விளங்குவதற்குத் தேவையான மிகச் சிறந்த தொடர்பாடல், மென்மையான மற்றும் தகவல் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்துவதற்கு அவை வலியுறுத்தப்படுகின்றன.

மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையிலான நல்ல தொடர்பு வலுவான வழிகாட்டல் உறவுகளுக்கு வழிவகுக்கிறது. மேலும், பீடம் வவுனியா சமூகத்துடன் உறுதியான உறவுகளைக் கொண்டுள்ளதுடன் பிரதேசத்தில் நடைபெறும் அனைத்து அபிவிருத்தி முயற்சிகளின் ஆலோசனைத் திறன்களில் முக்கிய மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த பங்காளியாகக் காணப்படுகிறது.

**சாதனைகள்**

**பீடம்:**

இளங்கலை பட்டதாரிகளின் தொழில்முனைவோர் திறன்களை வளர்ப்பதற்கும், ஆராய்ச்சி மூலம் புதுமையான தயாரிப்புக்களை உருவாக்குவதற்கும், நிலைத்தன்மையை அடைந்துகொள்வதற்கும் வணிக அபிவிருத்தி மற்றும் கண்டுபிடிப்பு பிரிவை (BIIC) நிறுவுவதற்காக இந்த கருத்து உருவாக்கப்பட்டது. BIIC இரண்டு உப பிரிவுகளைக் கொண்டுள்ளது: உயிரியல் விஞ்ஞான துறைக்கான BIIC (BIIC-DB) மற்றும் பௌதீக விஞ்ஞான துறைக்கான BIIC (BIIC-DP).

**AHEAD மானியம்**

தயிர் உற்பத்தி, சுற்றுச்சூழலுக்கு உகந்த தட்டு தயாரித்தல், சிலேஜ் உற்பத்தி, காளான் உற்பத்தி, மீன்வளர்ப்பு மற்றும் தேனீ வளர்ப்பு ஆகியவற்றிற்கான அலகுகள் AHEAD மானியத்தின் கீழ் மேலும் செயற்படும் வகையில் மேம்படுத்தப்பட்டன.

கணனி உதவி மொழி கற்றல் (CALL) ஆய்வுகூடம் ஆங்கில மொழி திறன்களை மேம்படுத்தும் வகையில் முழுமையாக செயற்படும் வகையில் உருவாக்கப்பட்டது.

மேலும், மாணவர்கள் மற்றும் பதவியணியினரின் ஆராய்ச்சி திறன்களை வலுப்படுத்துவதற்கு பின்வரும் ஆராய்ச்சி ஆய்வுக்கூடங்கள் மேலும் உருவாக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டன.

- கையெழுத்துப் பிரதி எழுதும் ஆய்வுகூடம்
- உட்பொதிக்கப்பட்ட முறைமைகள் ஆய்வுகூடம்
- மல்ரிமீடியா ஆய்வுகூடம்
- கணனி பார்வை ஆய்வகம்
- உயர் செயலாற்றல் கணனி ஆய்வுகூடம்

**STHRD செயற்திட்டம்**

மேலதிக மாணவர் சேர்க்கைக்கான தளபாடங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக STHRD செயற்திட்டத்தின் மூலம் UGC ஆல் ரூபா 20 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

**நிகழ்ச்சித்திட்ட மதிப்பாய்வின் முடிவு – 2020**

பீடத்தில் ஒவ்வொரு பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கும் பின்வரும் தரங்கள் பெறப்பட்டன:

- ⊙ பிரயோக கணிதம் மற்றும் கணனி/ கணனி விஞ்ஞானத்தில் BSc – தரம் பீ
- ⊙ தகவல் தொழில்நுட்பத்தில் கௌரவ BSc – தரம் பீ
- ⊙ சுற்றுச்சூழல் விஞ்ஞானத்தில் கௌரவ BSc – தரம் பீ

**கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்:**

- ”உணவு கையாளுபவர்களுக்கான நல்ல சுகாதார நடைமுறைகள்” என்ற சான்றிதழ் கற்கைநெறி மற்றும் உணவு உற்பத்தி வணிகங்களுக்கான நல்ல நடைமுறைகள் பற்றிய ஒரு குறுகிய கற்கைநெறி என்பன PTB தொடர்பாக உருவாக்கப்பட்டது.
- வவுனியா பல்கலைக்கழகத்தில் பைலட் கொக்கோ (தியோப்ரோமா கொக்கோ எல்.) பயிர்ச்செய்கைக்கான எண்ணக்கரு டிரினிடாட் கொக்கோ ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்து உருவாக்கப்பட்டது.
- ”உணவு-உற்பத்தி வணிகங்களின் நல்ல நடைமுறைகள்” பற்றிய கையேடு வவுனியா பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டதுடன் ஜேர்மனியின் தேசிய அளவியல் நிறுவனமான PTP ஆல் உருவாக்கப்பட்டது.
- AHEAD செயற்திட்டத்தின் கீழ் சுற்றாடல் விஞ்ஞானத்தில் கௌரவ BSc பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கான பாடத்திட்டம் திருத்தப்பட்டது.

**கல்விச் சாதனைகள்:** கலாநிதி (திருமதி) எஸ்.விஜிதரன் தாய்லாந்தில் உள்ள ஆசிய தொழில்நுட்ப நிறுவனத்தில் இயற்கை வளங்கள் முகாமைத்துவத்தில் அவரது PhD பட்டத்தை பூர்த்தி செய்துள்ளார்.

**பயிற்சி மற்றும் செயலமர்வுகளுக்கான வளவாளர்**

FAS இன் பதவியணியினர் செயலமர்வுகள் (01), விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்/ கருத்தரங்குகள் (02) மற்றும் நடைமுறை அமர்வுகளை (02) நடாத்துவதற்கு வளவாளர்களாகப் பணியாற்றினர்.

**ஆராய்ச்சி சாதனைகள்:**

**வெளியீடுகள்:** உறுப்பினர்கள் 13 இதழ் கட்டுரைகளை வெளியிட்டுள்ளதுடன் உள்ளூர் மற்றும் சர்வதேச மாநாடுகளில் 23 ஆராய்ச்சி கட்டுரைகள்/ சுருக்கங்களை வழங்கியுள்ளனர்.

**வவுனியா விஞ்ஞான இதழ்:** தொகுதி 2, வெளியீடு 1 ஆனது 2023 ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கப்பட்டது. இது ஸ்ரீ லங்கன் ஜேர்னல்ஸ் ஒன்லைனில் (SLJOL) சேர்க்கப்பட்டுள்ளது.

**வருடாந்த ஆராய்ச்சி மாநாடு:** இலங்கையின் வவுனியா பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்தின் நான்காவது பீட வருடாந்த ஆராய்ச்சி அமர்வு (FARS 2023) 2023 ஒக்தோபர் 25 இல் ”உலகளாவிய நல்வாழ்வுக்கான விஞ்ஞான கண்டுபிடிப்புக்களை ஆராய்தல்” என்ற தலைப்பில் நடைபெற்றது. இலங்கைப் பல்கலைக்கழகங்களின் இளங்கலைப் பட்டதாரிகள் ASRC-2023 இற்கு பங்களிப்பதற்கு தங்கள் ஆராய்ச்சிப் படைப்புக்களை சுருக்கமாகவும் சுவரொட்டிகளாகவும் சமர்ப்பிப்பதன் மூலம் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

**புதுமைகள் மற்றும் புலமைச் சொத்துக்கள்:**

- இலங்கையின் முல்லைத்தீவு மாவட்டம் மண்ணக்கண்டலில் உலகின் முதலாவது ”I” வடிவ மின்சார வேலியை நிறுவுதல்.
- நன்னாரி ஒருங்கிணைந்த கூட்டுவாழ் தயிர் உருவாக்கப்பட்டது.




**பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயலமர்வுகள்:**
பிரயோக விஞ்ஞான பீட பதவியணியினா் மற்றும் மாணவர்களுடன் தொடர்புடைய 02 பயிற்சி அமர்வுகள் மற்றும் 14 செயலமா்வுகளை பீடம் ஏற்பாடு செய்தது.

**மாணவர்களின் சாதனைகள்:**

- அளவுகோல்களின் அடிப்படையில் மூன்று மாணவர்களுக்கு பீட விருது வழங்கப்பட்டது.
- லோகநாதன் நினைவு தங்கப் பதக்கம் பொது மற்றும் விசேட சுற்றாடல் விஞ்ஞானத்தில் அதிக OGPA பெற்ற 02 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

AIESEC உலகளாவிய தன்னார்வ வாய்ப்புக்கள் மூலம் WCWW அறக்கட்டளையில் குறியீட்டு பயிற்றுவிப்பாளர்களாக நான்கு மாணவர்கள் ”திறமையை வளர்த்தல் செயற்திட்டத்தில்” பங்கேற்றனர். உலகளாவிய தன்னார்வத் தொண்டுக்காக அவர்களுக்கு மதிப்புமிக்க சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

**தோல்விகள் மற்றும் நியாயப்படுத்தல்:**

- பௌதீக விஞ்ஞான துறை கட்டிடத்தின் முதலாவது தளத்தை நிர்மாணிப்பதில் தாமதம் ஏற்பட்டது. உயர்கல்வி அமைச்சிற்கும் இந்திய உயர் ஸ்தானிகராலயத்திற்கும் இடையே புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தில் கைச்சாத்திடுதல் செயன்முறையில் உள்ளது.
- அரசாங்க கொள்கைகள் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை நிரப்ப முடியவில்லை.

**எதிர்கால திட்டங்கள்**

- சுற்றுச்சூழல் விஞ்ஞான துறையில் முதுகலை பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்குதல்.
- தரவு விஞ்ஞானத்தில் புதிய இளங்கலை பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்குதல்.
- தற்போதுள்ள பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான சிறப்புக்களை அறிமுகப்படுத்துதல்.
- பௌதீக விஞ்ஞான துறையை கணனி விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் கணிதம் மற்றும் புள்ளிவிபரவியல் துறை என இரண்டாகப் பிரித்தல்.
- டிப்ளமோ/ குறுகிய/ சான்றிதழ் கற்கைநெறிகளைத் தொடங்குவதற்கு பாடத்திட்டத்தை உருவாக்குதல்.
- உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் மற்றும் தொழில்துறைகளுடன் ஒத்துழைத்தல்.

## 3.2 வணிகக் கற்கைகள் பீடம்



**பேராசிரியர் வை. நந்தகோபன், பீடாதிபதி**

**அறிமுகம்**
வணிகக் கற்கைகள் பீடம் 1997 இல் பொருளாதாரம் மற்றும் முகாமைத்துவத் துறை மற்றும் கணக்கியல் மற்றும் நிதித் துறையை நிறுவியதன் மூலம் அதன் கல்வி நடவடிக்கைகளைத் தொடங்கியது. பின்னர், 2021 மார்ச் 21 இல் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு மேலும் பல துறைகளை உருவாக்க பீடங்களை அனுமதித்தது.

பீடம் ஏழு துறைகளான: வணிகப் பொருளாதாரம், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், செயற்திட்ட முகாமைத்துவம், முகாமைத்துவம் மற்றும் தொழில்முனைவு, மனித வள முகாமைத்துவம், கணக்கியல் மற்றும் நிதி மற்றும் ஆங்கில மொழி கற்பித்தல் ஆகியவற்றை கொண்டுள்ளது.

பீடம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் 1000 மாணவர்களை இலக்காகக் கொண்டு பல்வேறு இளங்கலை பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகிறது. வர்த்தகம் மற்றும் கலை பிரிவில் க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் வணிகக் கற்கைகள் பீடத்திற்குள் நுழையும் மாணவர்களுக்கு வணிக முகாமைத்துவமானி (BBM) கௌரவ பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் வழங்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் வருடாந்தம் 216 மாணவர்களின் குழுவானது நான்கு விசேட பிரிவுகளான: கணக்கியல் மற்றும் நிதி, சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், வணிக பொருளாதாரம் மற்றும் மனித வள முகாமைத்துவம் ஆகியவற்றில் வணிக முகாமைத்துவமானி (BBM) கௌரவ பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் அனுமதிக்கப்படுகிறது

மேலும், பீடம் புதிய பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை– செயற்திட்ட முகாமைத்துவத்தில் BBM (BBM in PM) அறிமுகப்படுத்தியது. இது 2014/15 கல்வியாண்டில் தொடங்கியது. 2017/2018 கல்வியாண்டில் செயற்திட்ட முகாமைத்துவத்தில் கௌரவமாக பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் தரம் உயர்த்தப்பட்டது. தற்போது, அனைத்து பிரிவுகளிலிருந்தும் 101 மாணவர்கள் இந்த பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். எமது பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் இளங்கலைப் பட்டதாரிகளுக்குத் தொழில்முறை பரீட்சைகளில் தகுதிபெற்று போட்டியிடுவதற்கும், நேர்மறை மனப்பான்மை, புத்திக்கூர்மை மற்றும் தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கும் நல்ல அடித்தளத்தை வழங்குகின்றன.

ஆசிரியர் குழுவில் 32 கல்வியாளர்கள் மற்றும் கல்விசாரா மற்றும் நிர்வாக ஊழியர்கள் உள்ளனர். கூடுதலாக, ஆசிரியர் ஒரு ஐவு ஆய்வகத்துடன் நான்கு கட்டிடங்களைக் கொண்டுள்ளது. இந்த கட்டிடங்கள் கல்வி மற்றும் நிர்வாக நோக்கங்களுக்காக மொத்த திறனில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பீடம் 32 கல்வியாளர்கள் மற்றும் கல்விசாரா மற்றும் நிர்வாக பதவியணியினரின் திறமையான குழுவைக் கொண்டுள்ளது. மேலும், பீடம் ஒரு IT ஆய்வுகூடத்துடன் சேர்த்து நான்கு கட்டிடங்களைக் கொண்டுள்ளது. இந்த கட்டிடங்கள் கல்வி மற்றும் நிர்வாக நோக்கங்களுக்காக மொத்த திறனில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பல்வேறு துறைகளில் பதவியணியினர் வெளியீடுகள் மற்றும் தொடர்பாடல்கள் பின்வருமாறுள்ளன:
- மொத்த இதழ் வெளியீடுகள்: 21
- மொத்த தொடர்பாடல்கள்: 16
- ஒட்டுமொத்த பங்களிப்புக்கள் (வெளியீடுகள்): 37

இது பல்வேறு ஆய்வுத் துறைகளில் ஆராய்ச்சி மற்றும் பரப்புதலில் பீடங்களின் தீவிர ஈடுபாட்டைக் காட்டுகிறது.

**கழக செயற்பாடுகள்:**

சந்தைப்படுத்தல் கழகம் - 11 செயற்பாடுகள், HR கழகம் - 9 செயற்பாடுகள், Econ கழகம் - 9 செயற்பாடுகள், கணக்கியல் மற்றும் நிதி கழகம் - 10 செயற்பாடுகள், PM கழகம் - 9 செயற்பாடுகள், மற்றும் மாணவர் சங்கம் - 6 செயற்பாடுகள்.

**விருதுகள்**

- ஆராய்ச்சி சிறப்பு விருது (2023 செப்தெம்பர் 27): திரு. அருப்பிள்ளை தயாபரன் வணிகக் கற்கைகள் பீடத்தின் 26வது ஆண்டு விழாவில் இந்த விருதைப் பெற்றார்.
- சிறந்த கட்டுரை விருது (2023 ஆகஸ்ட் 16): திரு. அருப்பிள்ளை தயாபரன் இலங்கை றுகுணு பல்கலைக்கழகத்தில் இந்த விருதைப் பெற்றார்.
- சிறந்த சுவரொட்டியை வழங்குதல்: திருமதி கே.பி.டபிள்யூ.டி.ஆர். வீரசிங்க இலங்கையின் களனி பல்கலைக்கழகத்தில், வணிகம் மற்றும் தகவல் தொடர்பான 14வது சர்வதேச மாநாட்டில், SDG இளைஞர் உச்சி மாநாட்டில், தனது கட்டுரைக்காக அங்கீகரிக்கப்பட்டார்.
- சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டத்திற்கான புலமைப்பரிசில்: புதிய கலப்பு கற்பித்தல் மற்றும் கற்றல் காலங்களுக்கு ஏற்ப இந்திய அரசாங்கத்தால் வழங்கப்படுகிறது.

**நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள்**

20 செயல்பாடுகள்



**தோல்விகள் மற்றும் நியாயப்படுத்தல்கள்**

- பீட கட்டிட வளாகம்: தேசிய திட்டமிடலால் அங்கீகரிக்கப்பட்ட புதிய பீட கட்டிட வளாகத்தை கட்டும் திட்டம் நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக நிறுத்தப்பட்டது.
- மாணவர் வசதிகள்: மாணவர்களுக்கு போதிய கற்றல் மற்றும் கற்பித்தல் வசதிகளை வழங்கத் தவறியது, மோசமான திறைசேரி நிதி ஒதுக்கீட்டின் காரணத்தால் ஏற்பட்டது.

*வடக்கில் பதவியணியினர் மாறுதல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு MAG உடன் புரிந்துணர்வு விஞ்ஞாபனம் கைச்சாத்திடப்பட்டது*

**எதிர்கால திட்டங்கள்**

- ஆங்கிலத்தில் சான்றிதழின் ஆரம்பம்
- மேம்பட்ட HRM நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பம்
- தனிப்பட்ட நிதி முகாமைத்துவத்தில் டிப்ளோமா ஆரம்பம்
- செயற்திட்ட முகாமைத்துவம் தொடர்பான இளங்கலை சிம்போசியத்தை நடாத்துதல்
- வணிக கற்கைகள்-2024 (RCBS) தொடர்பான ஆராய்ச்சி மாநாட்டை நடாத்துதல்

## 3.3 தொழில்நுட்பக் கற்கைகள் பீடம்



**திரு. வி. செந்தூரன், பீடாதிபதி**

**அறிமுகம்**

தொழில்நுட்ப கற்கைகள் பீடம் வவுனியா (வடக்கு மாகாணம்) பம்பைமடுவில் உள்ளது. வாடிக்கையாளர்கள் மற்றும் சமூகத்திற்கான பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு தேவையான நேர்மறையான அணுகுமுறை மற்றும் நெறிமுறைகளுடன் திறமையான தொழில்நுட்ப நிபுணரின் வகிபங்கை நிறைவேற்றுவதற்கு அடிப்படை அறிவு மற்றும் திறன்களைப் புரிந்துகொண்டு பட்டதாரிகளை தொழில்நுட்பக் கற்கைகள் பீடம் உருவாக்குகிறது. அவர்கள் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கான அறிவார்ந்த தொடக்கங்களைக் கொண்டு தேவையான திறன்களை வளர்த்துக் கொள்வதற்கு சுயாதீன கற்றல் மூலம் புதுமையாக இருப்பார்கள். பொருத்தமான தொழில்நுட்பத் துறைகளைக் கொண்ட பட்டதாரிகள் வளர்ச்சி சவால்களை எதிர்கொண்டு நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை சந்திக்கலாம். தொழில்நுட்பக் கற்கைகள் பீடம் இளங்கலைப் பட்டதாரிகளுக்கு தகவல் மற்றும் தொடர்பாடல் கௌரவ தொழில்நுட்பத்தில் உயர் கோட்பாடு மற்றும் நடைமுறை சார்ந்த இளங்கலை பட்டப்படிப்பை வழங்கும் ஒரு கல்வித் துறையைக் கொண்டுள்ளது.

**சாதனைகள்**

- வவுனியா பல்கலைக்கழகத்தின் தொழிநுட்பக் கற்கைகள் பீடம் 2023.12.13 இல் STEM துறைகளில் மாணவர் சேர்க்கை விரிவாக்கம் தொடர்பான மாநாட்டில் உலக வங்கி செயற்திட்டத்தின் கீழ் அதனது AHEAD மானியத்தை பூர்த்தி செய்து வழங்கியது.
- UGC விசேட மானியத்தின் கீழ் TCL-2 (கணனி ஆய்வுகூடம்) ஐ பூர்த்திசெய்தல்.
- ICT துறையானது 2023.11.30 மற்றும் 2023.12.01 இல் கொழும்பில் உள்ள தேசிய பாடசாலைகளில் உயர்தர ICT கருத்தரங்கை நடாத்தியது. கருத்தரங்கில் பாடசாலையை சேர்ந்த மூன்று உயர்தர மாணவர்கள் கலந்து கொண்டனர்.
- ICT துறை வடமராட்சி கல்வி வலயத்திற்கான A/L கடந்தகால வினாத்தாள் திருத்தக் கருத்தரங்கு 2023 ஒக்தோபர் 09 மற்றும் 10 இல் வடமராட்சி கணனி வள நிலையத்தில் நடைபெற்றது.
- ஐகன்ஸ் பிஸ்னஸ் சேர்விஸ் பிறைவேட் லிமிட்டட்டுடன் புரிந்துணர்வு விஞ்ஞாபனம் 2023.05.03 இல் கைச்சாத்திடப்பட்டது. மேலும், ஐகன்ஸ்ஸின் நிறுவுனர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர் மாணவர்களுக்கு பகுதி நேர வேலைகள் மற்றும் திறன் மேம்பாட்டை வழங்குவதற்காக தொழில்நுட்ப கற்கைகள் பீடத்தில் தொழிற்பயிற்சி மையத்தை தொடங்கினார்.

**பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயலமர்வுகள்/ மாநாடுகள்:**

- ICT துறையின் விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதது) திரு.வி.வினோஹரன் மற்றும் ICT துறையின் விரிவுரையாளர் (தகுதிகாண்) திருமதி பி.நிரோஸி ஆகியோர் 2023.12.13 இல் STEM துறைகளில் மாணவர் சேர்க்கை விரிவாக்கம் தொடர்பான மாநாட்டில் கலந்து கொண்டு உலக வங்கி செயற்திட்டத்தின் கீழான AHEAD மானியத்தின் நிறைவு அறிக்கையை சமர்ப்பித்தனர்.
- 2023.11.15 இல் வவுனியா பல்கலைக்கழகத்தின் பதவியணியினர் அபிவிருத்தி நிலையத்தினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்ட மீளாய்வு மற்றும் SER எழுத்து செயலமர்வில் தொழில்நுட்ப கற்கைகள் பீடத்தின் கல்விசார் பதவியணியினர் பங்குபற்றினர்.
- SLASSCOM இலங்கை 2023.10.31 இல் வவுனியா பல்கலைக்கழக மாணவர்களுக்காக தனிப்பட்ட முறையில் தலைமைத்துவ அமர்வொன்றையும் Zoom

ஊடாக தரவு பகுப்பாய்வு அமர்வு ஒன்றையும் நடாத்தியது.

- Yarl Geek Challenge (YGC) அறிமுக சீசன் 12 ஆனது 2023.08.28 இல் நடைபெறும் தொழில்நுட்ப அடிப்படையிலான புதுமையான மற்றும் தொழில்முனைவு பயணத்தை மாணவர்கள் தொடங்குவதற்கான நுழைவாயிலாகும்.
- கிளவுட் தொழில்நுட்பத்திற்கான அறிமுகம் - வவுனியா பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பக் கற்கைகள் பீடத்தின் ICT துறையின் ஏற்பாட்டில், திரு ரீ. ஆதவன் அவர்களால் 2023.05.31 இல் நடாத்தப்பட்டது.
- HUEX ஆனது UI/UX, Front-End மற்றும் Back-end அபிவிருத்தி 2023.05.19 பற்றி இறுதியாண்டு மாணவர்களுக்கு ஒரு அமர்வை நடாத்தியது.
- மொசில்ல கம்பஸ் கிளப் UOV, யாழ் சேல்ஸ்போஸ் ஒஹானா உடன் இணைந்து Salesforce Basics & Apex Programming செயலமர்வை ஏற்பாடு செய்தது.
- வேர்ருசா ஸ்ரீ லங்காவால் ஏற்பாடு செய்யப்பட்ட G2C நிகழ்ச்சி - 2023.02.24 இல் இறுதியாண்டு மாணவர்களுக்கான கம்பஸ் றீச் முன்முயற்சி |வேர்ருசா ஸ்ரீ லங்கா மற்றும் SLASSCOM ஸ்ரீ லங்காவில் வாழ்க்கை.
- இலங்கையில் உள்ள LSEG 2023.02.07 இல் இறுதியாண்டு மாணவர்களுக்கான பயிற்சி ஆட்சேர்ப்பு தொடர்பான ஒரு செயலமர்வை நடாத்தியது.

**அறிவைப் பரப்புதல்**

- திருமதி பி. பிரேமிஷா (விரிவுரையாளர் (தகுதிகாண்) - ICT துறை) தலைமைத்துவம் மற்றும் அறிவு-பகிர்வு திறன்களை ஊக்குவிப்பதற்காக தொழில்நுட்பக் கற்கைகள் பீட மாணவர்களிடையே தொழில்நுட்ப சந்திப்புக் குழுவைத் தொடங்கினார்.
- ICT Expo 2023: மூன்றாம் ஆண்டு மாணவர்கள் சக மாணவர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு தங்கள் புதுமையான தொழில்நுட்ப தீர்வுகளை காட்சிப்படுத்தினர்.

**சர்வதேச பிரிவு / உடற்கல்வி**

- வேர்ருசா ஸ்ரீ லங்காவில் வாழ்கையானது 2023.03.09 இல் சங்கிரி லா கொழும்பில் நடைபெற்ற வேர்ருசா மகளிர் தின நிகழ்ச்சித்திட்ட மாணவர்களில் தெரிவுசெய்யப்பட்ட பீடங்களுக்கு ஒருமுறை புலமைப்பரிசிலை வழங்கியது.
- தமித் குமார கடந்த BICT(Hons) வினாத்தாள்களைப் பகிர்ந்து கொள்வதற்கு தந்தி BOT ஒன்றை உருவாக்கினார்.

## 3.4 நூலகம்

### அறிமுகம்

வவுனியா பல்கலைக்கழகத்தின் நூலகம் பதவியணியினா் மற்றும் மாணவர்களின் கற்பித்தல், கற்றல் மற்றும் ஆராய்ச்சி அனுபவத்தை மேம்படுத்துவதுடன், அவர்களின் அறிவு, திறன்கள் மற்றும் திறமைகளை மேம்படுத்துவதற்கு தேவையான அனைத்து தகவல்களையும் அவர்களுக்கு வழங்குவதில் முக்கியமானதாக உள்ளது. 1992 ஆம் ஆண்டில் வட மாகாண இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியின் திறப்பு விழாவுடன் இந்த நூலகம் நிறுவப்பட்டது. நூலகம் கல்விசார் பதவியணியினா் திறனில் ஒரு சிரேஷ்ட உதவி நூலகருடனும், முகாமைத்துவ உதவியாளா் பதவியணியினா் திறனில் நான்கு பதவியணியினருடனும் இயங்கி வந்தது.

### சேவை

பொருத்தமான, நாளதுவரையான, தரமான தகவல் வளங்களிற்கான விரைவானதும் சரியான நேரத்திலானதுமான அணுகலை வழங்குவதன் மூலம் அதன் நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு பல்கலைக்கழக சமூகத்தை மேம்படுத்துவதற்கு நூலகம் உறுதிபூண்டுள்ளது. நூலகம் வாசகர்களுக்கு அதன் சேவைகளைத் தொடர்ந்தது (ஏறத்தாழ 1,900).

நூலக சேகரிப்பு 16,672 புத்தகங்கள், அறிவார்ந்த இதழ்கள் மற்றும் சஞ்சிகைகள், செய்தித்தாள்கள், துண்டுப்பிரசுரங்கள், இலத்திரனியல் வளங்கள் (மின்-புத்தகங்கள் மற்றும் மின்-இதழ்கள்) மற்றும் ஓடியோ காட்சி பொருட்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது. நூலகத்திற்கு ரூபா 2,635,428.00 பெறுமதியான 303 புத்தகங்கள் நலன் விரும்பிகளிடமிருந்து கிடைத்தன.

ஒத்ததன்மை சரிபார்ப்புக்கான அங்கீகரிப்பு மென்பொருள் கல்விச் சமூகத்திற்கு பயனளிக்க பயன்படுத்தப்பட்டது. மேலும், பெயரளவு கட்டணத்தில் நகல் பிரதிசெய்தல் சேவை வழங்கப்பட்டது.

### உட்கட்டமைப்பு அபிவிருத்தி

மாணவர்கள் மற்றும் பதவியணியினரின் தேவைகளை ஒரே நேரத்தில் நிறைவேற்றும் வகையில் புதிய மூன்று அடுக்கு நூலகக் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. மேலும், ஒரே நேரத்தில் 150 மாணவர்களுக்கு இடமளிக்கும் மின்-வளப் பிரிவு உள்ளது. மேலும், இது 200 மாணவர்கள் தங்கும் கருத்தரங்கு அறை, ஒரு வீடியோ மாநாட்டு அறை, ஒரு அரிய சேகரிப்புகளுக்கான பகுதி மற்றும் ஒரு அருங்காட்சியகம் என்பவற்றைக் கொண்டுள்ளது.

### இலத்திரனியல் வளங்கள்

எமரால்ட் இன்சைட், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக செய்தித்துறை மற்றும் டெய்லர் & பிரான்சிஸ் தரவுத்தளங்கள் கிடைக்கத்தக்கனவாக உள்ளன.

### நிறுவன டிஜிட்டல் ஆராய்ச்சி களஞ்சியங்கள்

நிறுவனத்தின் பார்வையை மேம்படுத்துவதற்காக பீட உறுப்பினர்களின் அறிவார்ந்த வெளியீடுகளுடன் நிறுவன டிஜிட்டல் ஆராய்ச்சி களஞ்சியங்களை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது:

பிரயோக விஞ்ஞான பீடம் [292]; வணிக கற்கைகள் பீடம் [530]; தொழில்நுட்ப கற்கைகள் பீடம் [39]; நூலகம் [33]; பல்கலைக்கழக வெளியீடுகள் [151]

மாணவர்களின் தகவல் கையாளும் திறனை மேம்படுத்துவதற்கு தகவல் கல்வியறிவு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

### கூட்டங்கள்

இந்த ஆண்டில் ஆறு நூலக குழுக் கூட்டங்கள் நடைபெற்றன.

## 3.5 தர உத்தரவாத நிலையம்

**அறிமுகம்**

09/2019 ஆம் இலக்க ஆணைக்குழு சுற்றறிக்கைக்கு இணங்க வவுனியா பல்கலைக்கழகத்தின் தர உத்தரவாத நிலையம் (CQA) 2021 ஒக்தோபர் 01 இல் நிறுவப்பட்டது. வவுனியா பல்கலைக்கழகத்தின் மூதவையின் நிலைக்குழு CQA இன் கல்வி, நிர்வாக மற்றும் நிதிக் கட்டுப்பாடுகளை முகாமை செய்கிறது. பீட நிலை தர உறுதிப்பாட்டுச் செயற்பாடுகள், தர உறுதிப்பாட்டு துணைச்சட்டங்களின் பிரகாரம் பீட தர உறுதிப்பாட்டு பிரிவுகளால் முகாமை செய்யப்படுகின்றன.

CQA இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் சிறந்து விளங்குதலை பார்வையிடுகிறது, உயர்கல்வி முறைமையின் அனைத்து கூறுகளிலும் உறுதியான தர உத்தரவாத முறைமையை உருவாக்கி செயற்படுத்துகிறது, மேலும் உள்ளூர் மற்றும் சர்வதேச கல்வித் தரங்களின் அடிப்படையில் அனைத்து கற்பித்தல், கற்றல் மற்றும் மாணவர் ஆதரவு அச்சுகள் மற்றும் நிறுவனரீதியான அபிவிருத்திக்கான தொடர்ச்சியான முன்னேற்றங்களின் செயன்முறையை நிலைநிறுத்துகிறது.

**செயலமர்வுகள்/ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்/ செயற்பாடுகள்**

- கருத்துத் திருட்டு கண்டறிதல் கருவிகள் மற்றும் ஆராய்ச்சி மதிப்பீட்டு அளவீடுகளைக் கையாளுதல் தொடர்பான செயலமர்வு ஒன்று பெப்ரவரி 25 இல் பிரயோக விஞ்ஞான பீடத்தின் உதவி விரிவுரையாளர்கள் மற்றும் சிறப்புப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு (AHEAD மானியத்தின் கீழ்) நடாத்தப்பட்டது.
- உயர்கல்விக்கான தர அளவுருக்கள் தொடர்பான செயலமர்வு மே 04 இல் பீடாதிபதிகள், தலைவர்கள் மற்றும் கல்விசார் பதவியணியினருக்கு நடாத்தப்பட்டது.
- வவுனியா பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பக் கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி, தலைவர், உதவிப் பதிவாளர் மற்றும் பதவியணியினருக்கு நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுக்கான சுய மதிப்பீட்டு அறிக்கை எழுதுதல் தொடர்பான செயலமர்வு நவம்பர் 15 இல் நடாத்தப்பட்டது.

**வெளியக மீளாய்வு அறிக்கைகளில் உள்ள பரிந்துரைகளை அமுல்ப்படுத்துவதற்கான செயல்நடவடிக்கைத் திட்டங்கள்**

பிரயோக கணிதம் மற்றும் கணனியில் விஞ்ஞானமானி - மீளாய்வு அறிக்கையின் இறுதிப் பதிப்பு 2023.09.14 இல் பெறப்பட்டது. இதற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**ஆண்டிற்கான ஏதேனும் ஏனைய செயற்பாடுகள்/ சிறப்பம்சங்கள்**

- கலாச்சார நிலையம் 2023.03.15 இல் ஐ.வை. யகோவ்லெவ் சுவாஸ் அரச கல்வியியல் பல்கலைக்கழகம், ரஷ்யா உடன் புரிந்துணர்வு விஞ்ஞாபனம் ஒன்றில் கைச்சாத்திட்டதுடன் வவுனியா பல்கலைக்கழகத்தில் ரஷ்ய மொழி மற்றும் கலாச்சாரத்திற்கான நிலையத்தை திறந்தது. இந்த நிலையம் 2023.03.15 இல் சம்பிரதாயபூர்வமாக திறக்கப்பட்டது.
- நல்லிணக்க மையம், GATE அறக்கட்டளை மற்றும் ஊடகம், மனித உரிமைகள் மற்றும் அமைதியை கட்டியெழுப்புதலிற்கான மையம் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது. புரிந்துணர்வு உடன்படிக்கை 2023.01.18 இல் கைச்சாத்திடப்பட்டது.
- நல்லிணக்க மையம் 2023 சனவரி 19 மற்றும் 20 இல் நல்லிணக்கம் மற்றும் இணக்கத்திற்கான முதலாவது சர்வதேச மாநாட்டை (ICHR 2022) நடாத்தியது. மொத்தம் 30 ஆராய்ச்சி முடிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டன.
- வணிக முகாமைத்துவமானி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளக நிகழ்ச்சித்திட்ட மதிப்பாய்வு செய்யப்பட்டு, மீளாய்வுக் குழு ஒரு அறிக்கையை சமர்ப்பித்தது.
- 2023.05.27 இல் நடைபெற்ற வவுனியா பல்கலைக்கழகத்தின் 20வது பேரவைக் கூட்டத்தின் மூலம் பரீட்சை வினாத்தாள்களை தரப்படுத்துதல் மற்றும் இரண்டாம் மதிப்பெண் இடுதலிற்கான வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

- 2023 மார்ச் 8 இல் பல்கலைக்கழகத்தின் CGEE இற்கான கொள்கையை உருவாக்குவதற்கு பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்திற்கான நிலையத்தினால் ஒரு செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது. வவுனியா பல்கலைக்கழகத்தின் 24 வது பேரவை 2023.10.07 இல் உருவாக்கப்பட்ட கொள்கைக்கு அங்கீகாரம் அளித்தது.
- மாற்றுத்திறனாளிகளுக்கான ஆதரவு மையம் ”பல்கலைக்கழக மாற்றுத்திறனாளி கையேட்டை” தயாரித்தது. இது 2023.11.25 இல் நடைபெற்ற வவுனியா பல்கலைக்கழகத்தின் 26வது பேரவையால் அங்கீகரிக்கப்பட்டது.
- இந்த ஆண்டில் தரமான கல்விக்கான அறிவை மேம்படுத்துவதற்காக, பதவியணியினர் மேம்பாட்டு நிலையம், கல்வி, நிறைவேற்று மற்றும் கல்விசாரா பதவியணியினருக்கு பதினொரு செயலமர்வுகளை ஏற்பாடு செய்தது.
22. வை. அச்சுதன், பி. சர்மதா, எஸ்.மதிவதனி (2023 சனவரி), காலனியாதிக்கத்தின் போது மோதல் தீர்வு: டெரெக் வால்காட் எழுதிய A far cry from Africa என்ற கவிதை பற்றிய ஆய்வு, நல்லிணக்கம் மற்றும் இணக்கம் பற்றிய 1வது சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை (ICHR -2022) மற்றும் 2023 சனவரி 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் நடைபெற்ற வவுனியா பல்கலைக் கழகத்தின் நல்லிணக்க நிலையத்தின் நடவடிக்கை புத்தகத்தில் வெளியிடப்பட்ட முழு ஆவணம்.

புத்தகங்கள், திருத்தப்பட்ட புத்தகங்களில் அத்தியாயம், புத்தக விமர்சனம்

23. விவேக், ஆர்., மற்றும் நந்தகோபன், வை. மற்றும் அல்டியேரி, எல் (2023). Pestle கட்டமைப்பில் ஒரு காரணியைப் பயன்படுத்தி ஒரு முறையான மதிப்பாய்வு: கொவிட்-19 தொற்றுநோய் மற்றும் பொருளாதாரச் சூழலின் விரிவாக்கம். டிஜிட்டல் சகாப்தத்தில் சிக்கனமான கண்டுபிடிப்பு மற்றும் சமூக மாற்றங்கள், IGI குளோபல்.

## 4.5 தொழில்நுட்ப கற்கைகள் பீடம்

**இதழ்கள் மற்றும் மாநாடுகள்**

1. பி. ருக்ஷானி, வி. செந்தூரன், Air-Writing தமிழ் அகரவரிசை உயிர் எழுத்துக்களை அடையாளம் காணுதல் (IJACSA- மேம்படுத்தப்பட்ட கணனி விஞ்ஞானம் மற்றும் பிரயோகங்கள் சர்வதேச இதழ்),தொகுதி.14, இல.11- 2023/11/30 Scopus Indexed Q2 Journal.
2. வி. செந்தூரன் மற்றும் பி. நிரோஷி, கணக்கீட்டு மற்றும் கணித மொடலிங் பற்றிய சர்வதேச மாநாடு (ICCMM) – 2024 இல் ”செயற்திட்ட முகாமைத்துவ நடவடிக்கைகளில் இலக்கு நிரலாக்கத்தின் செயல்திறன் பற்றிய ஆய்வு” 2024 சனவரி 26 இல் நடைபெற்ற கொழும்பு கணித மொடலிங் பல்கலைக்கழகத்திற்கான நிலையம்
3. எஸ்.சுதாஹரன், பி.ருக்ஷானி, போக்குவரத்து சிக்னல்களில் வாகன நெரிசலைக் குறைப்பதற்கான உருவகப்படுத்துதல்-அடிப்படையிலான போக்குவரத்து முகாமைத்துவ மாதிரி, 2023 5வது கணனியியலில் முன்னேற்றங்கள் பற்றிய சர்வதேச மாநாடு (ICAC)
4. பி.ருக்ஷானி, ஓஷானி எருணிகா தயாரத்ன, டி.கார்த்தீஸ்வரன், மேம்படுத்தப்பட்ட, ஸ்லைடிங் விண்டோவைப் பயன்படுத்தி கால தொடர் தரவிற்கான சிறப்புப் பிரித்தெடுத்தல்: Carnatic Tala இன் ஒரு விடய ஆய்வு, 2023 5வது 5வது கணனியியலில் முன்னேற்றங்கள் பற்றிய சர்வதேச மாநாடு (ICAC), மற்றும் IEEE
5. தர்சா நிரோஜ், ருக்ஷானி புவனேந்திரன், நெல் நோய் வகைப்பாட்டிற்கான ஒரு குறுக்கு டொமைன் ஹைப்ரிட் மொடல், 2023 5வது கணனியியலில் முன்னேற்றங்கள் பற்றிய சர்வதேச மாநாடு (ICAC), IEEE.
6. ஜீ. சாலினி, ரீ. அபிராமிதன், என். வேணுஜா, வி. செந்தூரன், பல முகபாவனைகளின் அடிப்படையில் சோர்வைக் கண்டறிவதற்கான ஒரு குழும முறை, இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் 9வது சர்வதேச மாநாடு மற்றும் 4வது சீனா-இலங்கை தொடர்பாடல் மற்றும் கூட்டுத்தாபன மன்றம்
7. பி. கோஜிகா, வி. செந்தூரன், Bitcoin பரிவர்த்தனைகளில் மோசடி கண்டறிதல் செயல்திறனை மேம்படுத்துவதற்கான இயந்திர கற்றல் நுட்பங்களை மேம்படுத்துதல், இலங்கை மாணவர்களின் கணனி விஞ்ஞானம் குறித்த பயிற்சி செயலமர்வு நடவடிக்கைகள், யாழ்ப்பாணம், இலங்கை 2023 திசெம்பர்.
8. ஈ.எம்.எம்.டபிள்யூ. எதிரிசிங்க, வி. வினோகரன், இயந்திர கற்றலைப் பயன்படுத்தி போலிச் செய்திகளைக் கண்டறிதல், கணனி விஞ்ஞானம் தொடர்பான இலங்கை மாணவர்களின் செயலமர்வு நடவடிக்கைகள், யாழ்ப்பாணம், இலங்கை 2023 திசெம்பர்.
9. எம். ஷகானா, வி. வினோஹரன், ஆர். யசோதா, CNN ஐப் பயன்படுத்தி இந்திய கை அசைவு இனங்காணல், கணனி விஞ்ஞானம் தொடர்பான இலங்கை மாணவர்களின் செயலமர்வு நடவடிக்கைகள், யாழ்ப்பாணம், இலங்கை 2023 திசெம்பர்.

# 5 மூலதன வேலைகள் மற்றும் திட்டமிடல்

## 5.1 அறிமுகம்

மூலதன வேலைகள் மற்றும் திட்டமிடல் பிரிவு கற்பித்தலுக்கும் கற்றலுக்கும் ஆராய்ச்சிக்குமான நடவடிக்கைகளுக்கு உகந்த சூழலை உறுதி செய்வதற்காக, கட்டடங்களையும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளையும் வழங்குகிறது. மேலும் இப்பிரிவு வேலையின் தரத்தைப் பராமரிப்பதுடன் அபிவிருத்திக்கும் புனரமைப்புக்குமான செயற்றிட்டங்கள் இணங்கப்பட்ட கால எல்லை, நிதி ஒதுக்கீடு என்பவற்றுக்குள் திட்டமிடப்பட்டுச் செயற்படுத்தப்படுவதை உறுதிப் படுத்துகிறது.

மூலதன வேலைகள் மற்றும் திட்டமிடல் பிரிவின் முதன்மைச் செயற்பாடு வவுனியாப் பல்கலைக்கழகத்தின் மூலதனக் கட்டடச் செயற்றிட்டங்களை அதனைப் பயன்படுத்தவுள்ள துறையினரின் தேவைகளுக்கேற்ப திட்டமிடுதலும் பெறுகை செய்தலும் கண்காணித்தலுமாகும். மேலும், இவற்றுடன் தொடர்புடைய பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல், நிருமாணப் பணிகளைக் கண்காணித்தல், செயற்றிட்டங்களின் ஆவணங்களையும் ஒப்பந்தத் தொடர்புகளையும் பேணுதல், இடைக்காலக் கொடுப்பனவுச் சான்றிதழ்களைச் சான்றுப்படுத்துதலும் வழங்குதலும், சிட்டைகளுக்குக் கொடுப்பனவைப் பெற்றுக்கொடுத்தல், தகராறுகளைக் கையாளுதல், சோதனையை ஒருங்கிணைத்தலும் செயற்படுத்துதலும், வெற்றிகரமாகச் செயற்றிட்டத்தைப் பூர்த்தியாக்கி அதனைக் கையகப்படுத்துதல் ஆகியன ஏனைய செயற்பாடுகளாகும்.

**நடந்தேறிவரும் நிருமாணச் செயற்றிட்டம்**

நூலகத்துக்கான மூன்று மாடிக் கட்டடங்கள், சேவைகள் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புகளின் வடிவமைப்பு, நிருமாணம் மற்றும் செயற்படுத்தல் செயற்றிட்டம் - இது 2019 இல் ரூபா.312 மில்லியனுக்கு சென்ற்ரல் எஞ்ஜினியரிங் சேர்வீஸஸ் (பிறைவேற்) லிமிற்றெட்டிற்கு வழங்கப்பட்டது. இச்செயற்றிட்டத்துக்கான வேலைகள் 2023 இலும் நடைபெற்றுவருகின்றன.

**அங்கீகாரம் அளிக்கப்பட்ட புதிய நிருமாணச் செயற்றிட்டங்கள்**

1. பிரயோக விஞ்ஞான பீடத்து பௌதிக விஞ்ஞானத்துறைக் கட்டடத்தின் முதல் மாடியின் நிருமாணப் பணியை ரூபா.84 மில்லியனுக்குப் பூர்த்திசெய்தல்.
2. நிருவாகக் கட்டடத்தை ரூபா.584 மில்லியனுக்குப் பூர்த்தி செய்தல்.
3. கல்வி மற்றும் நிறைவேற்றுப் பதவியணியினருக்கான மூன்றடுக்குக் குடியிருப்புத் தொகுதியையும் (10 அலகுகள்) கல்விசாராப் பதவியணியினருக்கான இரண்டடுக்குத் தனியாள் தங்குமிடத்தொகுதியையும் ரூபா.350 மில்லியனுக்கு நிருமாணித்தல்.
4. வியாபாரக் கற்கைகள் பீடத்துக்கான கட்டடம் மற்றும் ஏனைய தொடர்புடைய கட்டமைப்புக்கள் - கட்டம் II ஐ ரூபா.926 மில்லியனுக்கு நிருமாணித்தல்.

**முன்மொழியப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்**

1. ரூபா.600 மில்லியனுக்குக் கேட்போர் கூடக் கட்டடத்தை நிருமாணித்தல்.
2. ஆண்கள் விடுதிகள், பெண்கள் விடுதிகள், பதவியணியினர் குடியிருப்புக்கள் உள்ளடங்கிய குடியிருப்புப் பகுதிகளுக்கு ரூபா.60 மில்லியனுக்குக் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்தல்.
3. ரூபா.244 மில்லியனுக்கு மாணவர் நிலையத்துக்கான இரண்டு மாடிக் கட்டிடத்தை நிருமாணித்தல்.
4. 400 மாணவர்களுக்கான நான்கு மாடிகள், 100 அறைகள் கொண்ட விடுதிக் கட்டடத்தை ரூபா.400 மில்லியனுக்கு நிருமாணித்தல்.
5. தொழில் நுட்பக் கற்கைகள் பீடத்துக்கான கட்டடம் - கட்டம் II ஐ ரூபா.978 மில்லியனுக்கு நிருமாணித்தல்.
6. விருந்தினர் இல்லத்திற்கு ரூபா.45 மில்லியனுக்கு இரண்டு மாடிக் கட்டடத்தை நிருமாணித்தல்.
7. உடற்கல்விப் பிரிவுக்கான மூன்று மாடிக் கட்டடத்தை ரூபா.92 மில்லியனுக்கு நிருமாணித்தல்.
8. பிரயோக விஞ்ஞான பீடத்துக்கான நிருவாகக் கட்டடத்தை ரூபா.571 மில்லியனுக்கு நிருமாணித்தல்.

## 5.2 முக்கிய மீள்திருத்த மேம்பாட்டுப்பணிகள்

நிதி நெருக்கடிக்கு மத்தியிலும் மீள்திருத்த மேம்பாட்டுப் பணிகளைப் பல்கலைக்கழகம் மேற்கொண்டது.

| பணிகளின் பெயர் | ஒப்பந்த விலை (ரூபா. சதம்.) |
|---|---|
| அலகுகள் மற்றும் நிலையங்களுக்காக பழைய நூலகக் கட்டடத்தை மாற்றியமைத்தல் | 2,602,138.86 |
| வியாபாரக் கற்கைகள் பீடத்தில் வீதிப்பணி | 2,756,181.50 |
| தொழில் நுட்பக் கற்கைகள் பீடத்தில் கணினி ஆய்வுகூடத்தை நிறுவுதல் | 9,184,048.39 |
| பிரதான விநியோக சபையின் மின்சார நிறுவல் | 4,056,419.40 |
| பெண்கள் விடுதிகள் ஏ, சீ ஆகியவற்றில் மலசலகூடக்கதவுகளை மாற்றுதல் | 1,519,290.96 |
| மோட்டார் கிரேடர், ஜே.சீ.பீ. இயந்திரம், ட்ராக்டர் ஆகியவற்றை வாடகைக்கு அமர்த்துதல் | 1,153,741.90 |

# 6 மாணவர் நலன்புரி

## 6.1 அறிமுகம்

மாணவர் நலன்புரி பிரிவு மாணவர்களுக்கு பின்வரும் சேவைகளை வழங்குகிறது.

- தங்குமிட வசதிகளை வழங்குதல்.
- மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் மற்றும் ஏனைய புலமைப்பரிசில்களின் ஒருங்கிணைப்பு.
- உதவித்தொகைகளை தெரிவுசெய்து வழங்குதல்.
- மாணவர்கள் மற்றும் பதவியணி உறுப்பினர்களுக்கான சிற்றுண்டிச்சாலை வசதிகளைக் கையாளுதல்.
- மாணவர் சங்கங்களை உருவாக்குவதை எளிதாக்குதல்.
- மாணவர்களால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகளுக்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்வதை எளிதாக்குதல்.
- மடிக் கணனி கடனைப் ெற்றுக்கொள்வதற்கு மாணவர் உறுதிப்படுத்தல் கடிதங்கள் மற்றும் பரிந்துரைகளை வழங்குதல்.

## 6.2 பீடங்களின் மாணவர் சங்கங்கள்

**ஒவ்வொரு பீடத்திற்குமான தேர்தல் திகதி**

- பிரயோக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம் – 2022.12.01
- வணிகக் கற்கைகள் மாணவர் ஒன்றியம் – 2022.12.01
- தொழில்நுட்பக் கற்கைகள் மாணவர் ஒன்றியம் – 2022.12.01
- வவுனியா பல்கலைக்கழக பொது மாணவர் ஒன்றியம் – 2022.12.09

## 6.3 நிதி உதவி

## 6.4 மஹாபொல புலமைப்பரிசில்கள்

2023 ஆம் ஆண்டில் புதிதாக நுழைபவர்கள் மற்றும் சிரேஷ்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 5000.00 மஹாபொல புலமைப்பரிசில்களின் (ரூபா 2450.00 திறைசேரி பங்களிப்பு மற்றும் மாதம் ஒன்றுக்கு ஒவ்வொரு மாணவருக்குமான ரூபா 2550.00 மஹாபொல நம்பிக்கைப்பொறுப்பின் பங்களிப்பு) மாதாந்த பிரித்தெடுப்புக்கள்.; மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மொத்தத் தொகை **ரூபா 7,663,600.00** ஆகும்.

## 6.5 உதவித்தொகைகள்

உதவித்தொகையின் மாதாந்த பிரித்தெடுப்பு மாதமொன்றிற்கு ஒவ்வொரு மாணவருக்கும் ரூபா 4000 ஆகும், இது 2023 ஆம் ஆண்டில் புதிதாக சேருபவர்கள் மற்றும் சிரேஷ்ட மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மொத்தத் தொகை **ரூபா 39,264,000.00** ஆகும்.

## 6.6 பட்டதாரிகளுக்கான விடுதி வசதிகள்

இடம் குறைந்ததால் முதலாம் ஆண்டு மற்றும் இறுதியாண்டு மாணவர்களுக்கு விடுதி வசதியை பல்கலைக்கழகம் வழங்கியது. இதில் தங்க வைக்கப்பட்ட மொத்த மாணவர்கள் 992 ஆகும், இதில் 396 ஆண்கள், மீதமுள்ளவர்கள் பெண்களாவர்.

# 7 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு அறிக்கை

**அறிமுகம்**

புதிய அரசாங்கத்தை நிறுவிய பின்னர் 2021.09.25 இல் நடைபெற்ற முதலாவது கூட்டத்தில் புதிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழுவைப் பல்கலைக்கழகப் பேரவை நியமித்தது. இக்குழு நல்லாளுகைக்கான பொதுமுயற்சிகள் வழிகாட்டலின் 7.4.1 ஆம் பந்தியில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளுக்கமைவாக, பல்கலைக்கழகத்தின் நிறைவேற்றுத் தரமல்லாத மூன்று பேரவை உறுப்பினர்களையும் பொதுத்திறைசேரியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் உறுப்பினரையும் கொண்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில், பேராசிரியர் காமினி சேனாநாயக்க, திரு கே. ஞானசிறி பிரிட்டோ, கலாநிதி எஸ். என். தணிகாசலம்பிள்ளை, துணைவேந்தர், பதிவாளர், நிதியாளர், தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் ஆகியோரின் பங்கேற்புடன் நான்கு (04) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழுக் கூட்டங்கள் நடைபெற்றன.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு, நல்லாளுகைக்கான பொதுமுயற்சிகள் வழிகாட்டல்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள், உயர்கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கெல்லையின் பிரகாரம் தனது கடமைகளைச் செய்வதுடன் நிதி, கல்வி, கல்விசாராத செயற்பாடுகள், பல்கலைக்கழகத்தின் நிருவாக நடைமுறைகளை மேம்படுத்துதல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை வலுப்படுத்துவதற்குப் பரிந்துரைகளைச் செய்கிறது.
உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு தமது அவதானிப்புகளையும் பரிந்துரைகளையும் செயற்படுத்துவதற்குத் துணைவேந்தரிடம் நேரடியாக அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்.

**முன்னேற்றம்**

இவ்வாண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு பல பரிந்துரைகளையும் வழிகாட்டல்களையும் முன்மொழிவுகளையும் மேற்கொண்டுள்ளது. அவை உள்ளகக் கட்டுப்பாட்டுக்கும் கணக்காய்வு மேம்பாட்டுக்கும் வழிவகுக்கின்றன.

**உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழுவின் வழிகாட்டலின்கீழ் உள்ளகக் கணக்காய்வுக்கும் அவதானிப்புக்குமான ஆறு அறிக்கைகள் வெளியிடப்பட்டன. பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள், பதிற்கடமையாற்றும் ஓர் உதவி உள்ளகக் கணக்காய்வாளர், ஒரு கணக்காய்வு உதவியாளர் ஆகியோரால் மேம்படுத்தப் படுகின்றன. உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு பின்வரும் பரிந்துரைகளைச் செய்துள்ளது. அவை சுருக்கமாகப் பின்வருமாறு:

1. வவுனியாப் பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமான காணிக்கான உரிமைச் சான்றிதழ் மீளாய்வும் மதிப்பீடும் செய்யப்பட்டுப் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டன.
2. பல்கலைக்கழகத்தில் கழகங்களையும் சமூகங்களையும் நிறுவுவதற்கும் பராமரிப்பதற்குமான யாப்பின் வரைவு மீளாய்வும் மதிப்பீடும் செய்யப்பட்டுப் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டன.
3. நிலையான சொத்துகளைப் பேணல், பதிவு செய்தல், கணினிமயமாக்கல் போன்ற செயற்பாடுகள் மீளாய்வும் மதிப்பீடும் செய்யப்பட்டுப் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டன.
4. பல்கலைக்கழகத்துக்கு வெளிநாட்டு ஆராய்ச்சி மானியத்தையோ அல்லது மதிப்புமிக்கதான ஏதேனும் ஒன்றையோ தொடங்குவதற்கு அவற்றை மீளாய்வும் மதிப்பீடும் செய்யப்பட்டுப் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டன.
5. விரிவுரை நடாத்துதல், வினாத்தாள் தயாரித்தல், மதிப்பெண்ணிடல் போன்ற அரையாண்டுப் பணிகளைப் பதிவேற்றம் செய்வதன்மூலம் கண்காணிப்பதற்கான பொறுப்புக்கூறல் மாதிரி மென்பொருளுக்கு மீளாய்வும் மதிப்பீடும் செய்யப்பட்டுப் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டன.
6. பல்கலைக்கழகத்திலுள்ள கல்விப் பதவியணியினரினதும் மாணவர்களினதும் ஆதரவுடன் பல்கலைக்கழகத் தேவைப்பாடுகளுக்கேற்ப மாற்றத்துடன் பரீட்சை முடிவுகளுக்கான திறந்த வளமூல மென்பொருளைத் தொடங்க மீளாய்வு செய்யப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்டு, பரிந்துரைகள் செய்யப்பட்டன.

7. அனைத்து பீடாதிபதிகள்/ பணிப்பாளர்கள்/ துறைகள்/ பிரிவுகள்/ அலகுகளின் தலைவர்கள், சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை தயாரிப்பதற்காக உள்ளக சுற்றறிக்கையை வெளியிடுவதற்கு மீளாய்வு செய்யப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்டு பரிந்துரைகள் செய்யப்பட்டன.
8. நிலையான சொத்துக்களை சரிபார்ப்பதற்கு முறைமைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளை மீளாய்வு செய்து, மதிப்பீடு செய்து, மேம்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது.
9. மனிதவள அபிவிருத்தி, ஊழியர்களின் வருகை, சரக்கு மற்றும் இருப்பு மெய்மையாய்வு, ஒப்பந்த நிர்வாகம், வருமானம், செலவினம், முதலீடுகள், பெறுகை, சம்பள முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், சொத்து முகாமைத்துவம், ஒப்பந்த சேவைகள், ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள், ஓய்வு பெறல் நலன்களை செலுத்துதல், வாகன பராமரிப்பு, பிணைமுறிகள் மற்றும் உடன்படிக்கைகளை மீறுதல், சுற்றாடல் முகாமைத்துவம், காசு முகாமைத்துவம் போன்றவை தொடர்பாக முறைமைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளை மேம்படுத்துவதற்கு மீளாய்வு செய்யப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்டு பரிந்துரைகள் செய்யப்பட்டன.

உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு அதன் வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்கள் அனைத்தையும் மாதிரி கணக்காய்வு நுட்பத்தைப் பயன்படுத்தி உள்ளடக்கியுள்ளது. மேலும், மேற்படி பிரிவு, பிணைமுறி உடன்படிக்கைகளின் மீறல் அறவீட்டு செயன்முறையை கண்காணிப்பதை இலக்காகக் கொண்டது, கணக்காய்வு ஐயவினாக்கள் மற்றும் அவற்றின் பின்தொடர்தல் நடவடிக்கைகள் குறித்து அனுப்பப்பட்ட பதில்களைக் கண்காணித்தல்.

உள்ளக கணக்காய்வானது கட்டாய வழக்கமான முன் கணக்காய்வு நடவடிக்கைகளைச் செய்துள்ளது, மேலும் 2023 இல் செய்யப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு சுருக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 7-1 முன் கணக்காய்வு நடவடிக்கைகள்

| இல. | முன் கணக்காய்வு நடவடிக்கைகள் | எண்ணிக்கைகள் |
|---|---|---|
| 01 | பல்கலைக்கழகச் சேமலாப நிதியம் (நிரந்தரமானது) | 9 |
| 02 | பல்கலைக்கழகச் சேமலாப நிதியம் (தற்காலிகமானது) | 41 |
| 03 | ஓய்வூதியப் பணிக்கொடை | 5 |
| 04 | ஓய்வூதியம் | 5 |

**எதிர்காலத் திட்டங்கள்**

வவுனியாப் பல்கலைக்கழகத்தின் நிதி, நிருவாக நடைமுறைகளை மேம்படுத்தும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை வலுப்படுத்துவதற்கான முறைமைகளையும் கட்டுப்பாடுகளையும் மீளாய்வு செய்வதற்கும் பரிந்துரைகளை வழங்குவதற்கும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழு அதனது நோக்கங்களை மேலும் விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளது. மேலும், உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு அதனது கடமைகளையும் செயற்பாடுகளையும் தடையின்றி முழுமையாகச் செய்யும் வகையில் அதன் மனிதவள ஒதுக்கீட்டை அதிகரிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

# 8 நிலையான அபிவிருத்தி இலக்குகள்

2015 இல் உருவாக்கப்பட்ட ஐ.நா.வின் நிலையான அபிவிருத்தி இலக்குகளுடன் (நி.அ.இ.) இணங்கி, எமது நிறுவனம் 17 இலக்குகளை எமது நிலைத்திருக்கும் முயற்சிகளிலும் செயற்பாடுகளிலும் ஒருங்கிணைத்துள்ளது. இவ்விலக்குகளை நடைமுறையில் எடுத்துக் காட்டுவதற்கு நாங்கள் முயலுகிறோம். நமது கல்விச்சூழலையும் சமூகத்துடனான இடைத்தாக்கத்தையும் மேம்படுத்துகிறோம்.

தரமான கல்வியை வலியுறுத்தும் நி.அ.இ. 4 ஐ பின்தொடர்வதில், பல்கலைக்கழக மட்டத்திலும் பீடங்களின் மட்டத்திலும் கல்வித்திறனைக் கண்காணிப்பதற்குப் பல்கலைக்கழக ஆராய்ச்சிக் குழுவையும் தரவுத்தரவாத நிலையத்தையும் நிறுவியுள்ளோம். தரவுத்தரவாத நிலையத்தின் பணிப்பாளர், முகாமைத்துவக்குழுவுக்கும் மூதவைக்கும் பேரவைக்கும் முன்னேற்றத்தை அறிக்கையிடுகிறார். எமது மூலோபாயத் திட்டமும் செயற்றிட்டமும் கல்வித்தரத்தையும் வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்குமான எமது அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தும் முயற்சிகளைப் பிரதிபலிக்கின்றன.

துணைவேந்தர் நிதி போன்ற ஆதரவுகள் மாணவர்களின் கல்விச் செலவினங்களை முகாமை செய்வதற்கு உதவுகின்றன. பல்கலைக்கழகத்தின் உணவகம் மலிவு விலையில் சத்தான உணவுகளை வழங்குகிறது. இதன் மூலம் ஆரோக்கியமும் நல்வாழ்வும் மேம்படுகிறது. தரவுத்தரவாத நிலையம் அனைத்துப் பட்டக்கற்கைகளிலும் கல்வித் தரத்தை நிலைநிறுத்துகிறது. அதேநேரம் பீடங்களின் முகாமைத்துவமும், பாலினச் சமவுரிமைக்கும் சமத்துவத்துக்குமான நிலையமும் எவ்விதமான பாகுபாடுகளுமின்றிய சூழலை உறுதிப்படுத்தி விழிப்புடன் செயற்படுகின்றன.

எமது பல்கலைக்கழக உட்கட்டமைப்பு சுத்தமான குடிநீரை வழங்கும் அதிநவீன சுத்திகரிப்பு அலகுகளை உள்ளடக்கியுள்ளது. மேலும் எமது சுகாதாரச்சேவைகளை மேம்படுத்த நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். எரிசக்திப் பற்றாக்குறையை எதிர்பார்த்து, சாத்தியமான சுத்தமான மலிவான எரிசக்தியைப் பாதுகாப்பதற்கு மேலதிக நிதியை ஒதுக்குவதற்குப் பல்கலைக்கழகம் தயாராக உள்ளது. நாங்கள் வேலைகளின் கண்ணியத்தை அங்கீகரித்து, நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஆதரிக்கும் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம்.

தொழிற்றுறையிணைப்புகளை ஒருங்கிணைத்து, ஒரு நெகிழ்ச்சியான உட்கட்டமைப்பை உருவாக்கப் புதுமையான உத்திகளையும் செயற்பாட்டுத் திட்டங்களையும் மேற்கொண்டு வருகிறோம். எமது நிருவாகம் சமத்துவமின்மைகளைக் குறைப்பதற்குத் தீவிரமாகச் செயற்படுகிறது. ஒவ்வொருவரும் தங்கள் உரிமைகளையும் பொறுப்புகளையும் சமனாகப் பயன்படுத்தக்கூடியவொரு சமூகத்தை உருவாக்குகிறது.

எமது கல்வியின் தாக்கத்தை அதிகரிக்க, கல்வியாளர்களுக்கிடையே சமுதாய வாழ்க்கைச் சூழலை ஊக்குவிப்பதற்காக ஒரு நகர் உருவாக்கக் கருத்தை நாங்கள் மேம்படுத்தி வருகிறோம். உயிரியல் விஞ்ஞானத்துறையானது, சுற்றுச்சூழல் நேய நடைமுறைகளை முன்னிறுத்தி, பொறுப்பான நுகர்வையும் உற்பத்தியையும் ஊக்குவித்தல், காலநிலைச் செயற்பாடுகளில் ஆராய்ச்சி முயற்சிகளை முன்னெடுத்தல் போன்றவற்றில் முன்னணியில் உள்ளது. அருகிலுள்ள நீர்ப்பாசனத் தொட்டிகளில் நீர்வாழ் உயிரினங்களைத் தக்கவைப்பதற்கும் நுண்ணிய திட்டங்கள் மூலம் நிலம் வாழ் உயிரினங்களைப் பாதுகாப்பதற்கும் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் நமது சுற்றுச்சூழலுக்கான பொறுப்பைச் சுட்டிக்காட்டுகின்றன.

எமது மூலோபாயத் திட்டத்துக்கிணங்க, எமது நிறுவனத்துக்குள் அமைதியையும் நீதியையும் வளர்ப்பதற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். பல களங்களில் நிலையான வளர்ச்சியை முன்னேற்றுவதற்கு பல பங்குடைமைகளை உருவாக்குகிறோம்.

**கல்வியின் தரம்:** எமது நிறுவனம், புதியதாக இருந்தாலும் தரமான கல்வியை வழங்குவதன் மூலம் நி.அ.இ. 4 ஐ நிறைவேற்ற அர்ப்பணிப்புடன் செயற்படுவதுடன் பல்வேறு இனப்பின்னணிகளையும் மாறுபட்ட திறன்களையும் கொண்ட பல்வேறு மாணவர்

சமூகங்களுக்கு வாழ்நாள் முழுவதும் கற்றலை ஊக்குவிக்கிறது.

**ஆண்டறிக்கையில் நிலையான அபிவிருத்தி இலக்கு:** உயர்கல்விக்கான அணுகல், உயர்கல்வியின் தரம் மற்றும் பொருத்தம் (பிரிவு 3.5) மற்றும் எமது முகாமைத்துவ முறைமைகளின் செயற்றிறன் (பிரிவு 1.6 மற்றும் 2.1) ஆகியவற்றை விபரிக்கும் எமது ஆண்டறிக்கையில் நி.அ.இ. 4 உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆராய்ச்சியில் புத்தாக்கமும் அறிவின் நிலைமாறும் ஆற்றலும் பிரிவுகள் 3, 4, 8 இல் கலந்துரையாடப் பட்டுள்ளன.

**பல்லுயிரும் சுற்றுச்சூழலும்:** வளமான சுற்றுச்சூழல் முறைமையைக் கொண்ட காடுகள் நிறைந்த பகுதியில் பல்லுயிர்ப் பெருக்கத்துக்கு எமது பல்கலைக்கழகம் ஒரு சான்றாகும். 25 ஏக்கர் நிலப்பரப்பைப் பாதுகாத்து, சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் சமநிலையான உட்கட்டமைப்பு அபிவிருத்தியை நாங்கள் செய்துள்ளோம். அரிய மருத்துவத் தாவரங்கள் உட்பட உள்ளூர் தாவரங்கள், விலங்கினங்கள் ஆகியன பொக்கிஷமாகக் கருதிப் பாதுகாக்கப்படுகின்றன.

**சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான செயற்பாடுகள்:** சுற்றுச்சூழல் சமூகம் பொலி எதிலீனின் பயன்பாட்டைக் குறைத்தல், சுற்றாடல் விஞ்ஞான மாணவர்களுக்கான வாழ்க்கை ஆய்வுகூடமாக எமது பல்கலைக்கழக வளாகத்தை மாற்றுதல் போன்ற முயற்சிகளுக்கு வழிவகுக்கிறது. சுற்றுச்சூழல் சுற்றுலாச் செயற்றிட்டங்கள் உள்ளூர் சமூகத்தைப் பாதுகாப்பு முயற்சிகளில் ஈடுபடுத்தி பல்லுயிர்ப்பெருக்கத்தின் மதிப்பை மேலும் வலியுறுத்துகின்றன,

**தாக்கம் மற்றும் தணிப்பு நடவடிக்கைகள்:** பல்கலைக்கழகம் அதன் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெச்சரிக்கையாக விரிவுபடுத்துகிறது. இலங்கையிலுள்ள பல்கலைக்கழகம் ஒன்றுக்குள் வனவிலங்குப் புகலரணை முன்னோடியாக அமைக்க விரும்புகிறது. அனர்த்த இடர் மதிப்பீடுகள் தீத்தடுப்புகளையும் நீர் சுத்திகரிப்புக்காக ஈரநிலங்களையும் உருவாக்கி, நமது இயற்கையான வாழ்விடத்தைப் பாதுகாப்பதில் நாம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை எடுத்துக் காட்டுகின்றன.

இவ்வாறான பல்வேறு முயற்சிகளின் ஊடாக, வவுனியாப் பல்கலைக்கழகம் உலகளாவிய நிலையான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்குப் பங்களிப்பதோடு ஏனைய நிறுவனங்களுக்கும் ஓர் அளவுகோலை நிருணயிக்கிறது. நிலைத்த தன்மைக்கான எங்கள் அர்ப்பணிப்பு, கொள்கையுடன் மட்டும் நின்றுவிடாமல், எமது நிறுவனத்தின் பௌதிக, சமுதாயக் கட்டமைப்பில் தீவிரமாக உட்பொதிந்துள்ளது.

# 9 நிதி அறிக்கைகள்

## 9.1 கண்ணோட்டம்

வவுனியாப் பல்கலைக்கழகம் 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 01 ஆம் திகதி இலங்கையின் 17வது அரச பல்கலைக்கழகமாக ஸ்தாபிக்கப்பட்டது. எனினும், பல்கலைக்கழகத்தின் நிதிச் செயற்பாடு 2022 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் கையளிக்கப்பட்ட தொடக்க நிலுவைத்-தொகையுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டலுடனும் ஆரம்பிக்கப்பட்டது.

மீண்டெழும் செலவீனத்தின் கீழ், மின்சாரம், இணையம், பாதுகாப்பு, சுத்தம் செய்தல் போன்ற ஒப்பந்தச்சேவைகளுக்காகப் பல்கலைக்கழகம் சுமார் 114 மில்லியன் ரூபாயைச் செலவிட்டுள்ளது.

செலவீனங்களின் அதிகரிப்பு மற்றும் தொடர்ச்சியான ஒதுக்கீட்டின் குறைப்பு ஆகியவை அரசாங்கச் செல-வீனத்தினை முகாமை செய்தல் சுற்றறிக்கை எண் 01.∴2023 இற்கேற்ப செலவீனங்களைக் கட்டுப்படுத்த பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்தது. செலவீனக் கூறுகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் செலவீனங்களைக் கட்டுப்படுத்தப் பல்-கலைக்கழகம் பல நடவடிக்கைகளை எடுத்-துள்ளதுடன் ஒவ்வொரு செலவீனங்களுக்கான செலவு இயக்கிகளைக் கட்டுப்படுத்தி தீவிர சூழ்நிலையில், அவசர மற்றும் முக்கியமான நடவடிக்கைகளின் அளவுகோல்களின் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட்டு அதன் அடிப்படையில், கிடைக்கும் நிதிக்கு ஏற்ப பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

### உள்வாரியான வருமானம்

இப்பல்கலைக்கழகம் இவ்வருடத்தில் சுமார் 14.4 மில்லியன் இலங்கை ரூபாவை உள்வாரியான வருமானமாகப் பெற்றுள்ளது. இந்த வருமானம், மீண்டெழும் மானியத்திற்கும் மீண்டெழும் செலவினங்களிற்குமான இடைவெளியை நிரப்புவதற்குப் பயன்படுத்தப்பட்டது.

### மூலதன மானியங்கள்

பல்கலைக்கழகம் 2023 ஆம் ஆண்டிற்கான இலங்கை ரூபா 200 மில்லியனை திறைசேரியிலிருந்து மூலதன மானியமாகப் பெற்றுள்ளது. இந்தத் தொகையில் 130 மில்லியன் ரூபாவை நூலகக் கட்டடத் திட்டத்திற்காக ஒதுக்கிச் செலவிட்டுள்ளோம்.

இதற்க்கு மேலதிகமாக சிறப்பு ஒதுக்கீடுகளின் கீழ் 9.5 மில்லியன் ரூபா தொழிநுட்ப்பப்பிரிவிற்க்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும், 4.9 மில்லியன் ரூபா விளையாட்டுத்துறை மேம்பாட்டிற்கும், 1 மில்லியன் ரூபா சமூக நல்லிணக்க நடவடிக்கைகளுக்காகவும் யுர்நுயுனு மூலம் பெறப்பட்டது

### நிதி நிருவாகத் துறையின் கட்டமைப்பு

நிதி நிருவாகத்துறை இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. விநியோகம் மற்றும் கொடுப்பனவுப் பிரிவு.

இவை இரு உதவி நிதியாளர்கள் தலைமையில் வழிநடத்தப்படுத்தப்படுகின்றன. உதவி நிதியாளர் (விநியோகம்), களஞ்சிய விநியோகம், விநியோகச் சேவைகள் மற்றும் திறைசேரி அல்லாத பரிவர்த்தனைகளைக் கையாளுகின்றார். மேலும் உதவி நிதியாளர் (கொடுப்பனவு) சம்பளம் மற்றும் இதர அனைத்துக் கொடுப்பனவு-களையும் கையாளுகின்றார். கணக்குப் பிரிவை நிதியாளர் கையாளுகின்றார்.

உதவி நிதியாளர் (கொடுப்பனவு) இவ்வருட கார்த்திகைமாத நடுப்பகுதியிலிருந்து ஓய்வூதியத்திற்கான ஆயத்த விடுமுறையில் சென்றமையினால், நிதியாளர் கொடுப்பனவுப் பிரிவின் கடமைகளையும் கையாளுகின்றார்

### மென்பொருள் பயன்பாடுகள்

நிதி நிருவாகத்துறை தற்போது சம்பளம் மற்றும் கணக்குகளுக்கு ீயுஊமு மென்பொருளைப் பயன்படுத்துகிறது. தற்போது களஞ்சியச் செயற்பாட்டில் உள்ள மென்பொருளை மேம்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

நிலையான சொத்துகள் பதிவுமேம்படுத்தப்பட்ட விரிதாளில் (நஒஉநட) பராமரிக்கப்படுகின்றது.

ஒரு துணைச்செயற்பாடாக, பல்கலைக்கழகத்தின் நிதி நிருவாகத்துறையானது வவுனியாப் பல்கலைக்கழகத்தின் முக்கிய செயற்பாடுகளுக்கும் அதன் தொலைநோக்கு, பணிக் கூற்று மற்றும் இலக்கை அடைவதற்கான சேவையை வழங்குகின்றது.

## 9.2 நிதிக்கூற்றுகள்

### 2023 டிசம்பர் 31ம் திகதியில் நிதி நிலைமைக்கூற்று

| விபரங்கள் | குறிப்புகள் | 31 டிசம்பர் 2023 ல் | | 31 டிசம்பர் 2022ல் | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| சொத்துக்கள் | | | | | |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | | | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | 04 | 28,431,179.54 | | 17,936,336.15 | |
| வர்த்தகம் மற்றும் ஏனைய வருமதிகள் | 05 | 76,992,859.33 | | 69,563,086.89 | |
| இருப்பு | 06 | 14,811,217.15 | | 9,235,200.79 | |
| குறுகிய கால முதலீடுகள் | 07 | 16,815,115.69 | | 17,411,734.82 | |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | | 137,050,371.71 | | 114,146,358.65 |
| | | | | | |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | | | | |
| நீண்ட கால முதலீடுகள் | 08 | 20,010,243.00 | | 15,446,323.64 | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 09 | 1,660,022,530.72 | | 1,711,628,659.44 | |
| மூலதன நடைமுறை வேலை | 10 | 357,280,091.66 | | 216,418,835.37 | |
| மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | | 2,037,312,865.38 | | 1,943,493,818.45 |
| மொத்தச் சொத்துக்கள் | | | 2,174,363,237.09 | | 2,057,640,177.10 |
| | | | | | |
| பொறுப்புகள் | | | | | |
| நடைமுறைப் பொறுப்புகள் | | | | | |
| செலுத்த வேண்டியவை | 11 | 19,260,828.03 | | 22,777,997.73 | |
| அட்டுறுச் செலவுகள் | 12 | 1,280,199.99 | | 8,667,599.39 | |
| சுயநிதி கற்கைகள் மற்றும் திட்டங்கள் | 13 | 12,270,651.63 | | 6,581,915.60 | |
| மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் | | | 32,811,679.65 | | 38,027,512.72 |
| | | | | | |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | | | | | |
| செலுத்த வேண்டியவை | 14 | 2,197,339.11 | | 2,321,493.10 | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | | 129,379,660.97 | | 114,589,112.25 | |
| மட்டுப்படுத்தப்பட்ட நிதி | 15 | 25,072,278.62 | | 25,630,299.77 | |
| மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | | | 156,649,278.70 | | 142,540,905.12 |
| மொத்தப் பொறுப்புக்கள் | | | 189,460,958.35 | | 180,568,417.84 |
| | | | | | |
| மொத்த தேறிய சொத்துக்கள்/உரிமையாண்மை | | | 1,984,902,278.74 | | 1,877,071,759.26 |
| | | | | | |
| சொத்துக்கள்/ உரிமையாண்மை | | | | | |
| திரட்டப்பட்ட நிதியம் (மூலதன மானியம்) | 16 | 694,653,297.69 | | 694,653,297.69 | |
| திரட்டப்பட்ட மிகை / பற்றாக்குறை | 16A | 101,719,976.97 | | 27,112,150.78 | |
| மொத்த சொத்துக்கள்/ உரிமையாண்மை | | | 796,373,274.66 | | 721,765,448.47 |
| | | | | | |
| ஒதுக்கம் | | | | | |
| பொது ஒதுக்கம் | 17 | 1,142,959,589.04 | | 1,137,220,300.52 | |
| பிணைமுறி பொறுப்பு ஒதுக்கம் | 18 | 45,569,415.04 | | 18,086,010.27 | |
| நிகர மீள் மதிப்பீடு - ஒதுக்கம் | 18A | - | | - | |
| மூலதன ஒதுக்கம் | | - | | - | |
| மொத்த ஒதுக்கம் | | | 1,188,529,004.08 | | 1,155,306,310.79 |
| மொத்தத் தேறிய சொத்துக்கள்/ உரிமையாண்மை | | | 1,984,902,278.74 | | 1,877,071,759.26 |

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டம், பொருந்தக்கூடிய இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகள் (ளுடுீளுயுளு) மற்றும் பல்கலைக்கழக அமைப்பில் நிலவும் ஏனைய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க இந்த நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பதை நான் சான்றளிக்கின்றேன்.

Mr.L.Ram Ramanan
**Bursar**

L.Ram Ramanan
Bursar
University of Vavuniya
Sri Lanka.

N.Rajavisahan
Registrar
University of Vavuniya.
Sri Lanka.

இந்த நிதி அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் வழங்குவதற்கு பேரவை உறுப்பினர்கள் பொறுப்பு. இந்த நிதி அறிக்கைகள் இலங்கையின் வவுனியா பல்கலைக்கழகத்தின் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

Prof.T.Mangaleswaran
Accounting Officer
**Vice Chancellor**

**Prof.T.Mangaleswaran**
Vice - Chancellor
University of Vavuniya
Vavuniya, Sri Lanka.

**Council Member**
Signed on behalf
of the Council

***2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயல்திறன் அறிக்கை.***

| விபரங்கள் | குறிப்பு | டிசம்பர் 31, 2023 இல் முடிவடைந்து | டிசம்பர் 31, 2022 இல் முடிவடைந்தது |
|---|---|---|---|
| **வருமானம்** | | ***Rs.*** | ***Rs.*** |
| **பரிவர்த்தனை அல்லாத கொடுக்கல் வாங்கலிலிருந்து வருமானம் – நடைமுறை** | | | |
| மீண்டெழும் செலவினங்களுக்கான அரசு மானியம் | 19 | 632,000,000.00 | 544,000,000.00 |
| மாணவர் உதவித்தொகைகளுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மானியங்கள் | 22 | 44,540,000.00 | 31,916,000.00 |
| **பரிவர்த்தனை அல்லாத கொடுக்கல் வாங்கலிலிருந்து மொத்த வருமானம் – நடைமுறை** | | **676,540,000.00** | **575,916,000.00** |
| **பரிவர்த்தனை மூலமான கொடுக்கல் வாங்கலிலிருந்து வருமானம் - நடைமுறை** | | | |
| ஏனைய வருமானம் | 21 | 14,352,638.51 | 10,784,457.31 |
| வருமானம் / செலவுகள். (மட்டுப்படுத்தப்பட்ட நிதி) | 20 | - | - |
| பல்கலைக்கழக மேம்பாட்டு நிதி | | - | - |
| **பரிவர்த்தனை மூலமான கொடுக்கல் வாங்கலிலிருந்து மொத்த வருமானம் – நடைமுறை** | | **14,352,638.51** | **10,784,457.31** |
| **மொத்த வருமானம் – நடைமுறை** | | **690,892,638.51** | **586,700,457.31** |
| **பரிமாற்றம் அல்லாத கொடுக்கல் வாங்கலிலிருந்து வருமானம் – மூலதனம்** | | | |
| மூலதனச் செலவினங்களுக்கான அரசு மானியம் | 19A | 215,032,905.00 | 146,025,004.20 |
| பரிசு மற்றும் நன்கொடைகள் | 19B | 20,542,037.45 | 34,369,962.96 |
| **பரிவர்த்தனை அல்லாத கொடுக்கல் வாங்கலிலிருந்து மொத்த வருமானம் – மூலதனம்** | | **235,574,942.45** | **180,394,967.16** |
| **மொத்த வருமானம்** | | **926,467,580.96** | **767,095,424.47** |
| **செயற்பாட்டு செலவுகள் - நடைமுறை** | | | |
| ஆளணிக்கான ஊதியங்கள் | 23 | 450,926,816.40 | 434,332,179.32 |
| போக்குவரத்து | 23 | 1,386,280.75 | 437,005.41 |
| வழங்கல்களும் பயன்படுத்தப்பட்ட நுகர்பொருட்களும் | 23 | 30,432,248.22 | 13,944,141.05 |
| திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு | 23 | 15,512,983.04 | 7,879,707.30 |
| ஒப்பந்த சேவைகள் | 23 | 113,645,225.14 | 69,413,107.76 |
| ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் | 23 | 29,035,834.21 | 23,283,642.78 |
| மாணவர்களுக்கான நிதியுதவி | 24 | 44,540,000.00 | 31,916,000.00 |
| பதிவழிப்புக்கள் | 25 | 107,652.77 | 11,926.86 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 23 | 14,790,548.72 | 15,436,979.11 |
| **மொத்தத் தொழிற்பாட்டுச் செலவுகள்** | | **700,377,589.25** | **596,654,689.59** |
| **தொழிற்பாட்டு நடவடிக்கையல்லாத செலவுகள்** | | | |
| தேய்மானம் | 23 | 148,819,582.78 | 143,328,584.10 |
| **மொத்தத் தொழிற்பாட்டு நடவடிக்கையல்லாத செலவுகள்** | | **148,819,582.78** | **143,328,584.10** |
| **மொத்தச் செலவுகள்** | | **849,197,172.03** | **739,983,273.69** |
| **ஆண்டுக்கான தேறிய மிகை/(பற்றாக்குறை).** | | **77,270,408.93** | **27,112,150.78** |
| | | | |
| **தேறிய மிகை / (பற்றாக்குறை) தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து – தற்போதைய** | | **(9,484,950.74)** | **(9,954,232.28)** |
| **மிகை / (பற்றாக்குறை) தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து – மூலதனம்** | | **86,755,359.67** | **37,066,383.06** |

கணக்கியல் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் நிதி அறிக்கைகளின் அங்கமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

***31டிசம்பர், 2023 அன்று முடிவடைந்த ஆண்டிற்கான*** காசுப் பாய்ச்சல் ***அறிக்கை***

| விபர ங்கள் | குறிப்பு கள் | *2023* | *2022* |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து காசுப் பாய்ச்சல்** | | ***Rs.*** | ***Rs.*** |
| சாதாரண நடவடிக்கைகளில் இருந்தான மிகை /(பற்றாக்குறை). | | ***77,270,408.93*** | ***27,112,150.78*** |
| **காசில்லாத நடவடிக்கை** | | | |
| தேய்மானம் | *9* | *148,819,582.78* | *143,328,584.10* |
| பரிசு மற்றும் நன்கொடை | *19 B* | *(22,901,509.95)* | *(33,236,092.32)* |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | *23* | *14,790,548.72* | *15,436,979.11* |
| முந்தைய வருடச் சீராக்கம் | *17* | *(965,489.87)* | *(1,348,495.99)* |
| பதிவழிப்பு | *25* | *-* | *11.926.86* |
| ஆதன மற்றும் உபகரணங்களை அகற்றுதல் லாபம்/(இழப்பு) | *25* | *107,652.77* | *-* |
| மட்டுப்படுத்தப்பட்ட நிதிக்கு மாற்றம் | *20* | *-* | *-* |
| இருப்பு(அதிகரிப்பு)/ குறைப்பு | *06* | *(5,576,016.36)* | *(2,706,887.49)* |
| வருமதி (அதிகரிப்பு)/ குறைவு | *05* | *(7,429,772.44)* | *2,683,461.97* |
| பல்கலைக்கழக மேம்பாட்டு நிதிக்கு மாற்றம் | | | |
| செலுத்த வேண்டிய தொகையில் அதிகரிப்பு/(குறைவு). | *11,12* | *(10,904,569.10)* | *10,980,802.69* |
| திரும்பப்பெறக்கூடிய வைப்புத்தொகையில் அதிகரிப்பு/(குறைவு). | *14* | *(124,153.99)* | *463,500.00* |
| **இயக்க நடவடிக்கைகளில் இருந்து தேறிய காசுப்பாய்ச்சல்** | | ***193,086,681.49*** | ***162,725,929.71*** |
| | | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| ஆதன மற்றும் உபகரணங்கள் கொள்வனவு | *09* | *(74,429,596.88)* | *(100,217,859.43)* |
| | *17* | *4,042,195.65* | |
| ஆதன மற்றும் உபகரணங்கள் | | *10,000.00* | |
| நடமுறை மூலதன வேலையில்(அதிகரிப்பு)/ குறைவு | *10* | *(140,861,256.29)* | *(59,085,647.87)* |
| முதலீடுகள் | *07, 08* | *(3,967,300.23)* | *(22,553.507.60)* |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்** | | ***(215,205,957.75)*** | ***(181,857,014.90)*** |
| | | | |
| **நிதி நடவடிக்கைகளில் இருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| மூலதனச் செலவினங்களுக்கான அரசு மானியம் | *16* | *-* | *-* |
| மட்டுப்படுத்தப்பட்ட நிதிகள் | *15* | *(558,021.15)* | *17,758,096.37* |
| சுயநிதி படிப்புகள் மற்றும் திட்டங்கள் | *13* | *5,688,736.03* | *3,348,575.34* |
| பிணைப் பொறுப்பு நிதி | *18* | *27,483,404.77* | *4,765,361.04* |
| **நிதி நடவடிக்கைகளில் இருந்து தேறிய காசுப்பாய்ச்சல்** | | ***32,614,119.65*** | ***25,872,032.75*** |
| | | | |
| காசு மற்றும் காசிற்கு சமமான அதிகரிப்பு/(குறைவு). | | *10,494,843.39* | *6,740,947.56* |
| ஆண்டின் தொடக்கத்தில் காசும் காசிற்கு சமமானவையும் | *4* | *17,936,336.15* | *11,195,388.59* |
| **ஆண்டின் முடிவில் காசு மற்றும் காசிற்கு சமமானவை** | *4* | ***28,431,179.54*** | ***17,936,336.15*** |

**டிசம்பர் *31, 2023* இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேறிய சொத்துகளில் ஏற்பட்ட மாற்றங்களின் அறிக்கை**

**தொகை இலங்கை ரூபாயில்**

| விபரங்கள் | மூலதன மானியம் | திரட்டப்பட்ட மிகை / பற்றாக்குறை | பொது ஒதுக்கம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | பிணைப் பொறுப்பு ஒதுக்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| *31 டிசம்பர் 2021* நிலவரப்படி இருப்பு | 694,653,297.69 | - | 1,253,923,033.48 | (115,354,236.97) | 13,320,649.23 | 1,846,542,743.43 |
| மிகை / (பற்றாக்குறை) (குறிப்பு 26) | | 27,112,150.78 | | | | 27,112,150.78 |
| மட்டுப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து பரிமாற்றம் | | | | | | - |
| முந்தைய ஆண்டுச் சீராக்கம் | | | (1,348,495.99) | | | (1,348,495.99) |
| தேய்மானம் சரிசெய்தலுக்கான முந்தைய ஆண்டு ஏற்பாடு | | | | | | - |
| பிணைப் பொறுப்பு/இதர ஒதுக்கத்தில் அதிகரிப்பு | | | | | 4,765,361.04 | 4,765,361.04 |
| ஆண்டிற்கான மீள்மதிப்பீட்டுச் சீராக்கம் | | | | | | - |
| மூலதன மானியம் பெறப்பட்டது | | | | | | - |
| **31 டிசம்பர் 2022 நிலவரப்படி இருப்பு** | **694,653,297.69** | **27,112,150.78** | **1,252,574,537.49** | **(115,354,236.97)** | **18,086,010.27** | **1,877,071,759.26** |
| மிகை / (பற்றாக்குறை) (குறிப்பு 26) | | 77,270,408.93 | | | | 77,270,408.93 |
| மட்டுப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து பரிமாற்றம் | | | | | | - |
| முந்தைய ஆண்டுச் சீராக்கம் | | | (965,489.87) | | | (965,489.87) |
| தேய்மானம் சரிசெய்தலுக்கான முந்தைய ஆண்டு ஏற்பாடு | | | 4,042,195.65 | | | 4,042,195.65 |
| பிணைப் பொறுப்பு/இதர ஒதுக்கத்தில் அதிகரிப்பு | | | | | 27,483,404.77 | 27,483,404.77 |
| ஆண்டிற்கான மீள்மதிப்பீட்டுச் சீராக்கம் | | (2,662,582.74) | | 2,662,582.74 | | - |
| மூலதன மானியம் பெறப்பட்டது | | | | | | - |
| **31 டிசம்பர் 2023 நிலவரப்படி இருப்பு** | **694,653,297.69** | **101,719,976.97** | **1,255,651,243.27** | **(112,691,654.23)** | **45,569,415.04** | **1,984,902,278.74** |

***டிசம்பர் 31இ 2023 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பாதீடு மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவுத் தொகைகளின் ஒப்பீட்டு அறிக்கை***

| விளக்கங்கள் | பாதீடு | மேற்கொள்ளப் பட்ட செலவு |
|---|---|---|
| **வருமானம்** | | |
| மீண்டெழும் செலவினங்களுக்கான அரசு மானியம் | 672,000,000.00 | 632,000,000.00 |
| உள்வாரியான வருமானம் | 13,000,000.00 | 14,352,638.51 |
| மொத்த வருமானம் | **685,000,000.00** | **646,352,638.51** |
| **நடைமுறைச் செலவீனம்** | | |
| ஆளணிக்கான ஊதியங்கள் | 492,000,000.00 | 450,926,816.00 |
| போக்குவரத்துச் செலவுகள் | 1,465,000.00 | 1,386,281.00 |
| வழங்கல்களும் பயன்படுத்தப்பட்ட நுகர்பொருட்களும் | 31,265,000.00 | 30,432,248.00 |
| திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு | 15,870,000.00 | 15,512,983.00 |
| ஒப்பந்த சேவைகள் | 114,545,000.00 | 113,645,225.00 |
| ஏனைய மீண்டெழும் செலவுகள் | 29,855,000.00 | 29,035,834.00 |
| **தேய்மானத்திற்கு முன் மொத்த நடைமுறைச் செலவுகள்** | **685,000,000.00** | **640,939,387.00** |

ஊதிய செலவுக்கான ரூ.492 மில்லியன் இற்கு வவுனியா பல்கலைக்கழகத்திற்கு தேசிய பட்ஜெட் துறை ஒதுக்கீடு செய்தது பல்கலைக்கழகம் ரூ 452 மில்லியன் ரூபாயை முழுமையாக பயன்படுத்தியதுஊதியங்களுக்கான ஒதுக்கீட்டின் பயன்படுத்தப்படாத பாகத்திற்கு கீழ்காணும் விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன:

- அதிக மணிநேரங்களுக்கு பயண உரிமைகோரல் உட்பட வருகை விரிவுரையாளர் கட்டணத்தை நாங்கள் பட்ஜெட் செய்துள்ளோம். ஆனால் வருகை விரிவுரையாளர்களைக் கண்டுபிடிப்பதில் உள்ள சிரமங்கள் காரணமாக வரையறுக்கப்பட்ட வருகைப் பணியாளர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டனர்.
- பொருளாதார நிலைமைக்கு ஏற்ப, நாங்கள் பேராசிரியர் பதவிகளுக்கான பட்ஜெட்டினை தவிர்த்து உதவி பேராசிரியர்களை நியமித்தோம்.
- மேலாண்மை உதவியாளர் பணியிடங்களில் குறைபாடு இருந்ததால், மேலாண்மை பயிற்சியாளர்களை பயன்படுத்தி அவர்களுக்கு பயிற்சி ஊதியம் அளித்தோம்.
- சில கல்வி மற்றும் நிர்வாகத் துறைகள் பற்றிய பதவிகளை ஓய்வுக்கால பணியாளர்களை பணியிடங்களுக்காக நிரப்ப திட்டமிட்டிருந்தோம். ஆனால், திட்டமிட்ட நியமனங்களும் உண்மையான நியமனங்களும் இடையே வித்தியாசம் ஏற்பட்டுள்ளது.
- சில கல்வியாளர்கள் தங்கள் படிப்பு விடுப்பு நீட்டிக்கப்பட்டது, இதனால் அவர்கள் ஊதியம் பெறவில்லை.
- சில கல்வி மற்றும் ஒதுக்கப்பட்ட பணியாளர்கள் மற்ற நாடுகளுக்கு குடியேறுவதற்காக தங்கள் பணியிடங்களை விட்டு விலகினர்.

நாங்கள் 2022/2023 ஆண்டின் காலத்தில் இந்த பணியிடங்களை நிரப்பவென எதிர்பார்த்திருந்தோம். ஆனால், அவை அந்த காலத்திற்கு முன்னும் பின்னும் உருவாகியதால் சில பணியிடங்களை நிரப்ப முடியவில்லை.

## டிசம்பர் 31, 2023 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகள்

### 1. பொதுவான தகவல்

#### 1.1 சட்ட மற்றும் நிறுவனப் படிவம்

இலங்கையின் வவுனியாப் பல்கலைக்கழகம், என்பது 1978 ஆம் 16ம் இலக்க ஆண்டின் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் 2231.'.5 வர்த்தமானி அறிவித்தல் மூலம் 1 ஆகஸ்ட் 2021 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நிறுவப்பட்டது. இது இலங்கையின் வவுனியாவில், பம்பைமடுவில் அமைந்துள்ளது. பல்கலைக்கழகம் தற்போது 03 பீடங்களைக் கொண்டுள்ளது. வவுனியா பல்கலைக்கழகத்தின் நிதிச் செயற்பாடுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகமாக 1997 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை கணக்கிட்டு அறிக்கையிடப்பட்டது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு .'.ளுயுயு-டீகு.'.கு4.'.துகுே.'.2021 என்ற குறிப்பு எண்ணுடன் அக்டோபர் 4, 2021 திகதியிட்ட பல்கலைக்கழக மானியக் குழுக் கடிதத்தின் வழிகாட்டுதலின்படி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கீழ் ஆகஸ்ட் 1, 2021 முதல் 31 டிசம்பர் 2021 வரையிலான காலகட்டத்திற்கான கணக்கிட்டு அறிக்கையிடப்பட்டது. எனவே, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வவுனியா பல்கலைக்கழகத்தின் தொடக்க நிலுவைகளை 2022 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதிக்கு வழங்கியது.

#### 1.2 நோக்கம்

இலங்கையின் வவுனியாப் பல்கலைக்கழகம் வியாபாரக் கற்கைகள், பிரயோக விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பக் கற்கைகள் ஆகிய பீடங்களினூடாக உயர் கல்வியை வழங்குவதற்கும், மேம்படுத்துவதற்கும் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கும் நிறுவப்பட்டது.

#### 1.3 தயாரிப்புகளின் அடிப்படை

இலங்கை வவுனியாப் பல்கலைக்கழகத்தின் நிதிநிலை அறிக்கைகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப தயாரிக்கப்படுவதுடன், தொடர்ச்சியாக வரலாற்றுக்கிரய அடிப்படையானது பிரயோகிக்கப்படுகிறது. டிசம்பர் 31, 2022 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கையின் யாழ்ப்பணப் பல்கலைக்கழகத்தினால் ஒப்படைக்கப்பட்ட மீள்மதிப்புக் கணினி மயப்படுத்தப்பட்ட நிலையான சொத்து பதிவேட்டின் அடிப்படையில் வவுனியாப் பல்கலைக்கழகக் கணக்கறிக்கை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் குறிப்பிடப்பட்ட மாதிரிப்படிவங்களில் தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

#### 1.4 நிதி அறிக்கையிடும் காலம்

இலங்கையின் வவுனியாப் பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடும் காலம் 1 ஜனவரி 2023 முதல் 31 டிசம்பர் 2023 வரையிலான பன்னிரண்டு மாதங்களைக் குறிக்கிறது.

#### 1.5 வெளியீட்டிற்கான அங்கீகாரத் திகதி

இலங்கை வவுனியா பல்கலைக்கழகத்தின் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையானது 24.02.2024 அன்று நடைபெற்ற பல்கலைக்கழக பேரவையின் 29 வது கூட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டது.

### 2. குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம்

#### 2.1 மாணவர் கட்டணத்திற்கான கணக்கியல்

மாணவர் பதிவுக் கட்டணம், கல்விக் கட்டணம் மற்றும் மருத்துவக் கட்டணம் ஆகியவை பண அடிப்படையில் கணக்கிடப்படுகின்றன.

## 2.2 உதவித்தொகைக்கான மானியம்

மாணவர்களின் உதவித்தொகைக்கான மானியம்(டீரசளயசல), மீண்டெழும் மானியத்தின் கீழ் வருமானமாகக் காட்டப்படுகிறது, மேலும் 14.'.10.'.1987 திகதியிட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு .'.கு.'.டீருசு.'.87 என்ற கடிதத்தின் மூலம் பல்கலைக்கழக மானியக் குழுவால் இயக்கப்பட்டபடி, உதவித்தொகை செலுத்துவது நலச் சேவைகளின் செலவினமாகக் காட்டப்படுகிறது. மற்றும் நிதி செயல்திறன் அறிக்கையில் மாணவர்களுக்கு நிதி உதவி என ஒரு தனி உருப்படியாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் மஹாபொல புலமைப்பரிசில் நம்பிக்கை சபை ஆகியவை மஹாபொலவை முழுமையாகக் கையாளுகின்றன.

## 2.3 பணிக்கொடைக்கான ஏற்பாடு

1983 ஆம் ஆண்டின் 12ம் இலக்க பனிக்கொடைச் சட்டத்தின் அடிப்படையில் பணிக்கொடைக்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வெளியில் முதலீடு செய்வதற்கு திறைசேறி நிதி ஒதுக்கீட்டை வழங்காததால், பணிக்கொடைக்கான ஏற்பாடு முதலீட்டால் குறிப்பிடப்படவில்லை. ஜூன் 4, 2019 திகதியிட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை எண் 05.'.2019 இன் படி, 2019 ஆம் ஆண்டு ஜூன் 04 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கல்விசார் கொடுப்பனவுகள் மற்றும் மாதாந்த இழப்பீட்டுக் கொடுப்பனவுகள்(ஆஊயு) ஆகியவை 1983ம் ஆண்டு பணிக்கொடை ஏற்பாடுகளின் கீழ் பனிக்கொடைகளுக்கான ஏற்பாடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 2.4 பொருட்கள்

முதல் வந்தது முதல் வெளியே (குஐகுழு) முறையின் அடிப்படையில் சரியான சீராக்கத்திற்குப் பிறகு பொருட்கள் குறைந்த விலையிலும் தேறக்கூடிய நிகர பெறுமதியிலும் குறிப்பிடப்படுகின்றன. நுகர்வுப் பொருட்களை கையகப்படுத்துவதற்கும், அவற்றை இருக்கும் இடம் மற்றும் நிலைக்கு கொண்டு வருவதற்கும் ஆகும் செலவை உள்ளடக்கியது. பல்கலைக்கழகத்தின் நுகர்வுப் பொருட்களில் எழுதுபொருட்கள், நுகர்பொருட்கள், இரசாயனங்கள், பராமரிப்பு மற்றும் மருத்துவப் பொருட்கள் ஆகியவை அடங்கும்.

## 2.5 மூலதன இயற்கையின் செலவு

இப்பல்கலைக்கழகத்தின் நிரந்தர தன்மையுடைய சொத்துக்களை விரிவுபடுத்துதல் அல்லது மேம்படுத்துவதற்காகச் செய்யப்படும் செலவுகள் மூலதனச் செலவாகக் கருதப்படும்.

## 2.6 வருமான அங்கீகாரம்

வருமானமானது வருடத்தில் பல்கலைக்கழகத்தால் பெறப்பட்ட மற்றும் பெறக்கூடிய பொருளாதார நன்மைகள் அல்லது சேவைகளின் மொத்த வரவுகளை உள்ளடக்கியது மற்றும் நிகர சொத்துக்கள்.'.உரிமையாண்மைகளின் அதிகரிப்பைக் குறிக்கிறது. பல்கலைக்கழகம் ளுடுPளுயுளு 10 (பரிமாற்ற பரிவர்த்தனைகளுக்கான வருவாய்) மற்றும் SLPSAS 11 (பரிமாற்றம் அல்லாத மாற்றங்களுக்கான வருவாய்) ஆகியவற்றின் நிறுவப்பட்ட அளவுகோல்களைப் பின்பற்றி வருமானம் கணிப்பிடப்படுகின்றது. சுயநிதி படிப்புகளின் வருமானம் மற்றும் செலவுகள் பண அடிப்படையில் காட்டப்பட்டுள்ளன. பிற நடவடிக்கைகளின் நிகர வருமானம் நிதிச் செயல்திறனின் அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது, மேலும் நிலுவைகள் அந்தந்த நடவடிக்கைகளின் தொடக்க இருப்பில் சேர்க்கப்பட்டு, நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் சுயநிதி படிப்புகளாக காட்டப்பட்டுள்ளன.

## 2.7 செலவு அங்கீகாரம்

நிகழ்வு.ஂ.திட்டம்.ஂ.பொருள் வாரியாக செலவினங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வழிகாட்டலின் அடிப்படையில் வெவ்வேறு செலவினத் தலைப்புகளின் கீழ் பகுப்பாய்வு வகைப்படுத்தப்பட்டது. பட்டப்படிப்புக் கல்வியைப் பொறுத்தமட்டில் மேற்கொள்ளப்படும் அனைத்துச் செலவுகளும் அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டு, நிதிச் செயல்திறன் அறிக்கையில் காட்டப்பட்டுள்ளன.

## 2.8 காசுப்பாய்ச்சல் அறிக்கை

மறைமுக முறையின் கீழ் ளுடுீளுயுளு- 02 காசுப்பாய்ச்சல் முறைமையைப் பின்பற்றி காசுப்பாய்ச்சல் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

## 2.9 தேய்மானம்

சொத்தின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்தின் மீது ஒரு நேர்கோட்டின் அடிப்படையில் நிதிச் செயல்திறனின் அறிக்கையில் தேய்மானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பொறி மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து. நிலங்கள் தேய்மானம் செய்யப்படுவதில்லை. 05.ஂ.10.ஂ.95 இன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை எண் 649 மற்றும் ஆணையச் சுற்றறிக்கை எண். 09.ஂ.2022 ஆகியவற்றின் படி தேய்மானம் பின்வரும் விகிதங்களில் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| கட்டிடம் | *05%* |
| அலுவலகத் தளபாடங்கள் | *10%* |
| அலுவலகஉபகரணங்கள் மற்றும் விளையாட்டு பொருட்கள் | *20%* |
| ஆய்வகம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | *20%* |
| புத்தகங்கள் மற்றும் பருவகால சஞ்சிகைகள் | *20%* |
| வாகனம் | *20%* |
| அங்கிகள் | *20%* |
| தொலைபேசி | *20%* |
| பொறி மற்றும் இயந்திரங்கள் | *10%* |
| விளையாட்டுப் பொருட்கள்/உபகரணங்கள் | *25%* |

## 2.10 பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

அறிக்கையிடல் திகதியில் உள்ள அனைத்து இனங்காணப்பட்ட பொறுப்புகளும் நிதிநிலை அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன, மேலும் துல்லியமாகக் கணிப்பிட முடியாத பெறுமதி தவிர்ந்த் அனைத்துப் பொறுப்புகளுக்கும் போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## 1. நிதி அறிக்கைகள் தொடர்பான பிற குறிப்புகள்

## 3.1 தேய்மானம் மற்றும் பணிக்கொடைக்கான ஒதுக்கீடு

செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய பற்றாக்குறை - 2023 ஆம் ஆண்டிற்கான நடப்பு ரூ.9,484,850.74 ஆகும், இதில் காசில்லா உருப்படியான பணிக்கொடை தொகை ரூ.14,790,548.72 ஆகும். எனவே, தொழிற்பாட்டு மிகை - நடைமுறை ரூ.5,305,597.98

செயற்பாட்டு நடவடிக்கைகளின் தேறிய மிகை - 2023 ஆம் ஆண்டிற்கான மூலதனம் ரூ.86,755,359.67 ஆகும், இதில் காசில்லா உருப்படியான தேய்மானம் ரூ.148,819,582.78 ஆகும். எனவே, செயற்பாட்டு மிகை - மூலதனம் ரூ.235,574,942.45

### 3.2 இழப்புக்கள் மற்றும் பதிவழிப்பு

2023 ஆம் ஆண்டில் பேரவையின் அனுமதியுடன் பின்வரும் இழப்புக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுக் கணக்குகளில் பிரதிபலிக்கப்பட்டன. ரூ.107,652.77 இழப்புகள் பதிவழிப்புச் செய்யப்பட்டன.

### 3.3 அதிகரித்த செலவிலும் கூடிய வருமானம்

செலவுக்கு மேல் வருமானம் ரூ. 77,270,408.93 பின்வரும் காசில்லா உருப்படிகளை உள்ளடக்கியதால்ஏற்பட்டது.

1) நடைமுறையல்லாத சொத்துகளுக்கான தேய்மானம் ரூ. 148,819,582,.78

2) பணிக்கொடைக்கான ஏற்பாடு ரூ.14,790,548.72

### 3.4 சொத்துக்கள் மற்றும் அவற்றின் மதிப்பீட்டின் அடிப்படை

31.12.2021 ல் உள்ளவாறான தொடக்க நிலுவை மற்றும் தேய்மானத்திற்கான ஏற்பாடுகள் யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட புத்தகங்கள் மற்றும் பருவகால சஞ்சிகைகள் தவிர்ந்த அனைத்து சொத்து வகைகளும் ஆஜளு ஊயசவநச னுந ஊழளவய ஊழசிழசயவந ளுநசஎைஉநள (ீஎவ) டுவன ஆல் செய்யப்பட்ட சொத்துக்களின் உறுதிப்படுத்தல் மற்றும் மறுமதிப்பீட்டின் அடிப்படையில் சரிசெய்யப்பட்டன. 31.12.2014 அன்று நிலையான சொத்துகள் பதிவேட்டைத் தயாரிப்பதுடன், அவற்றின் சரிபார்ப்பு மற்றும் சொத்துகளின் மறுமதிப்பீட்டின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டது. மேலும், 2015, 2016, 2017, 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் யாழ் பல்கலைக் கழகக் கணக்குகளில் சேர்க்கப்பட்டு, வவுனியா பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டில் சேர்த்தவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

### 3.5 அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

நிதியாண்டுக்குப் பின் நடக்கும் எந்தவொருப் பொருண்மையான நிகழ்வுகளும் இல்லை என்பதனால் நிதிநிலை அறிக்கைகளில் மேலதிக வெளிப்பாடு தேவையில்லை.

### 3.6 தொடர்புடைய கட்சி கொடுக்கல் வாங்கல்கள்

வவுனியா பல்கலைக்கழகத்தின் ஊழியர்களுடனோ அல்லது சபை உறுப்பினர்களுடனோ இது தொடர்பான கட்சி கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் இல்லை.

### 1.7 நிகழும் நிகழத்தக்க சொத்துக்கள்

நிகழும் நிகழத்தக்க சொத்துக்கள் என்பது கடந்த கால நிகழ்வுகளிலிருந்து எழும் சாத்தியமான சொத்துகளாகும், அவை பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகளின் நிகழ்வு அல்லது நிகழாததன் மூலம் உறுதிப்படுத்தப்படும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வளாகமாக வவுனியாப் பல்கலைக்கழகம் ளுடுவு மொபிடெல் நிறுவனத்துடன் 2013 ஆம் ஆண்டு 10 வருட வாடகை ஒப்பந்தத்துடன் பல்கலைக்கழக வளாகத்தில் மொபிடெல் கோபுரத்தை அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் ஈடுபட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் திகதியுடன் ஒப்பந்தம் நிறைவடைந்துள்ளது. ளுடுவு ஆழடிவைநட உடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படாவிட்டாலும், 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1 ஆம் தேதி முதல் திருத்த விகிதத்துடன் ஒப்பந்தத்தை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, இன்னும் மொபிடெல் டவர் இயங்குகிறது பல்கலைக்கழக வளாகத்தின் கீழ். எனவே, ஆகஸ்ட் 1, 2023 முதல் டிசம்பர் 31, 2023 வரையிலான காலப்பகுதியில் எதிர்பார்க்கப்படும் வருமானம் 600,000.00 ரூபாய் பெறத்தக்கதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

<u>**நிதி நிலைமைக்கூற்றுக்கான குறிப்புகள்**</u>

| | 2023<br>*Rs.* | 2022<br>*Rs.* |
|---|---|---|
| **குறிப்பு 04 காசு மற்றும் காசுக்குச் சமமானவை** | | |
| வங்கி இருப்பு: மட்டுப்படுத்தப்பட்ட நிதி | 25,597,720.34 | 16,966,516.96 |
| வங்கி இருப்பு: திறைசேறி நிதி | 1,765,519.20 | 707,154.19 |
| முற்பண மீதி மற்றும் கையிருப்பிலுள்ள முத்திரை | 67,940.00 | 262,665.00 |
| | **28,431,179.54** | **17,936,336.15** |
| **குறிப்பு 05 வர்த்தகம் மற்றும் பிற வருமதிகள்** | | |
| ஊழியர்களுக்கான கடன்கள் மற்றும் முற்கொடுப்பனவு | 17,234,856.90 | 16,043,571.97 |
| விநியோகங்கள் மற்றும் சேவைகளுக்கான முற்கொடுப்பனவு | 21,115,860.15 | 31,988,310.69 |
| கட்டிடங்களுக்கான முற்கொடுப்பனவு | 6,866,994.23 | 13,766,994.23 |
| ஏனையவை | 31,775,148.05 | 7,764,210.00 |
| | **76,992,859.33** | **69,563,086.89** |
| **குறிப்பு 06 இருப்புக்கள்** | | |
| இருப்புக்கள் – பிரதான களஞ்சியம் | 11,584,319.42 | 8,291,418.48 |
| தினைக்களத்திலுள்ள இருப்புக்கள் | 3,226,897.73 | 943,782.31 |
| | **14,811,217.15** | **9,235,200.79** |
| **குறிப்பு 07 குறுகிய கால முதலீடுகள்** | | |
| தேசிய சேமிப்பு வங்கி - பிடிகாசு நிலையான வைப்பு | 16,815,115.69 | 17,411,734.82 |
| | **16,815,115.69** | **17,411,734.82** |
| **ஆண்டுக்கான அதிகரிப்பு/(குறைவு).** | **596,619.13** | **(17,411,734.82)** |
| **குறிப்பு 08 நீண்ட கால முதலீடுகள்** | | |
| என்.எஸ்.பி.பாலகிருஷ்ணன் நினைவு நிலையான வைப்பு | 600,000.00 | - |
| பாதுகாப்பு வைப்பு முதலீடு | 230,289.11 | 274,343.10 |
| நானாவித முதலீடு | 19,029,953.89 | 15,021,980.54 |
| துணைவேந்தர் நலன்புரி நிதி | 150,000.00 | 150,000.00 |
| | **20,010,243.00** | **15,446,323.64** |
| **ஆண்டுக்கான அதிகரிப்பு/(குறைவு).** | **(4,563,919.36)** | **(5,141,772.78)** |
| **குறிப்பு *10* நடந்து கொண்டிருக்கும் வேலை** | | |
| ஆரம்ப மீதி | 200,730,424.77 | 141,644,776.90 |
| மீள்நிர்மாண - வேலை நடந்து கொண்டிருக்கிறது | 140,861,256.29 | 59,085,647.87 |
| ஆண்டுக் காலப்பகுதிக்கான சேர்ப்பனவு | 15,688,410.60 | 15,688,410.60 |
| ஆண்டுக் காலப்பகுதிக்கான மாற்றம் (கட்டிடம்) | - | - |
| | **357,280,091.66** | **216,418,835.37** |
| **குறிப்பு *11* செலுத்த வேண்டியவை** | | |
| நானாவித கடன் வழங்குபவர்கள் | 18,527,645.69 | 22,032,048.80 |
| ஏனையவை | 733,182.34 | 745,948.93 |
| | **19,260,828.03** | **22,777,997.73** |

| | | |
|---|---|---|
| **குறிப்பு *12* அட்டுறுச் செலவுகள்** | | |
| அட்டுறுச் செலவுகள் | 980,199.99 | 8,367,599.39 |
| அட்டுறுக்களுக்கான ஏற்பாடுகள் | 300,000.00 | 300,000.00 |
| | **1,280,199.99** | **8,667,599.39** |
| **குறிப்பு *13* சுயநிதி கற்கைகள் மற்றும் திட்டங்கள் (செலுத்த வேண்டியவை)** | | |
| ஆங்கிலத்தில் உயர் டிப்ளமோ ***2023*** வருமானம் | 937,001.12 | - |
| ***MAG*** இன் செயல்பாட்டு ஊழியர்களுக்கு ஆங்கிலம் கற்பித்தல் | 442,765.00 | - |
| தொழில்முனைவோர் மற்றும் சிறு வணிக ***Mgt*** இல் சான்றிதழ் | 393,400.00 | - |
| அட்வ .ஊடக கல்வியறிவு மற்றும் பத்திரிகைக்கான சான்றிதழ் | 502,739.50 | - |
| அட்வ. பெண்கள் அதிகாரமளித்தல் சான்றிதழ் | 291,184.50 | - |
| ***UOV*** விளையாட்டு கவுன்சில் | 338,353.87 | - |
| அட்வ. விளையாட்டு பயிற்சி மற்றும் இயற்பியல் சான்றிதழ். கல்வி. நிரல் | 134,000.00 | - |
| தகவல் தொழில்நுட்ப மையம் - நெட்வொர்க்கிங்கில் குறுகிய படிப்பு | 12,500.00 | - |
| ***CDCE (***தொலைவு ***&*** தொடர் கல்வி மையம்.) வருமானம் | 170,616.06 | - |
| ***'***உணவு கையாளுபவர்களுக்கு நல்ல சுகாதாரம்' குறித்த சான்றிதழ் படிப்பு | 500.00 | - |
| ஆசிரியர்களுக்கான ஆங்கில மொழி கற்பித்தலில் சான்றிதழ் கற்கைநெறி | - | 367,083.00 |
| *ICICVC* – வருமானம் | 6,053,035.81 | 1,551,847.82 |
| *VCARS* – வருமானம் | - | 16,768.50 |
| *M.E.D (Dev.Fund -Batch IV)* வருமானம் | - | 170,616.06 |
| *VCIRS* – வருமானம் | - | 414,200.79 |
| வன்னி தொழில் சந்தை *2018* வருமானம் | - | 25,000.00 |
| ஆய்வு மாநாடு- *F/* வணிகக் கற்கைகள் *(RCBS)* | - | 24,160.17 |
| சர்வதேச ஆய்வு மாநாடு-வவுனியாப் பல்கலைக்கழகம் *2021* | 519,509.29 | 61,495.00 |
| பகிடிவதை மற்றும் *SGBV*யை எதிர்த்துப் போராடுவதற்கான தலையீடுகள் | - | 28,900.26 |
| உதவித்தொகை திட்டம் -பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | 575,000.00 | (50,000.00) |
| தகுதியான மாணவர்களுக்கு உதவித்தொகை | 350,796.48 | 252,015.00 |
| வவுனியாப் பல்கலைக்கழகம் நல்லிணக்க மையத்திற்கான வருமானம் | | 464,820.00 |
| தொழில் வழிகாட்டல் பட்டறை | - | 233,680.00 |
| நிலப்பரப்பு மற்றும் பசுமைச் சூழலின் வளர்ச்சி | 260,000.00 | 135,000.00 |
| மூலிகை மற்றும் இயற்கை பூங்கா திட்டத்தை நிறுவுதல் | 391,950.00 | 391,950.00 |
| ஆய்வு மாநாடு- பிரயோக விஞ்ஞானம் *(RARS 2022)* | - | 7,769.00 |
| குறைபாடுகளுக்கான ஆதரவு மையம்- வருமானம் | 177,300.00 | 576,000.00 |
| *M.E.D (*மேம்பாட்டு நிதி -தொகுப்பு *VI)* வருமானம் | - | 1,851,200.00 |
| ஆய்வு மாநாடு- *F/TS (RCA*தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப *-2022)* வருமானம் | - | 93,600.00 |
| வெள்ளி விழா கொண்டாட்டம் *FAS* | | (34,190.00) |
| ஆஸ்திரேலிய சமூகம் - யூனி நிதி திட்ட ஸ்பான்சர்ஷிப் | 520,000.00 | - |
| *ECO* சுற்றுலா வருமானம் | 200,000.00 | - |
| | **12,270,651.63** | **6,581,915.60** |
| **ஆண்டுக்கான அதிகரிப்பு/ குறைவு** | **5,688,736.03** | **3,348,575.34** |

***நிதிநிலை அறிக்கைக்கான சொத்து, பொறி மற்றும் உபகரணங்களுக்கான குறிப்புக்கள் - 2023***

***குறிப்பு 09 சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் சொத்து, மற்றும் உபகரணங்களின் கிரயம்***

| சொத்துக்கள் | 01.01.2023 இன் தொடக்க மீதி | சேர்ப்பனவு | பரிசு மற்றும் நன்கொடைகள் | செயற்பாட்டில் உள்ள வேலையிலிருந்து சேர்த்தல் | மீள்நிர்மணத்திலிருந்தான சேர்ப்பனவு | அகற்றல் | 31.12.20223 இன் இறுதி மீதி |
|---|---|---|---|---|---|---|---|
| காணிகள் | 85,500,000.00 | - | - | - | - | | 85,500,000.00 |
| கட்டிடங்கள் | 1,742,563,575.64 | - | - | - | 30,007,070.19 | | 1,780,570,645.83 |
| விளையாட்டு உபகரணங்கள் | 3,230,366.25 | 2,015,550.00 | 6,233,015.00 | - | - | 12,000.00 | 11,466,931.25 |
| அலுவலக தளபாடங்கள் | 76,547,950.22 | 11,300,392.75 | 1,770,870.00 | - | - | 295,817.56 | 89,323,395.41 |
| அலுவலக உபகரணங்கள் | 100,838,084.64 | 12,705,382.83 | 1,530,300.00 | - | - | 244,965.00 | 114,828,802.47 |
| ஆய்வகம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 300,429,704.77 | 7,871,725.63 | 11,066,124.95 | - | - | 1,903,519.11 | 317,464,036.24 |
| பொறி மற்றும் இயந்திரங்கள் | 21,235,450.00 | 2,038,605.00 | 2,301,200.00 | - | - | - | 25,575,255.00 |
| புத்தகங்கள் மற்றும் பருவகால சஞ்சிகைகள் | 28,276,860.58 | 840,870.48 | - | - | - | 5,191.64 | 29.112.539.42 |
| மோட்டார் வாகனங்கள் | 26,235,509.98 | - | - | - | - | | 26,235,509.98 |
| அங்கிகள், பதக்கங்கள் | 154,750.00 | - | - | - | - | | 154,750.00 |
| தகவல் தொழில்நுட்ப அமைப்பு/மென்பொருள் | 350,000.00 | (350,000.00) | - | - | - | | - |
| தொலைபேசி (தொடர்பு) | 474,590.00 | - | - | - | - | 48,250.00 | 426,340.00 |
| **மொத்தம்** | **2,385,836,842.08** | **36,422,526.69** | **22,901,509.95** | **-** | **38,007,070.19** | **2,509,743.31** | **2,480,658,205.60** |

***சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் திரட்டப்பட்ட தேய்மானம்***

| சொத்துக்கள் | 01.01.2023 இன் தொடக்க மீதி | சேர்ப்பனவு | சீராக்கம் | 31.12.2023 இன் இறுதி மீதி |
|---|---|---|---|---|
| காணிகள் | - | - | - | - |
| கட்டிடங்கள் | 355,411,012.36 | 81,628,136.67 | - | 437,039,149.03 |
| விளையாட்டு உபகரணங்கள் | 2,748,188.31 | 716,586.23 | 12,000.00 | 3,452,774.54 |
| அலுவலக தளபாடங்கள் | 32,649,560.28 | 7,978,583.89 | 200,797.92 | 40,427,346.25 |
| அலுவலக உபகரணங்கள் | 65,744,519.98 | 11,935,246.84 | 223,649.18 | 77,456,117.64 |
| ஆய்வகம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 158,081,072.90 | 42,247,728.94 | 1,902,201.80 | 198,426,600.04 |
| பொறி மற்றும் இயந்திரங்கள் | 11,585,191.94 | 2,275,460.25 | - | 13,860,652.19 |
| புத்தகங்கள் மற்றும் பருவகால சஞ்சிகைகள் | 23,046,948.33 | 1,063,507.15 | 5,191.64 | 24,105,263.84 |
| மோட்டார் வாகனங்கள் | 24,499,012.76 | 918,456.29 | - | 25,417,469.05 |
| அங்கிகள், பதக்கங்கள் | 51,131.09 | 30,950.00 | - | 82,081.09 |
| தகவல் தொழில்நுட்ப அமைப்பு/மென்பொருள் | - | - | - | - |
| தொலைபேசி (தொடர்பு) | 391,544.69 | 24,926.52 | 48,250.00 | 368,221.21 |
| **மொத்தம்** | **674,208,182.64** | **148,819,582.78** | **2,392,090.54** | **820,635,674.88** |

***சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் தேறிய புத்தக மதிப்பு***

| சொத்துக்கள் | ஆரம்ப மீதி 01.01.2023 இன் படி | இறுதி மீதி 31.12.2023 இன் படி |
|---|---|---|
| காணிகள் | 85,500,000.00 | 85,500,000.00 |
| கட்டிடங்கள் | 1,387,152,563.28 | 1,343,531,496.80 |
| விளையாட்டு உபகரணங்கள் | 482,177.94 | 8,014,156.71 |
| அலுவலக தளபாடங்கள் | 43,898,389.94 | 48,896,049.16 |
| அலுவலக உபகரணங்கள் | 35,093,564.66 | 37,372,684.83 |
| ஆய்வகம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 142,348,631.87 | 119,037,436.20 |
| கருவிகள் மற்றும் இயந்திரங்கள் | 9,650,258.06 | 11,714,602.81 |
| நூலகப் புத்தகங்கள் மற்றும் பருவகால சஞ்சிகைகள் | 5,229,912.25 | 5,007,275.58 |
| மோட்டார் வாகனங்கள் | 1,736,497.22 | 818,040.93 |
| அங்கிகள் | 103,618.91 | 72,668.91 |
| தகவல் தொழில்நுட்ப அமைப்பு/மென்பொருள் | 350,000.00 | - |
| தொலைபேசி | 83,045.31 | 58,118.79 |
| **மொத்தம்** | **1,711,628,659.44** | **1,660,022,530.72** |

***குறிப்பு 14 செலுத்த வேண்டியவை***

| | | |
|---|---|---|
| ***மீளச்செலுத்த வேண்டிய வைப்புத்தொகை*** | | |
| *பாதுகாப்பு வைப்பு (பணியாளர்கள்)* | 239,339.11 | 280,993.10 |
| *ஆய்வுகூடம். வைப்பு* | 1,828,000.00 | 1,900,500.00 |
| *மீளச்செலுத்த வேண்டிய சிற்றுண்டிச்சாலை வைப்பு* | 130,000.00 | 140,000.00 |
| | **2,197,339.11** | **2,321,493.10** |

***குறிப்பு 15 மட்டுப்படுத்தப்பட்ட நிதி மற்றும் விசேட நிதி***

| | | |
|---|---|---|
| *அபிவிருத்தி நிதி* | 4,593,938.23 | 1,652,062.30 |
| *மீள்சுழற்சிச் சேமிப்பு முதலீட்டு வட்டி* | 1,435,836.21 | 1,336,662.64 |
| *பரிசுகள் மற்றும் நன்கொடைகள்* | 4,640,911.64 | 4,640,911.64 |
| *துணைவேந்தர் நல நிதி* | 1,032,053.37 | 588,928.37 |
| *மட்டுப்படுத்தப்பட்ட நிதி (பிடிகாசு) 15.1* | 13,369,539.17 | 17,411,734.82 |
| | **25,072,278.62** | **25,630,299.77** |
| ***ஆண்டுக்கான அதிகரிப்பு/ குறைவு*** | **(558,021.15)** | **17,758,096.37** |

15.1 - மட்டுப்படுத்தப்பட்ட நிதி (பிடிகாசு)

2021 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் கட்டிட நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தற்போது நடைபெற்று வரும் திட்டங்களுக்குத் பிடிகாசு செலுத்த வேண்டிய பணம் யாழ்.பல்கலைக்கழகத்தினால் காசோலை மதிப்பு 17,411,734.82 ரூபாயாக வழங்கப்பட்டது. மேலும் இது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் ஒப்படைக்கப்பட்ட 31.12.2021 இல் விசாரணை இருப்பில் சேர்க்கப்படவில்லை. எனவே, வவுனியாப் பல்கலைக்கழகம் பிடிகாசு பணத்தை ஏற்றுக்கொள்வதற்கு வரையறுக்கப்பட்ட நிதியின் ஊடாக கணக்குப் புத்தகங்களில் உள்ளீடுகளைச் செய்துள்ளது. இந்தத் பிடிகாசு தொகை முக்கியமாக இரண்டு கட்டிடங்களைக் கொண்டுள்ளது, அதாவது தகவல் தொழில்நுட்ப மையக் கட்டிடம் மற்றும் நூலகக் கட்டிடம். பல்கலைக்கழகம் 2023 ஆம் ஆண்டுக்கான தகவல் தொழில்நுட்ப மையக் கட்டிடத்தின் பிடிப்புத் தொகை 4,042,195.65 ரூபாயை வெளியிட்டது. வெளியிடப்பட்ட தொகை மீண்டும் பொது இருப்புக்கு மாற்றப்பட்டது.

| | | |
|---|---|---|
| ***குறிப்பு 16 திரட்டிய நிதி (மூலதன மானியம்)*** | | |
| *செலவிடப்பட்ட மூலதன மானியம்* | 571,212,955.03 | 571,212,955.03 |
| *செலவழிக்கப்படாத மூலதன மானியம்* | - | - |
| *மூலதன செலவினத்திற்கான பங்களிப்பு* | 66,711,175.30 | 66,711,175.30 |
| *மூலதனப் பெறுகை* | 56,729,167.36 | 56,729,167.36 |
| | **694,653,297.69** | **694,653,297.69** |
| ***ஆண்டுக்கான அதிகரிப்பு/ குறைவு*** | - | - |
| ***16A திரட்டப்பட்ட மிகை /(பற்றாக்குறை)*** | | |
| *ஆரம்ப மீதி* | 27,112,150.78 | - |
| *நடப்பு ஆண்டு மீதி* | 77,270,408.93 | 27,112,150.78 |
| *தேய்மானம் சரிசெய்தலுக்கான முந்தைய ஆண்டு ஏற்பாடு* | (2,662,582.74) | - |
| | **101,719,976.97** | **27,112,150.78** |
| ***குறிப்பு 17 பொது ஒதுக்கம்*** | | |
| *ஆரம்ப மீதி* | | |
| *அதிக வருமானம்/செலவுகள் (மிகை)* | 1,252,574,537.49 | 1,253,923,033.48 |
| | 4,042,195.65 | |
| *முந்தைய ஆண்டுச் சீராக்கம்* | (965,489.87) | (1,348,495.99) |
| ***நெகிழ்த்தலுக்கு முன் மீதியை நிறைவு செய்தல்*** | **1,255,651,243.27** | **1,252,574,537.49** |
| *மூலதனக் குறைப்பு -17.2* | *- 17.2* (115,354,236.97) | (115,354,236.97) |
| *காலத்தின் போது அகற்றப்பட்ட சொத்துகளுக்கான மூலதனக் குறைப்பு மதிப்பு* | 2,662,582.74 | |
| ***இறுதி மீதி*** | **1,142,959,589.04** | **1,137,220,300.52** |

17.2 மூலதனக் குறைப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மறுமதிப்பீட்டின் மூலம் பெறப்பட்ட மூலதனக் கழிப்பிற்கு வெளிப்படுத்த மறுமதிப்பீட்டு இருப்பு எதுவும் இல்லை. இந்த மூலதனக் குறைப்புத் தொகையான ரூபா 115,354,236.97 சொத்துக்களால் உடைக்கப்படவில்லை, எனவே வவுனியா பல்கலைக்கழகத்தின் 27வது பேரவை 2016 டிசம்பர் 31 இல் நடைபெற்ற மறுமதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் விகிதாச்சாரத்தின் அடிப்படையில் தனிநபர் சொத்துக்களைப் பங்கிட்டுக் கொள்ள ஒப்புதல் அளித்தது. , அந்தந்த மூலதனக் குறைப்பு மதிப்பும் கணக்குப் புத்தகங்களில் இருந்து அகற்றப்படும்.

| | | |
|---|---|---|
| ***குறிப்பு 18 கடன்முறிப் பத்திர ஒதுக்கம்*** | | |
| *பெறப்பட்டது* | 14,097,660.81 | 14,097,660.81 |
| | 996,799.15 | - |
| *பெற வேண்டியது* | 21,682,325.75 | - |
| *பெறப்பட்ட வட்டி* | 8,792,629.33 | 3,988,349.46 |
| | **45,569,415.04** | **18,086,010.27** |
| ***ஆண்டுக்கான அதிகரிப்பு/ குறைவு*** | **27,483,404.77** | **4,765,361.04** |
| ***குறிப்பு 18A மறுமதிப்பீட்டு – ஒதுக்கம்*** | - | - |
| *மறுமதிப்பீட்டு ஆரம்ப மிகை* | | |
| *மறுமதிப்பீட்டு தேறிய பற்றாக்குறை* | - | |

| ***நிதி செயல்திறன் அறிக்கைக்கான குறிப்புகள்*** | ***2023 Rs.*** | ***2022 Rs.*** |
|---|---|---|
| ***குறிப்பு 19 – மீண்டெழும் செலவிற்கான மானியம்*** | | |
| *திறைசேறியிலிருந்து மானியம்* | 632,000,000.00 | 544,000,000.00 |
| | **632,000,000.00** | **544,000,000.00** |
| ***குறிப்ப்பு 19 A - மூலதன மானியம்*** | | |
| *மேலதிகமாணவர் சேர்க்கை* | - | 54,811,091.20 |
| *மூலதன மானியம்* | 199,590,000.00 | 77,500,000.00 |
| *கலை நூலகத்தின் நிலையை வலுப்படுத்துவதற்கான மானியம் மற்றும் IT செலவிடப்பட்டது* | - | 13,713,913.00 |
| | 9,500,000.00 | - |
| | 4,942,905.00 | - |
| | 1,000,000.00 | - |
| | **215,032,905.00** | **146,025,004.20** |
| ***குறிப்ப்பு 19 B – நன்கொடை*** | | |
| *மூலதனச் செலவு ஆஸ்திரேலிய மருத்துவ உதவி அறக்கட்டளையில் இருந்து சேகரிக்கப்பட்டது* | - | 2,004,397.50 |
| *நலம் விரும்பிகளிடமிருந்து புத்தகங்கள் நன்கொடை* | - | 286,705.00 |
| *நலம் விரும்பிகளிடமிருந்து உபகரணங்கள் நன்கொடை* | - | 50,000.00 |
| *ஆஸ்திரேலிய மருத்துவ உதவி அறக்கட்டளையின் நன்கொடை* | - | 1,315,000.00 |
| *நலம் விரும்பிகளிடமிருந்து ஆய்வகம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் நன்கொடை* | - | 46,500.00 |
| *AHEAD இலிருந்து நன்கொடை – சொத்துக்கள்* | 15,013,177.45 | 30,667,360.46 |
| *அறக்கட்டளையின் நன்கொடையிலிருந்து சொத்துக்களை நன்கொடையாக வழங்குதல்* | 4,440,360.00 | - |
| *உபகரணம் நன்கொடை. சுவாமி விவேகானந்தர் கலாச்சார மையம் மூலம்* | 538,500.00 | - |
| *உபகரணம் நன்கொடை. by Dr.M. மலரவன்* | 177,000.00 | - |
| *மாணவர்களால் சைக்கிள் நன்கொடை* | 18,000.00 | - |
| *நூலகப் புத்தகங்களுக்கான நன்கொடை* | 40,000.00 | - |
| *மலையக அபிவிருத்திச் சங்கத்தின் நன்கொடை* | 315,000.00 | - |
| | **20,542,037.45** | **34.369,962.96** |
| ***குறிப்பு 20 - ஏனைய செயற்பாடுகளின் தேறிய வருமானம்/(செலவுகள்).*** | - | - |
| ***குறிப்பு 21- பிற வருமானம்*** | | |
| *கடன்கள் மற்றும் முன்பணத்திலிருந்து வட்டி* | 657,918.18 | 635,375.57 |
| *சொத்துக்களிலிருந்து வாடகை* | 1,556,725.00 | 1,009,840.00 |
| *பதிவு கட்டணம் – பட்டதாரிகளுக்கானது* | 3,968,118.33 | 4,320,536.74 |
| *நானாவித பற்றுச்சீட்டுக்கள்* | 786,150.00 | 455,250.00 |
| *மருத்துவ கட்டணம்* | 57,600.00 | 654,650.00 |
| *தேர்வு கட்டணம் – பட்டதாரிகளுக்கானது* | 1,049,300.00 | 821,750.00 |
| *நூலகத் தண்டப்பணம்* | 808.00 | 4,510.00 |
| *வழக்கொழிந்த பொருட்களின் விற்பனை* | 6,000.00 | 82,745.00 |
| *விடுதி வாடகை* | 5,496,300.00 | 2,799,800.00 |
| *பாதுகாப்பு வைப்புக்கான வட்டி (சி.இ.பி.)* | 71,379.00 | - |
| *சேவை செய்ய முடியாத பொருள் விற்பனை* | 102,340.00 | - |
| | **14,352,638.51** | **10,784,457.31** |

**குறிப்பு 22 மாணவர்களுக்கு நிதி உதவிக்கான மானியம்**

| | | |
|---|---|---|
| உதவித்தொகை (Bursary) | 44,540,000.00 | 31,916,000.00 |
| மஹாபொல திறைசேரி கூறு | - | - |
| மஹாபொல அறக்கட்டளை கூறு | - | - |
| | **44,540,000.00** | **31,916,000.00** |

| | | |
|---|---|---|
| **குறிப்பு 23 செயற்பாட்டுச் செலவுகள் (விவரங்கள் 23A இல் காட்டப்பட்டுள்ளன)** | | - |
| ஆளணிக்கான ஊதியங்கள் | 450,926,816.40 | 434,332,179.32 |
| போக்குவத்து | 1,386,280.75 | 437,005.41 |
| வழங்கல்கள் | 30,432,248.22 | 13,944,141.05 |
| பராமரிப்புக்கள் | 15,512,983.04 | 7,879,707.30 |
| ஒப்பந்த சேவைகள் | 113,645,225.14 | 69,413,107.76 |
| தேய்மானம் | 148,819,582.78 | 143,328,584.10 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 14,790,548.72 | 15,436,979.11 |
| ஏனைய செயற்பாட்டு செலவுகள் | 29,035,834.21 | 23,283,642.78 |
| | **804,549,519.26** | **708,055,346.83** |

**குறிப்பு 24 மாணவர்களுக்கு நிதி உதவிக் கொடுப்பனவு**

| | | |
|---|---|---|
| உதவித்தொகை (Bursary) | 44,540,000.00 | 31,916,000.00 |
| மஹாபொல திறைசேரி கூறு | - | - |
| மஹாபொல அறக்கட்டளை கூறு | - | - |
| | **44,540,000.00** | **31,916,000.00** |

**குறிப்பு 25 நட்டங்கள் மற்றும் பதிவழிப்புக்கள்**

| | | |
|---|---|---|
| பதிவழிப்புக்கள் | - | 11,926.86 |
| ஆலை மற்றும் உபகரணங்களை அகற்றுதல் லாபம்/(இழப்பு) | 107,652.77 | - |
| | **107,652.77** | **11,926.86** |

**குறிப்பு 26 மிகை/(பற்றாக்குறை)**

| | | |
|---|---|---|
| மிகை /(பற்றாக்குறை) | 77,270,408.93 | 27,112,150.78 |
| மட்டுப்படுத்தப்பட்ட நிதிக்கு மாற்றுதல் | - | - |
| | **77,270,408.93** | **27,112,150.78** |

# பொருளின் அடிப்படையில் உண்மையான செலவு - 2023

| பொருள் குறியீடு | | பொருளின் தலைப்பு | உண்மையான செலவு - 2023 | உண்மையான செலவு - 2022 |
|---|---|---|---|---|
| *1* | | **தனிப்பட்ட ஊதியங்கள்** | **450,926,816** | **434,332,179** |
| | *1101* | *(I)* சம்பளம் மற்றும் ஊதியம் | 180,148,121 | 169,425,401 |
| | | *(II)* ஓய்வூதியம் *08%* | 18,607,014 | 18,135,456 |
| | | *(III) UPF* பங்களிப்பு | 24,777,668 | 24,159,948 |
| | | *(IV)* ஊ.ரு.நிதி பங்களிப்பு *03%* | 8,679,312 | 8,458,330 |
| | | *(V)* பணிக்கொடை கொடுப்பனவுகள் | 2,292,324 | 3,475,548 |
| | *1102* | மேலதிக நேர மற்றும் விடுமுறை கொடுப்பனவுகள்; | 1,658,102 | 1,602,935 |
| | *1103* | *(I) 20%* சிறப்பு சம்பளம் | 24,449,022 | 24,182,639 |
| | *1103* | *(II)* மாதாந்திர கொடுப்பனவு | 13,102,412 | 12,942,561 |
| | *1106* | வருகைதரும் விரிவுரை கட்டணம் (பிரயாணம் உட்பட) | 1,849,535 | 1,475,768 |
| | *1108* | மாதாந்திர இழப்பீடு கொடுப்பனவு *(MCA)* | 24,120,766 | 24,519,560 |
| | *1109* | *(I)* ஏனைய கொடுப்பனவுகள் (தலைவர்கள், பீடாதிபதி ஏனையவை.) | 947,710 | 868,298 |
| | | *(II)* உபகாரப்படி | 1,514,300 | 1,657,811 |
| | *1112* | *(I)* வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு *(CLA)* | 20,405,492 | 20,205,492 |
| | | *(II)* தற்காலிகக் கொடுப்பனவு | 599,203 | 357,689 |
| | *1115* | கல்வி உதவித்தொகை | 97,864,036 | 94,418,952 |
| | *1117* | *35%* ஆய்வு கொடுப்பனவு | 23,256,450 | 22,123,360 |
| | *1128* | போக்குவரத்து கொடுப்பனவு | 5,846,801 | 5,556,875 |
| | *1131* | தொடர்பு கொடுப்பனவு | 808,548 | 765,557 |
| *2* | | **பயணச் செலவுகள்** | **1,386,281** | **437,005** |
| | *1201* | போக்குவரத்துச் செலவுகள் (உள்நாட்டு) | 1,386,281 | 256,343 |
| | *1202* | போக்குவரத்துச் செலவுகள் (வெளிநாட்டு) | - | 180,662 |
| *3* | | **பொருட்கள் மற்றும் நுகர்பொருட்கள் (வழங்கல்கள்)** | **30,432,248** | **13,944,141** |
| | *1301* | எழுதுபொருள் மற்றும் அலுவலகத் தேவைகள் | 6,887,861 | 3,589,630 |
| | *1302* | எரிபொருள் மற்றும் லூப்ரிகண்டுகள் | 7,609,993 | 5,597,575 |
| | *1303* | சீருடை (தையல் கட்டணங்கள் உட்பட) | 533,513 | 266,795 |
| | *1304* | (ஐ) இயந்திர மற்றும் மின்சார பொருட்கள் | 1,548,883 | 1,481,764 |
| | | (ஐஐ) இரசாயனங்கள் மற்றும் கண்ணாடிப் பொருட்கள் | 2,554,712 | 265,555 |
| | *1305* | மருத்துவ பொருட்கள் | 1,145,822 | 1,074,266 |
| | *1309* | ஏனைய பொருட்கள் | 10,151,465 | 1,668,557 |
| *4* | | **சிறிய திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு** | **15,512,983** | **7,879,707** |
| | *1401* | சிறிய பழுது மற்றும் பராமரிப்பு | | |
| | | *(I)* வாகனங்கள் | 3,221,720 | 1,635,418 |
| | | *(II)* இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 2,196,193 | 2,467,589 |
| | *1402* | சிறிய பழுது மற்றும் பராமரிப்பு | | |
| | | *(I)* கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்பு | 9,505,124 | 3,712,750 |
| | | *(II)* தளபாடங்கள் | 488,980 | 41,320 |
| | | *(III)* மற்றவை | 100,967 | 22,630 |
| *5* | | **ஒப்பந்த சேவைகள்** | **113,645,225** | **69,413,108** |

| | | | | |
|---|---|---|---|---|
| | *1501* | போக்குவரத்து | 30,961 | - |
| | *1502* | **தொடர்பு** | | |
| | | *(i)* தொலைத்தொடர்பு | 12,616,792 | 10,811,386 |
| | | *(ii)* தபால் கட்டணம் | 506,748 | 405,706 |
| | *1503* | **பயன்பாடுகள்** | | |
| | | *(i)* மின்சாரம் | 40,023,472 | 17,470,397 |
| | | *(ii)* நீர் | 52,337 | 40,518 |
| | *1504* | **வாடகை மற்றும் வாடகைக் கட்டணங்கள்** | 760,500 | 1,651,588 |
| | *1505* | **வீதங்கள் மற்றும் உள்ளூர் வரிகள்** | 597,578 | 519,829 |
| | *1506* | **அச்சிடுதல் மற்றும் விளம்பரம்** | | |
| | | *(i)* அச்சிடுதல் | 3,182,420 | 2,173,040 |
| | | *(ii)* விளம்பரம; | 956,904 | 755,167 |
| | *1507* | **ஏனைய ஒப்பந்த சேவைகள்** | | |
| | | *(i)* பாதுகாப்பு சேவைகள் | 21,208,648 | 22,120,067 |
| | | *(ii)* சுத்தம் செய்யும் சேவைகள் | 27,826,896 | 12,907,960 |
| | | *(iii)* ஏனைய சேவைகள் | 881,970 | 557,450 |

| | | | | |
|---|---|---|---|---|
| *6* | **ஏனைய தொடர் செலவுகள்** | | **29,035,834** | **23,283,643** |
| | *1601* | சந்தா, பங்களிப்பு மற்றும் உறுப்பினர். கட்டணம் – உள்ளூர் | 100,000 | 100,000 |
| | *1602* | சந்தா பங்களிப்பு மற்றும் உறுப்பினர். கட்டணம் – வெளிநாட்டு | 138,070 | 144,818 |
| | *1607* | கல்வி ஆய்வு மற்றும் வெளியீடுகள் | - | - |
| | *1608* | சுய அபிருத்தி -பயிற்சிப் பட்டறைகள் மற்றும் கருத்தரங்கு | 331,660 | 392,000 |
| | | கருத்தரங்குகள் | | - |
| | *1609* | மற்ற அமைப்பிற்கு மானியங்கள். (இதர தொடர். மானியங்கள்) | 786,150 | 316,965 |
| | *1610* | விருதுகள் மற்றும் இழப்பீடுகள் | - | 10,000 |
| | *1611* | நட்டங்கள் மற்றும் பதிவழிப்புக்கள் | - | - |
| | *1612* | விடுமுறை ஆணைச்சீட்டுக்கள் மற்றும் பருவகாலச் சீட்டுக்கள் | 186,250 | 293,990 |
| | *1613* | சிறப்பு சேவைகள் | | |
| | | *(I)* கணக்காய்வு கட்டணம் | - | 300,000 |
| | | *(II)* பேரவை உறுப்பினர் கட்டணம் போன்றவை, | 2,101,935 | 2,215,968 |
| | *1614* | *(I)* பட்டமளிப்பு | - | - |
| | *1615* | பொழுதுபோக்கு செலவுகள் | 1,149,580 | 1,813,125 |
| | *1616* | *(I)* ஏனைய தொழிற்பாட்டு செலவுகள் | 2,861,261 | 6,087,697 |
| | | *(II)* வங்கி கட்டணங்கள் | - | - |
| | *1617* | தேர்வு செலவுகள் | 14,499,500 | 8,401,835 |
| | *1618* | முதுகலை ஆய்வு மற்றும் உதவித்தொகை | 9,000 | - |
| | *1619* | மாணவர்களுக்கான பாடப் பொருள் மற்றும் கற்றல் தர மேம்பாடு | - | - |
| | *1620* | தொழில் பயிற்சி, நடைமுறை மற்றும் தொழில் வழிகாட்டுதல் | 52,000 | - |
| | *1621* | ஊழியர்கள். ஆசிரியர்கள், நிர்வாகி மற்றும் பிற பணியாளர்களுக்கான பயிற்சி | 180,000 | 1,857,915 |
| | *1622* | மாணவர் மேம்பாட்டு முயற்சிகள் மற்றும் சமூக உறவுகள் | 27,000 | - |
| | *1623* | பல்கலைக்கழக விளையாட்டு நடவடிக்கைகள் | 6,382,443 | 1,130,900 |
| | *1624* | மாணவர் நலன், பணியாளர்கள் நலன், மாணவர் பேரவைகள் மற்றும் சமூக நல்லிணக்கம் | 69,740 | - |
| | | பணியாளர் நலன் மற்றும் மருத்துவக் காப்பீடு | - | - |
| | *1625* | கூட்டுறவுத் திட்டமிடல், ஆளுகை மற்றும் எல்லை | - | - |
| | | சொத்துக் கடனுக்கான வட்டி மானியம் | 161,245 | 218,430 |
| **பல்கலைக்கழக துணை கொடுப்பனவு மற்றும் வருவாய் மூலம் செலவு** | | | **640,939,388** | **549,289,784** |

| | | |
|---|---|---|
| **ஏனைய மீண்டெழும் செலவுகள்** | **190,012,571** | **114,957,604** |

## 10. தலைமை கணக்காய்வாளர் அறிக்கை

**வவுனியாப் பல்கலைக்கழகம் - 2023**

**--------------------------------------------------**

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

வவுனியாப் பல்கலைக்கழகத்தின் ("பல்கலைக்கழகம்") 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கை தகவல்களினை உள்ளடக்கிய குறிப்புக்கள் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
பல்கலைக்கழகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன.

எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,
- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்
- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெற வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்திற்காக வெளிநாட்டிற்குச் சென்றிருந்த பல்கலைக்கழகத்தின் கல்விசார் உத்தியோகத்தரொருவர் புலமைப்பரிசில் முடிவடைந்து கடமைக்கு சமூகமளிக்கவில்லை. எனினும், பல்கலைக்கழகமானது ரூபா.20,186,636 தொகையான முறிப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பல்கலைக்கழகமானது 2023 மே மாதத்திலிருந்து 12 மாதங்களினுள் பிணைமுறி ரூபா.14 மில்லியன் நிலுவையை தீர்ப்பதற்கு வேண்டியிருந்தது. பல்கலைக்கழகமானது 2024 மே அளவில் நிலுவை மீதி செலுத்தவில்லையெனில் சட்ட நடவடிக்கை எடுக்கும் முயற்சியில் ஈடுபடும். | நிலுவைகளை உரிய காலப்பகுதியினுள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத்தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XX இன் பிரிவு 03 | (i) கல்விசார் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்வதை உறுதிப்படுத்தாமல் ரூபா.281,364,692 தொகையான சம்பளங்கள் மற்றும் படிகள் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக முறைமையிலுள்ள கல்விசார் உத்தியோகத்தர்களிள் வருகைப்பதிவேட்டில் கைச்சாத்திடாதமையானத பொதுவான முறையாகவுள்ளது. எனினும், சம்பளத்தைச் செலுத்தவதற்கு முன்னர் ஒவ்வொரு கல்விசார் உத்தியோகத்தர்களின் முடிவடைந்த வேலை தொடர்பாக திணைக்களத் தலைவர்களின் சான்றிதழ்கள் பெறப்பட்டது. | பல்கலைக்கழகத்தின் தாபன விதிக்கோவையுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2015 நவம்பர் 17 இன் 15/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | பரீட்சை நடைபெற்று 3 மாதங்களுக்குள் பெறுபேறுகள் வெளியிட வேண்டியிருந்த போதிலும் பல்கலைக்கழகத்தின் 03 பீடங்களில் நடைபெற்ற பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுவதற்காக 04 மாதங்கள் தொடக்கம் 08 மாதங்கள் வரையான காலதாமதம் மீளாய்வாண்டின் போது ஏற்பட்டது. | இந்தக் தாமதமானது சிரேஸ்ட கல்விசார் உத்தியோகத்தர்கள் போதியளவில் இல்லாதிருந்ததுடன் இரண்டாந்தர மதிபீட்டில் ஏற்பட்ட காலதாமதத்திலாலும் ஏற்பட்டதாகும். 3 மாதங்களினுள் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுற்றறிக்கையுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 77,270,409 தொகையான மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 27,112,151 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 50,158,258 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் மீண்டெழும் மானியங்கள் மற்றும் பரிமாற்றத்தகாத நடவடிக்கையிலிருந்தான மீண்டுவரும் வருமானம் மற்றும் மூலதன வருமானம் அதிகரித்தமையே முன்னேற்றத்திற்கு காரணங்களாகவிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்திட்டங்கள் மற்றும் மூலதன வேலைகளில் ஏற்பட்ட காலதாமதம்.**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிர்மாண உடன்படிக்கையின் பிரகாரம் 2021 ஒக்தோபர் 24 அளவில் பூர்த்தியாக்கப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட நூலகக் கட்டிடத்தின் நிர்மாணத்திற்காக ரூபா 341,591,680 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், இத் திகதிவரை நிர்மாணம் பூர்த்தியாக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டிருந்தது. | கொரோனாப் பரவல் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதாரச் சிக்கல் மற்றும் நிர்மாண மூலப்பொருட்களில் எதிர்பார்க்காதளவில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பதுடன் 85% இற்கு அதிகமான வேலைகள் இத்திகதி வரை பூர்த்தியடைந்திருந்தது. | காலதாமதமில்லாமல் வேலையினைப் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 10.1 அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஆளும் அதிகாரசபையின் அவதானிப்புகள்

திகதி: 2024 செப்டெம்பர் 9
கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
தேசிய கணக்காய்வு அலுவலகம்,
இல. 306/72,
பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை,
இலங்கை.

**குறிப்பு: 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12வது பிரிவின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

2023 மே 31 ஆம் திகதிய என்பிசீஜீ/வீஎன்/டி/யூஓவீ/1/23 ஆம் இலக்க குறிப்புரையுடன் கூடிய தெளிவுபடுத்தல் 2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அறிக்கை பின்வருமாறு வழங்கப்படுகிறது:

**2.2.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

**(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தாபன விதிக்கோவை. XX ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவு**

- அரச பல்கலைக்கழக முறைமையில் உள்ள பொதுவான நடைமுறை, கல்விசார் பதவியணியினர் வருகைப் பதிவேட்டில் கையொப்பமிடுவதில்லை. எனினும், ஒவ்வொரு கல்விசார் பதவியணி உறுப்பினர்களும் தங்கள் சம்பளத்தை வழங்குவதற்கு முன்பு, அவர்கள் செய்த பணி குறித்து, துறைத்தலைவர்களின் சான்றிதழ் பெறப்படுகிறது. பல்கலைக்கழகம் ஏற்கனவே கல்விசார் பதவியணியினருக்கான பணி நெறிமுறையை நிறுவியுள்ளதுடன் பணி விதிமுறைக்கேற்ப, கல்விசார் பதவியணியினர் செய்யும் பணியைக் கண்காணிப்பதற்குப் பொறுப்புக்கூறல் மாதிரியை உருவாக்கும் பணியிலும் அஃது ஈடுபட்டுள்ளது.

**(ஆ) 2015 நவம்பர் 17 ஆம் திகதிய 15/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை, பரீட்சை முடிந்த மூன்று மாதங்களுக்குள் முடிவுகள் வெளியிடப்படவேண்டும்.**

- சிரேஷ்ட கல்விசார் பதவியணியினர் இல்லாததும் இரண்டாவது மதிப்பெண்ணிடுவதில் ஏற்படும் காலதாமதமும் ஒட்டுமொத்தத் தாமதத்தை ஏற்படுத்துகின்றன. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் 3 மாதங்களுக்குள் தேர்வு முடிவுகளை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**2.2 ஏனைய விடயங்கள்**

**(அ) புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்துக்காக வெளிநாடு சென்றிருந்த பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியினரில் ஒருவர் புலமைப்பரிசில் முடிந்த பின்னர் கடமைக்குத் திரும்பவில்லை. எனினும், பல்கலைக்கழகம் ரூபா.20,186,636.00 பெறுமதியான பிணைமுறியை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.**

- திருமதி துஷ்யந்தி லவன் அவரது கற்கை விடுமுறை தொடர்பான பிணைமுறி மற்றும் உடன்படிக்கையை மீறியதால் 2022.11.22 இல் அவரது பதவி வெறிதாக்கப்பட்டதுடன் ரூபா.22,183,434.90 ஐ நிலுவையாகச் செலுத்துமாறும் கோரப்பட்டார்.
- அவர் மேற்படி தொகையைத் தனது பல்கலைக்கழகச் சேமலாபநிதி, பணிக்கொடை ஆகியவற்றிலிருந்தும் அவருடைய மூன்று மாதச் சம்பளமான ரூபா.3,740,645.00 ஐயும் அறவிடுவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளார். மேற்படி நிலுவைத்தொகையைப் பல்கலைக்கழகம் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மொத்த நிலுவைத் தொகை மிக அதிகமாக உள்ளதால், தவணை முறையில் ஐந்தாண்டுகளுக்குள் நிலுவைகளைச் செலுத்துவதற்கு அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார். பல்கலைக்கழகப்பேரவை அவரது கோரிக்கையை ஏற்காததுடன் ப.மா.ஆ. உள்ளகக் கணக்காய்வுச் சுற்றறிக்கை 03/2022 இன்படி ஓராண்டுக்குள் அவர் நிலுவைகளைச் செலுத்தவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தது. அதன்பின்னர் அவர் ரூபா.4,000,000.00 ஐ 2023.11.03 மற்றும் 2024.04.30 ஆகிய தேதிகளில் இருதவணைகளில் செலுத்தியபின் நிலுவை மீதி ரூபா.14,442,789.00 ஆகவுள்ளது.
- 2024.07.27 இல் நடைபெற்ற பல்கலைக்கழகப்பேரவையின் 32வது கூட்டத்தில் ஓராண்டு காலம் முடிந்துவிட்டதாகக் குறிப்பிட்டு, அவரிடமிருந்து மீதி நிலுவைகளை அறவிடுவதற்கு எடுக்கப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பாக, சட்ட ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்கு முடிவு செய்யப்பட்டது.

**(ஆ) நூலகக் கட்டடப் பணிகள், 2021 ஒக்டோபர் 24 இல் பூர்த்தி செய்யப்படவேண்டும் என்ற உடன்படிக்கையின்படி ரூபா.341,591,680.00 என்ற ஒப்பந்தத்தொகைக்கு தொடங்கப்பட்டன. எனினும் இதுவரை நிருமாணப் பணிகள் பூர்த்தியடையாமை அவதானிக்கப்பட்டது.**

- நூலகக் கட்டடப்பணிகள் சென்ற்ரல் எஞ்ஜினியரிங் சேர்விஸஸ் (பிறைவேற்) லிமிற்றட் எனும் ஒப்பந்தகாரர்மூலம் மேற்கொள்ளப் படுகின்றது. இதுவொரு மூன்று மாடிக்கட்டடமாகும். தரைத்தளத்தையும் இரண்டாவது மாடியிலுள்ள தளத்தையும் பல்கலைக்கழகம் ஏற்கனவே பயன்படுத்தத்தொடங்கிவிட்டது. தரைத்தளத்தில், நூலகம் 2023 பெப்ரவரி முதல் இயங்கி வருகிறது. இரண்டாவது தளத்தில், கலாச்சார நிலையம், தரவுத்தரவாத நிலையம், பல்கலைக்கழக வணிக இணைப்பு, விரிவுரை மண்டபங்கள் போன்றவை 2023 நவம்பர் முதல் இயங்கி வருகின்றன. முதலாவது தளத்தின் பணிகள் 2024 ஆகஸ்டில் நிறைவடைந்தது. முழுக்கட்டடமும் 2024 செப்டெம்பர் முதல் பயன்பாட்டுக்குவரும். கொரோனா நோய்த்தொற்று – 2019, நாட்டிலேற்பட்ட பொருளாதார நெருக்கடியால் ஒதுக்கப்பட்ட பணம் உரிய நேரத்தில் பல்கலைக்கழகத்துக்குக் கிடைக்கப்பெறாமை, கட்டுமானப் பொருள்களின் விலையில் ஏற்பட்ட திடீர் உயர்வு, சந்தையில் அத்தகைய பொருள்களின் பற்றாக்குறை போன்றன மேற்படி வேலைகளின் தாமதத்துக்கான முக்கிய காரணங்களாகும்.

பேராசிரியர் அருளம்பலம் அற்புதராஜா
துணைவேந்தர்
வவுனியாப் பல்கலைக்கழகம்.